# பாரதி விழா

சிறப்பு மலர்

1972

JL
O7 INBR
N72
14.4.82.

# பாரதி விழா

1088

## சிறப்பு மலர்

270/91

1972

பாரதியார் சங்கம்
"அவ்வையகம்"
லாயிட்ஸ் சாலை, சென்னை - 86

## காணிக்கை

மகாகவி பாரதியாரால் பெரிதும் மதிக்கப்பட்டு, அமர கவிதைகளால் போற்றப் பட்ட தேச பக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப் படும் வாரத்திலேயே, பாரதியாரின் ஐம்பத்தோராவது நினைவு நாள் விழா கொண்டாடப் படுவதும், இவ்விழாவையொட்டி இம்மலர் வெளியிடப்படுவதும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

பாரதியாரும் வ. உ. சி-யும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள்; உற்ற நண்பர் களாகவும் இருந்தவர்கள். தென்பாண்டிச் சீமையான திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்த இவர்கள் இருவரும் சிறந்த தேச பக்தர்கள்; திலகர் வழி நின்று தேசத் தொண்டு ஆற்றியவர்கள். மற்றும் பல விஷயங்களிலும் இவர்களிடையே ஒற்றுமை இருந்தது. (முதல் சந்திப்பிலேயே தம்மைச் சோழனாகவும் பாரதியாரைக் கம்பனாகவும் சிதம்பரம் பிள்ளையவர்களைக் கருதச் செய்ததென்றால் இவர்களுடைய தோழமையின் சிறப்பைக் குறித்து மேலும் விரித்து உரைக்க வேண்டிய அவசியமில்லை.)

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வ. உ. சி. பிறந்து வாழ்ந்த தூத்துக்குடியி லேயே பாரதப் பிரதமர் இந்திரா காந்தியவர்களால் அப்பெருமகனின் திருவுருவச்சிலை முழு அளவில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அவர் உருவம் பொறிக்கப்பட்ட தபால் தலை வெளியிடப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி துறைமுகத்தின் முதல் சேவுத்துறை அவர் பெயரால் வழங்கப்படும் என்று பிரதமர் தெரிவித்திருக்கிறார். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரவர்களும் சென்னை நகரிலுள்ள ஜார்ஜ் டவுன் வ. உ. சி. நகர் என இனி அழைக்கப்படும் என அறிவித்திருக்கிறார்.

பாரதியாருக்கு நூற்றாண்டு விழா வரும் போதும் சிதம்பரம் பிள்ளையவர் களுக்கு இப்போது ஏற்பட்டிருப்பது போல், பல சின்னங்களும் சிறப்புகளும் ஏற்படும் என நாம் நம்பலாம்.

நம் பாரதியார் சங்கத்தை நிறுவிய அமரர் கல்கி பல்லாண்டுகளுக்கு முன்பே, பாரதியார் பிறந்த எட்டையபுரத்தில் மணிமண்டபமொன்று கட்டியிருப்பது அனைவருக் குந் தெரியும். அவர் வாழ்ந்த சென்னை மாநகரில் மணி மண்டபமொன்று ஏற்படாதிருக் கும் குறையைப் போக்க நம் சங்கம் முயன்று வருகிறது. தமிழக அரசு நம் சங்கக் கட்டிடத்துக்காக வழங்கவிருக்கும் நிலத்தில் பாரதி நூற்றாண்டு வருவதற்குள் ஒரு மணிமண்டபம் நம் சங்கத் தலைவரின் பெரு முயற்சியால் நிச்சயம் எழும்பிவிடும் என நாம் நம்புகிறோம்.

இந்நன்னம்பிக்கையோடு கூடிய புனித நினைவுகளுடன் இம்மூன்றாம் மலரை, பாரதி யன்பர்களுக்குப் படைக்கிறோம்.

அன்புள்ள,
**பாரதியார் சங்கத்தினர்.**

145482

# பாரதியார் சங்கம்

**BHARATHI MEMORIAL SANGAM**

[ பதிவு செய்யப்பட்டது ]

270/41



**1972**

## ஆண்டறிக்கை

"அவ்வை அகம்,"
139-B, லாயிட்சு சாலை,
சென்னை-86

## பாரதியார் சங்கம் - 1972-73

தலைவர்

நா. மகாலிங்கம்

செயலாளர்

தி. க. ஷண்முகம், எம். எல். சி.

பொருளாளர்

ஆடிட்டர் பி. கல்யாணசுந்தரம்

செயற்குழுவினர்

ம. பொ. சிவஞானம் எம்.எல்.சி.

ஏ. வி. மெய்யப்ப செட்டியார்

ஏ. ஜி. வேங்கடாச்சாரி

கி. சந்திரசேகரன்

நாரண. துரைக்கண்ணன்

எஸ். வி. சகஸ்ரநாமம்

பித்துக்குளி முருகதாஸ்

இராணிப்பேட்டை கல்யாணராமையர்

கி. இராஜேந்திரன் (கல்கி)

அழ. வள்ளியப்பா

எஸ். டி. சுந்தரம்

மா. ஜெயசீலன், பெங்களூர்

கு. சா. கிருஷ்ணமூர்த்தி

புத்தனேரி. ரா. சுப்பிரமணியம்

இரா. ஜனார்த்தனம்

எம். எஸ். கமலா

லலிதா பாரதி

## 1971 ஆம் ஆண்டறிக்கை

1971 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் தேதி சென்னை-28, சாமியர்ஸ் சாலை எண்-38 இல் உள்ள சங்கத்தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் இல்லத்தில் மாலை 6 மணிக்கு சங்கத்தின் செயற்குழுக் கூட்டமும், 6-30 மணிக்கு சங்கத்தின் பேரவைக் கூட்டமும் நடைபெற்றன. சங்கத் தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

### அறிஞர்களுக்கு அஞ்சலி

பாரதியார் சங்கத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்த பெரியார்களில் ஒருவரும், பாரதியார் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், பாரதி நினைவு அறக்கட்டளையின் நிர்வாக அறங் காவலராகப் பணி புரிந்தவரும், பாரத கலாசாரத்தின் முழு வடிவமாகத் திகழ்ந்த பண்பாளருமான தர்மரட்சாமணி திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் 30-9-70 இல் இறைவன் திருவடிகளில் சேர்ந்தமைக்கும், மகாகவி பாரதியாரால் "தம்பி" என அன்புடன் அழைக்கப் பெற்றவரும், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் அவர்களுடன் சிறை சென்றவரும், முதன் முதலாகப் பாரதியாரின் கண்ணன் பாட்டையும், தேசபக்தி ஊட்டும் நாட்டுப் பாடல்களையும், துணிவோடு வெளியிட்டவரும், "வருங் காலத்தில் பாரதியார் உலகம் போற்றும் மகாகவியாக விளங்குவார்" என்று தீர்க்க தரிசனத்தோடு குறிப்பிட்டவருமாகிய பழம்பெரும் தேச பக்தர் பரலி. திரு. சு. நெல்லையப்பர் அவர்கள் 28-3-71 இல் இறைவன் திருவடிகளில் சேர்ந்தமைக்கும் சங்கத்தின் சார்பில் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டன.

தணிக்கை செய்யப்பட்ட 1970 ஆம் ஆண்டு வரவு செலவு கணக்குகளையும், தணிக்கையாளரின் அறிக்கையையும் பேரவை ஏற்றுக் கொண்டது. தணிக்கையாளர் திரு. என். சி. இராஜகோபால் கம்பெனியாருக்கு சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டுக்கும் அவர்களையே தணிக்கையாளர்களாக இருக்க வேண்டி நியமனம் செய்யப்பட்டது. செயற்குழுவினர் தயாரித்த ஆண்டறிக்கையினையும் பேரவை ஆராய்ந்து ஏற்றுக் கொண்டது.

### புதிய செயற்குழுவினர்

சங்க விதிமுறைகள் 24 இல் குறிப்பிட்டபடி 1971-72 ஆம் ஆண்டுகளுக்கு புதிய செயற்குழுவினர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்:—திரு. நா. மகாலிங்கம்
செயலாளர்:—திரு. தி. க. ஷண்முகம் எம். எல். சி.
பொருளாளர்:—திரு. ப. கல்யாணசுந்தரம் (ஆடிட்டர்)

செயற்குழு உறுப்பினர்கள்:
திரு. ம. பொ. சிவஞானம்
திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரி
திரு. நாரண—துரைக்கண்ணன்
திரு. பித்துக்குளி முருகதாஸ்
திரு. கி. இராஜேந்திரன்
திரு. எஸ் டி. சுந்தரம்
திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி
திரு. கே. இராமமூர்த்தி
திருமதி. எம். எஸ். கமலா
திரு. ஏ. வி. மெய்யப்பன்
திரு. கி. சந்திரசேகரன்

திரு. எஸ். வி. சகஸ்ரநாமம்
திரு. இராணிப்பேட்டை கல்யாணராமையர்
திரு. அழ. வள்ளியப்பா
திரு. மா. ஜயசீலன் (பெங்களூர்)
திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியம்
திரு. இரா. ஜனார்த்தனம்
திருமதி. லலிதா பாரதி

## பாரதி விழா ஏற்பாடுகள்

1971 பாரதி விழா மகாகவி பாரதியார் மறைந்த 50 வது ஆண்டு நினைவு விழாவாக அமைவதால் இவ்வாண்டு விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்றும் மத்திய-மாநில அரசுகளின் உதவிகளைப் பெறவேண்டு மென்றும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்படி செப்டம்பர் 11, 12 தேதிகளில் சென்னை வாலாஜா சாலை கலைவாணர் அரங்கில் பாரதி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. 11-ஆம் தேதி காலை கடற்கரைச் சாலையிலுள்ள மகாகவி பாரதியின் சிலைக்கு சங்கத் தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்களும் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களும் சங்கச் செயற்குழுவினர் சூழ மாலை சூட்டி அஞ்சலி செய்தனர். மாலை 6 மணிக்கு செல்வி டி. கே. எஸ். மனோன்மணியின் இறை வணக்கத்துடனும், சங்கச் செயலாளர் திரு தி. க. ஷண்முகத்தின் பாரதி வாழ்த்துடனும் விழா தொடங்கியது. சங்கத் தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, முன்னாள் தமிழக முதல்வர் திரு எம். பக்தவத்சலனார் அவர்கள் தொடக்க உரையுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார்கள்.

## பரிசும் பாராட்டும்

வழக்கம் போல் இவ்வாண்டு பாட்டு, பேச்சு, கவிதை போட்டிகளிலும், பாரதியின் பொன்விழாவினை யொட்டி நடைபெற்ற கட்டுரைப் போட்டியிலும் வெற்றி பெற்ற மாணவ—மாணவியருக்கு மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்கள். சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் 'பாரதி மலர்-71' ஐ வெளியிட்டுச் சொற்பொழிவாற்றினார்கள். முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள், தர்மரட்சாமணி கே. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களின் திருவுருவப் படத்தையும், காங்கிரஸ் தலைவர் திரு. டி. செங்கல்வராயன் எம். பி அவர்கள் பழம் பெரும் தேசபக்தர் திரு பரலி சு. நெல்லையப்பர் அவர்களின் திருவுருவப் படத்தினையும் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்கள். திருமதி எம். எஸ். கமலா அவர்களின் நன்றியுரைக்குப் பின் கலைமாமணி எஸ். வி. சகஸ்ரநாமம் சேவா ஸ்டேஜ் குழுவினரின் 'பாஞ்சாலி சபதம்' கவிதை நாடகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## பாரதி பார்வையில்

12-9-71 காலை 9-30 மணிக்கு செல்வன் டி.கே. எஸ். கலைவாணன் பி. எஸ்ஸி.யின் இறைவணக்கத்துடன் கவியரங்கம் தொடங்கியது. மகாமதுர கவிஞர் திரு. வீ.வே. முருகேச பாகவதர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த டாக்டர் மெ. சுந்தரம் எம். ஏ. எம். லிட்., பி. எச். டி. அவர்கள் தலைமை தாங்கினார்கள். 'பாரதி பார்வையில்' என்னும் தலைப்பில் அவ்வையார், திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், சிவாஜி, தாயுமானார், இராமலிங்கர், திலகர், லஜபதிராய், மகாத்மாகாந்தி, வ. உ. சி., உ. வே. சாமிநாதய்யர், ஓவியர் மணி ரவிவர்மா ஆகிய பெருமக்களைப் பற்றி கவிஞர்கள் கு. சா. கிருஷ்ணமூர்த்தி, புத்தனேரி ரா. சுப்பிரமணியம், ஈரோடு தமிழன்பன், எழில் முதல்வன் எம்.ஏ., இரா. பூங்குன்றன் எம்.ஏ., நெல்லை அருள்மணி, தேவிதாசன் எம். ஏ., மதிவண்ணன், எழிலிறைவன், எஸ். டி. சுந்தரம், கு. மா. பாலசுப்பிரமணியம், தமிழ்



முடி, செல்வபாரதி ஆகியோர் சிறந்த கவிதைகளைப் பாடினர்.

பாரதியின் பொன்விழா நினைவாக, திருவாளர்கள் நாரண—துரைக்கண்ணன். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, புத்தனேரி ரா. சுப்பிரமணியம் ஆகியோர் தொகுத்து, வானதி பதிப்பகம் திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட்ட "சின்னஞ்சிறு கிளியே" என்னும் நூலினை, கலைமாமணி ஜெமினி கணேசன் அவர்கள் வெளியிட்டு உரை நிகழ்த்தினார்கள்.

## தமிழ் வளர்ந்துள்ளதா?

மாலை 5-30 மணிக்குப் பட்டி மன்றம் தொடங்கியது. கலைமாமணி நாரண-துரைக்கண்ணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, பொருளாதார நிபுணரும் தமிழக அரசு திட்டக் குழு உறுப்பினருமான டாக்டர் பா. நடராஜன் அவர்கள் தலைமையுரையாற்றினர். 'பாரதி போக்கில் தமிழ் வளர்ந்துள்ளதா?' என்னும் பொருளில் இரு வேறு கட்சியினர் வாதிட்டார்கள். 'வளர்ந்துள்ளது' என்னும் கட்சியில் திரு சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தலைமையில் திருமதி ஹா. கி. வாலம், திரு வி. எஸ். மணி, திரு இரா. சுராஜ், திரு பகீரதன், திரு அவ்வை நடராஜன் ஆகியோரும், 'வளரவில்லை' என்னும் கட்சிக்கு டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், எம். ஏ. அவர்கள் தலைமையில் திருமதி அரசு மணிமேகலை, திரு கே. இராமமூர்த்தி, திரு முருகசரணன், திரு இரா. ஜனார்த்தனம், திரு ஊ. ஜயராமன் ஆகியோரும் சிறந்த முறையில் வாதிட்டனர். இறுதியாக டாக்டர் பா. நடராஜன் அவர்கள் விரிவுரை நிகழ்த்தி 'வளர்ந்துள்ளது' என்னும் கட்சி வென்றதாகத் தீர்ப்புக் கூறினார்கள்.

திரு அழ. வள்ளியப்பா அவர்கள் நன்றி கூறியபின் கலைமாமணி கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் பாரதி கதையினை கதாகாலட்சேபமாக நிகழ்த்தினார்கள். நாட்டு வாழ்த்துடன் பாரதியின் பொன்விழா இனிது நடந்தேறியது. பாரதி கட்டுரைப் போட்டிக்கு வந்த நூற்றுக்கணக்கான கட்டுரைகளைப் படித்துப் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்து உதவிய திருவாளர்கள் நாரண - துரைக்கண்ணன், மீ. பா. சோம சுந்தரம், சுகி. சுப்பிரமணியம் ஆகியோருக்கும், பாரதி பாட்டுப் போட்டிக்கு நடுவர்களாக இருந்து தீர்ப்பு வழங்கிய திருவாளர்கள் தஞ்சை எம். தியாகரராஜன், வி. சோமசுந்தரம், திருமதி குருவாயூர் பொன்னம்மாள், வி. எஸ். ஞானஸ்கந்தன், என். சி. சௌந்தரவல்லி, தாழைக்குடி எஸ். அய்யாசாமி ஆகியோருக்கும், பாரதி பேச்சுப் போட்டிக்கு நடுவர்களாக இருந்து தீர்ப்பு வழங்கிய திருவாளர்கள் பேராசிரியர் நா. பாண்டுரங்கன் எம்.ஏ., ம. சீ. கிருஷ்ணமூர்த்தி பி.ஏ., பழனி கோபு பி. ஏ., நாரண-துரைக்கண்ணன், வி. எஸ். மணி. செல்வபாரதி, அவ்வை நடராசன் எம். ஏ., கே. இராமமூர்த்தி, புலவர் அ. அப்துல்கரீம் ஆகியோருக்கும், பாரதி கவிதைப் போட்டிக்கு நடுவர்களாக இருந்து தீர்ப்பு வழங்கிய திருவாளர்கள் சிலம்பொலி செல்லப்பன், புத்தனேரி ரா. சுப்பிரமணியம், ஈரோடு தமிழன்பன் ஆகியோருக்குப் சங்கத்தின் நன்றி உரித்தாகும்.

பாரதி விழாப் போட்டிகள் நடைபெறத் தமது உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தை இரண்டு நாட்கள் அன்புடன் தந்து உதவிய கோபாலபுரம் உயர்நிலைப் பள்ளி நிர்வாகத்தினருக்கு சங்கம் தனது இதயம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

மாணவ—மாணவியருக்குப் பரிசுகள் வழங்குவதற்காக, சங்கத்தின் வேண்டுகோளுக் கிணங்க, தாங்கள் வெளியிட்டுள்ள நூல்களை அன்புடன் தந்துதவிய அமுத நிலையம் சென்னை-14, ஸ்டார் பிரசுரம் சென்னை-5, இன்ப நிலையம் சென்னை - 4, பழனியப்பா சகோதரர்கள் சென்னை - 14, பாரதி பதிப்பகம் சென்னை - 17, மல்லிகை பதிப்பகம் சென்னை 17, மங்கள நூலகம்

சென்னை - 34. ஆகிய பதிப்பகங்களுக்கு சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி 'சின்னஞ் சிறு கிளியே' என்னும் பொன்விழா நூலினைத் தொகுத்துதவிய திருவாளர்கள் நாரண-துரைக்கண்ணன், புத்தனேரி சுப்பிரமணியம், அழ. வள்ளியப்பா ஆகியோருக்கும் அதனை ஆர்வத்தோடு வெளியிட்டு உதவிய வானதி பதிப்பக உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பாரதியின் பொன்விழா சிறப்பாக நடைபெற கலைவாணர் கலையரங்கினைத் தந்து, உடனிருந்து உதவிய கலையரங்க நிர்வாகிகளுக்குச் சங்கம் நன்றி கூறுகிறது. பாரதி மலர்-1971 சிறப்பான முறையில் வெளிவர விளம்பரங்கள் தந்து உதவிய தமிழக அரசு நிறுவனங்களுக்கும், மற்றும் தனிப்பட்ட நிறுவனங்களுக்கும், மலர்ப் பொறுப்பினை ஏற்றுப் பணிபுரிந்த திரு நாரண - துரைக்கண்ணன் அவர்களுக்கும், மலரை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய ஏஷியன் அச்சகத்தாருக்கும் சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

1971 இல் பாரதியின் பொன்விழா சிறப்பாக நடைபெற ஆதரவு காட்டி நன்கொடை வழங்கிய பெருமக்களின் பெயர்கள் தனியே குறிப்பிடப் பெற்றுள்ளன. அவர்கள் அனைவருக்கும் சங்கம் நன்றி கூறுகிறது.

பாரதியார் சங்கம் நிறைவேற்றிய தீர்மானங்களின்படி சங்கத்துக்கென ஒரு கட்டிடம் கட்டுவதற்கு பத்து (10) கிரவுண்டுக்கு குறையாத அளவு நிலம் தமிழக அரசு கொடுத்துதவ வேண்டுமென்று சங்கத்தலைவர் திரு நா. மகாலிங்கம் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தமிழக முதல்வர் அவர்கள் மிகுந்த அன்போடு அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதாகவும், அரசுக்குரிய காலி இடங்களை தேர்வு செய்து அறிவித்தால் அதனை உடனே பாரதியார் சங்கத்திற்குப் பட்டா செய்து கொடுப்பதாகவும் கூறியிருப்பதற்கு சங்கம் தனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

1971 பாரதி விழா சிறப்புற நிகழ எல்லா வகையிலும் ஒத்துழைத்த பாரதி யன்பர்கள் அனைவருக்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகுக. இதுவரை சங்கத்தைப் போற்றி வளர்த்து வந்தது போல் இனியும் சங்கம் வளர்ந்தோங்கி வாழ, பாரதி யன்பர்களும், இதுவரை தொடர்ந்து உதவிவரும் ஆதரவாளர்களும், பூரண ஒத்துழைப்பினை நல்க வேண்டுமென்று பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

செயற் குழுவினர்
22-8-1972

> " உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
> உள்ள நிறைவா மோ?—நன்னெஞ்சே!
> தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்
> சேர்த்தபின் தேனுமோ? "
>
> — பாரதியார்



## 1971 நன்கொடை விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பாரதி நினைவு அறக்கட்டளை | ரூ. | 750 00 |
| 2. | சங்கீத நாடக சங்க உதவி மான்யம் | ,, | 500 00 |
| 3. | ஜெமினி பிக்சர்ஸ் சர்க்யூட் | ,, | 250 00 |
| 4. | குமுதம் அறக்கட்டளை | ,, | 200 00 |
| 5. | பரதன் பப்ளிகேஷன்ஸ் | ,, | 100 00 |
| 6. | திரு. ஏ. வி. மெய்யப்பன் | ,, | 250 00 |
| 7. | ஓர் பாரதி அன்பர் | ,, | 250 00 |
| 8. | திரு. கி. இராஜேந்திரன் | ,, | 200 00 |
| 9. | திரு. ஆடிட்டர் பி. கல்யாணசுந்தரம் | ,, | 51 00 |
| 10. | திரு. ப. நீலகண்டன் | ,, | 50 00 |
| 11. | திருமதி. மதுரம் கோபாலகிருஷ்ணு | ,, | 25 00 |
| 12. | திரு. ஜி. உமாபதி | ,, | 50 00 |
| 13. | திருமதி. எம். எஸ். கமலா | ,, | 10 00 |
| 14. | திரு. சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார் | ,, | 25 00 |
| 15. | திருமதி. சரஸ்வதி பாண்டுரங்கன் | ,, | 4 00 |
| 16. | திரு. அருமைநாதன் | ,, | 2 00 |
| 17. | திரு. கி. சந்திரசேகரன் | ,, | 1 00 |
| 18. | திரு. பகீரதன் | ,, | 1 00 |
| 19. | திரு. நா. மகாலிங்கம் | ,, | 400 00 |
| | | | 3069 00 |

# பாரதி மலர் 1971-இல் விளம்பரம் உதவியோர்

1. ஏ. வி. எம். புரொடக்‌ஷன்ஸ், சென்னை-26.
2. அருண் பிரசாத் மூவீஸ், சென்னை-18.
3. சுகாதாரம், குடும்பநலத்துறை, சென்னை-8.
4. ஸ்ரீ கிருஷ்ணா ஸ்டோர்ஸ், சென்னை-5.
5. ஜெயார் மூவிஸ், சென்னை-17.
6. தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை, சென்னை-5.
7. சென்னை மத்திய கூட்டுறவு வங்கி லிட், சென்னை-1.
8. சவுத் இந்தியா கார்ப்பரேஷன், சென்னை-1.
9. சுந்தர்பாக் கல்யாண மண்டபம், சென்னை-17.
10. தேவேந்திரா கல்யாண மண்டபம், சென்னை-17.
11. சத்யா மூவிஸ், சென்னை-86.
12. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், சென்னை-6.
13. நல்லி சின்னசாமி செட்டி, சென்னை-17.
14. வாசு ஸ்டுடியோஸ் லேபரட்டரி, சென்னை-26.
15. சக்தி சுகர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்-9.
16. மெட்டல் காஸ்ட் சர்வீஸஸ், சென்னை-58.
17. இந்தோ-சுவிஸ் சிந்தெடிக் ஜெம் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட், மேட்டுப்பாளையம்.
18. தி ஆனைமலைஸ் ரிட்ரேடிங் கார்ப்பரேஷன், சென்னை-32
19. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், சென்னை-2
20. ஒயிட் ஹார்ஸ் சோப், சென்னை-81.
21. சித்ரா புரொடக்‌ஷன்ஸ், சென்னை-17.
22. செய்தி விளம்பரத்துறை தமிழ்நாடு அரசு, சென்னை-2
23. சிவாஜி பிலிம்ஸ் பிரைவேட் லிட், சென்னை-14.
24. சங்கர் சிமெண்ட்ஸ், சென்னை-2.
25. சிறுசேமிப்பு நிறுவனம், சென்னை-9.
26. ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி, திருப்பூர்-4
27. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை-8.
28. ABT. பார்சல் சர்வீஸ், கோயமுத்தூர்-18.
29. ஜெமினி பிக்சர்ஸ் சர்க்யூட் பிரைவேட் லிமிடெட், சென்னை-2.

**என். சி. இராஜகோபால் அண்டு கோ.**
தணிக்கையாளர்கள்

62/8, வி. கே. அவெனியூ
லஸ் சர்ச் சாலை
சென்னை-4

தேதி : 22—7—1972

உறுப்பினர்கள்,
பாரதியார் சங்கம்,
சென்னை.

**பாரதியார் சங்கத்தினுடைய 31-12-71-ந் தேதியுடன் முடிந்த ஆண்டிற்கான கணக்குகளின் தணிக்கை.**

பாரதியார் சங்கத்தினுடைய 31-12-1971-ம் தேதியுடன் முடிந்த ஆண்டிற்கான கணக்குகளின் தணிக்கையை நாங்கள் முடித்து, இத்துடன் வரவு செலவு கணக்கும் நிதி நிலை விவரப் பட்டியலும் அனுப்பியிருக்கிறோம். இந்த ஆண்டிற்குரிய வரவு செலவு கணக்கில் உள்ள செலவுக்குமேல் உள்ள வரவுக்கும் நிதி நிலை விவரப்பட்டியலினுள்ள கடன்களுக்கும், சொத்துக்களுக்கும், தணிக்கை செய்யப்பட்டு, சரி எனக் கண்டிருக்கிறோம் என்று இதன் மூலம் சான்றளிக்கின்றோம்.

தங்கள் உண்மையுள்ள,
என். சி. ராஜகோபால் அண்டு கோ

## பாரதியார் சங்கம்

**31-12-1971 அன்று கடன், சொத்துக்கள் விவரம்**

| கடன்கள் | ரூ. | பை. | ரூ. | பை. | சொத்துக்கள் | ரூ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| ஆக்கூர் அனந்தாச்சாரியார் | 442 | 42 | | | கையிருப்பு | 331 | 36 |
| டி. கே. ஷண்முகம் | 200 | 00 | | | வங்கியில் உள்ளது | 580 | 02 |
| | | | 642 | 42 | | | |
| என். சி. ராஜகோபால் அண்டு கம்பெனி | | | 50 | 00 | | | |
| **பொதுநிதி :** | | | | | | | |
| போன வருட இருப்பு | 57 | 11 | | | | | |
| **கூட்டு :** | | | | | | | |
| இந்த வருடச் செலவைக் காட்டிலும் அதிக வரவு | 161 | 85 | | | | | |
| | | | 218 | 96 | | | |
| | | | 911 | 38 | | 911 | 38 |

பொறுப்பாளர்களின் ஒப்பங்கள்

சென்னை,
22-7-72.

நா. மகாலிங்கம்
தி. க. ஷண்முகம்
பி. கல்யாணசுந்தரம்
கி. சந்திரசேகரன்
ம. பொ. சிவஞானம்
கி. இராஜேந்திரன்

இதே தேதியிட்ட எங்கள் தணிக்கை குறிப்புக்கு உட்பட்டு சரி பார்க்கப் பட்டது.

(என். சி. ராஜகோபால் அண்டு கோ.)
தணாக்கையாளர்கள்

## பாரதியார் சங்கம்

**31-12-1971க்கான வரவு செலவு கணக்கு**

| செலவுகள் | ரூ. | பை. | வரவுகள் | ரூ. | பை |
|---|---|---|---|---|---|
| பாரதி விழா செலவு | 4712 | 22 | சந்தா | 232 | 00 |
| பாரதி மலர் வெளியீட்டுச் செலவு | 2073 | 50 | நுழைவுச் சந்தா | 17 | 00 |
| சில்லரைச் செலவு | 165 | 70 | விளம்பர வரவு | 4542 | 00 |
| ஸ்டேஷனரி செலவு | 102 | 55 | நன்கொடை மூலம் வரவு | 3190 | 00 |
| பிரயாணச் செலவு | 76 | 58 | பாரதி மலர் விற்பனை வரவு | 192 | 50 |
| காபி மற்றும் சாப்பாட்டுச் செலவு | 95 | 60 | | | |
| படம் வரைய கே. எஸ். ஆர்ட்ஸுக்கு | 265 | 00 | | | |
| தபால் செலவு | 260 | 30 | | | |
| கமிஷன் கணக்கு | 210 | 00 | | | |
| தணிக்கை செலவு | 50 | 00 | | | |
| செலவைவிட அதிக வரவு | 161 | 85 | | | |
| | 8173 | 50 | | 8173 | 50 |

பொறுப்பாளர்களின் ஒப்பங்கள்

சென்னை,
22-7-72.

நா. மகாலிங்கம்
தி. க. ஷண்முகம்
பி. கல்யாணசுந்தரம்
கி. சந்திரசேகரன்
ம. பொ. சிவஞானம்
கி. இராஜேந்திரன்

தணிக்கையாளர்கள்.

*வரவேற்புரை*

# பாரதியின் பொன் விழா

**சங்கத் தலைவர் நா. மகாலிங்கம்,** பி. எஸ். ஸி., எம். ஐ. இ. **அவர்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களே! மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களே! சிலம்புச் செல்வர் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

பாரதியார் சங்கத்தின் சார்பில் இன்றும் நாளையும் நடை பெறும் மகாகவி பாரதியாரின் விழாவில் பங்கு பெற வந்திருக்கும் உங்கள் எல்லோரையும் அன்போடு வரவேற்று மகிழ்ச்சி அடைகிறேன். சிறுவர் அரங்கமாக இருந்து கலைவாணர் அரங்கம் என்ற புதிய பெயர் சூட்டப்பட்ட பிறகு இந்த அரங்கத்தில் முதலில் நடக்கும் பெரிய விழா மகாகவியின் விழாதான். கலைவாணர் அரங்கத்தில் கவிவாணர் விழா நடப்பதால் மகிழ்ச்சி இன்னும் பெரிதாகிறது. மகாகவி பாரதியாரின் திருப்பெயரில் நடந்து வரும் இந்தச் சங்கம் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தேசிய கவியின் கொள்கைகளைப் பரப்புவதிலும், அவர் நன்னினைவைப் போற்றுவதிலும் பல அரும் பணிகளை ஆற்றி வந்திருக்கிறது. அந்த வகையிலே தான் இந்த ஆண்டிலும் நினைவு நாளைச் சிறப்பாகக் கொண்டாட முற்பட்டிருக்கிறது. பாட்டுக்கொரு புலவரான பாரதியார் அமரவாழ்வெய்தி 50 ஆண்டுகளாகின்றன. அரை நூற்றுண்டாகிறது. அவர் தம் வாழ்வில் கண்ட கனவுகளும், கற்பனை செய்த காட்சிகளும், வற்புறுத்திச் சொன்ன நினைவுகளும், வாழ்த்திச் சொன்ன முடிவுகளும் இப்போது ஓரளவு நிறைவேறி வருகின்றன. தமிழ் மொழியும் இலக்கியமும் இன்று பெற்றிருக்கிற ஏற்றத்திற்கும் பொலிவிற்கும், புதுமைக்கும் முன்னோடியாக வழி வகுத்துத் தொடங்கிய பெருமை பாரதியாரின் தனிச் சிறப்பாகும்.

கவிஞர், அரசியல்வாதி, வேதாந்தி, பத்திரிகையாளர் என்று பல துறைகளில் அவருடைய ஆற்றல் பரிணமித்திருக்கிறது. அவர் அமர வாழ்வெய்தி ஐம்பதாண்டான இந்தப் பொன் விழாவும், பாரத நாடு விடுதலை அடைந்த வெள்ளி விழாத் தொடக்கமும் இணைந்திருப்பதில் ஒருவகையான பொருத்தமுமிருக்கிறது. நாடும் மொழியும் தன் இரு கண்களாகக் கருதி வந்த மகாகவியின் வரலாற்றில் இந்தப் பொருத்தம் இணைந்தது இயற்கையானதாகும்.

தொடக்கவுரை ஆற்றுவதற்காக நம் மதிப்பிற்குரிய முன்னுள் முதலமைச்சரான திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் அன்போடு இசைந்து வந்திருக்கிருர்கள். அவர்கள் காலமெல்லாம் தேசப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்த பெரும்புகழ் வாய்ந்தவர்கள். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஓராண்டு பாரதியார் விழாவினை அரசாங்க விழாவாக மிகச் சிறப்போடு நடத்தியிருக்கிருர்கள். தியாக சீலரான அவர்கள் தன் முதுமையையும் கருதாது இந்த விழாவில் தொடக்கவுரை ஆற்ற இசைந்ததற்கு எங்கள் நன்றி என்றும் உண்டு. அவர்களை அன்போடு வரவேற்கிறேன்.

**தேர்ந்த ராஜதந்திரி**

தலைமையுரை ஆற்றுவதற்காக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர்

கருணாநிதி அவர்கள் வந்திருக்கிறார்கள். கவிஞர் விழாவிற்குக் கலைஞர் வருவதுதானே பொருத்தம். ஊக்கத்தாலும், தன் ஓயாத உழைப்பாலும் நாட்டிற்கு ஆக்கமாகும் பல பணிகளை அவர்கள் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். 'நாட்டு மக்கள் பிணியும் வறுமையும் நையப் பாடு' என்ற பாரதியாரின் வாக்கிற்கிணங்க நாட்டிலிருந்து வறுமையையும் பிணியையும் ஒழிக்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக அவர்கள் அமைத்து இருக்கும் திட்டம் இந்தியாவிலேயே இதுவரையில் எவராலும் சிந்திக்கப்படாதிருந்த முன்னோடியான திட்டமாகும் என்று தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் கூறியதை நினைவூட்டுகிறேன். அவர்கள் இன்னும் செய்ய நினைத்திருக்கும் மகத்தான பணிகள் வெற்றி பெற வேண்டுமென்றும் விரும்புகிறேன். அரசியலில் தேர்ந்த ராஜதந்திரியாக விளங்குவதோடு, கதை, கவிதை, கட்டுரை, நாடகம் முதலிய இலக்கியத் துறைகளிலும் ஈடில்லாத சேவை செய்து வருகிறார்கள். அவர் தம் பல அலுவல்களுக்கு இடையில் வர இசைந்தது மகிழ்ச்சிக் குரியது. அவர்களை வருக வருக என்று அன்போடு வரவேற்கிறேன்.

**பேராசிரியரின் பெருமை**

தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியரும் புலவருமான சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு அன்பழகன் அவர்கள் அரசியல் துறையில் ஈடுபட்டு நற்பணியாற்றி வருகிறார்கள். பாராளுமன்றத்தில் உறுப்பினராகவும், கட்சித்தலைவராகவும் அவர் ஆற்றிய பணிகளை நாடறியும். சுகாதாரத் துறையின் பொறுப்பேற்றிருக்கும் அவர்கள் மக்கள் நல்வாழ்வில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். மருத்துவக்கல்லூரி மாணவரின் தேர்வுப்பட்டியல் வெளிவந்த பிறகு இதுவரை அந்தத் தேர்வு சம்பந்தமாக எந்த விதமான புகாரும், மனுவும், வழக்குப், வராமலிருப்ப தொன்றே அவருடைய திறமையான நிர்வாகத்துக்கு ஒரு பெரிய அடையாளமாகும். அவர் பாரதி விழாப் போட்டியில் பங்கு பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசு வழங்க வந்திருக்கிறார்கள். அவர்களை அன்போடு வரவேற்கிறேன்.

**சங்கத்தின் வளர்ச்சி**

முதலில் பாரதியார் பாடல் இசைப்போட்டி மட்டும் நடந்து கொண்டிருந்தது. பின்னர் ஆக்கூர் அனந்தாச்சாரியார் நினைவாகப் பேச்சுப் போட்டியையும் நடத்தத் தொடங்கினோம். பின்னர் கவிமணியின் நினைவாகக் கவிதைப் போட்டியும், இந்த ஆண்டிலிருந்து பாரதிதாசனாரின் நினைவாகக் கட்டுரைப் போட்டியும் நடத்தி வருகிறோம். இவ்வாறு உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவியர்க்கு மேலும் உற்சாகமூட்டும் வகையில் இந்தப் போட்டிகள் நடந்து வருகின்றன. போட்டிகளின் வளர்ச்சி சங்க வளர்ச்சிக்கு ஓர் அடையாளமாக இருந்து வருகிறது.

**மலரை வெளியிடும் ம. பொ. சி**

மதிப்பிற்குரிய சிலம்புச்செல்வர் பாரதி மலரை வெளியிட இருக்கிறார்கள். அவர்களை அறியாதார் தமிழ்நாட்டை அறியாதாரே என்று கூறிவிடலாம். அரசியல், இலக்கியம் இவைகளோடு ஆன்மீகத்திற்கும் அவர் ஆற்றிய பணிகள் அளவில்லாதவை. 'வள்ளலார் கொள்கைகளை நாடெல்லாம் பரப்பிய அவர்களை நாடு என்றும் மறவாது. தமிழ் நாட்டுச் சமய ஞானிகளின் வாழ்க்கையினையும் கோட்பாடுகளையும், வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு' என்ற நூலைப்போல வடித்துத் தருமாறு அவர்களை வேண்டிக்கொண்டிருக்கிறேன். அவர்கள் அப்பணியைச் செய்து தமிழன்னைக்கு மேலும் புகழ் சூட்ட வேண்டும் என்று கேட்டு அவரை வருக வருக என வரவேற்கிறேன்.

**பாரதியின் தம்பி !**

பரலி சு. நெல்லையப்பர் அவர்கள் மறைவு பாரதி யுகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். மகாகவி பாரதியாரோடு உடன் பழகிய உரிமையும் பாரதியாரால் அன்போடு 'தம்பி' என்று அழைக்கப்பட்ட பெருமையும் அவருக்கே உண்டு. கண்ணன் பாட்டை 1917ம் ஆண்டில் முதல் பதிப்பாக அவர் வெளியிட்ட போது பாரதியாரைப் பற்றி அவர் குறிப்பிட்ட வாசகங்கள் எப்படிப்பட்ட தீர்க்கதரிசனமான வாக்குகள் என்பதை எண்ணினால் வியப்பாக இருக்கும். "இந்த ஆசிரியன் காலத்திற்குப் பின் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின் இவர் பாடல்களைத் தமிழ்நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன்" என்று எழுதியிருக்கிறார். அவர்களின் திருவுருவப் படத்தினை அருமை நண்பரும், சிறந்த பேச்சாளருமான திரு. டி. செங்கல்வராயன் திறக்க இருக்கிறார்கள். கருத்துச்செறிவான அவர் உரைகளையும், பணிகளையும் நாடு நெடுங்காலத்துக்கு முன்பே தக்க வகையில் பயன்படுத்தி இருக்க வேண்டும். அவரை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**பண்பாட்டின் திருவுருவம்**

தர்மரட்சாமணி திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் மறைவும் நாட்டுக்கு மாபெரும் நஷ்டமாகும். சீலமும் வள்ளன்மையும் ஒழுக்கமும் நிறைந்த திரு. பாலசுப்பிரமணிய ஐயர் பாரதியாரின் பாடல்களில் ஊறித் திளைத்தவர். பாரதியார் அன்பர்களில் தலைசிறந்தவர். பாரதியாருக்குப் பல உதவிகளைப் புரிந்த பெருங்குடும்பத்தைச் சேர்ந்தவர். எட்டையபுரத்தில் பாரதியார் மண்டபத்தை நிறுவிய பாரதியார் நினைவு அறக் குழுவின் நிருவாகப் பொறுப்பினைப் பல காலம் ஏற்றிருந்து அரும்பணி ஆற்றியவர். அவர்கள் திருவுருவப்படத்தை அன்பர் திரு. சி. ஆர். பட்டாபிராமன் திறக்க வந்திருக்கிறார்கள். அடக்கமும், ஆற்றலும், ஒழுக்கமும் நிறைந்த அன்பர் திரு. சி. ஆர். பட்டாபிராமன் புகழ் வாய்ந்த தந்தையாருக்குப் பிறந்த புகழ் வாய்ந்த புதல்வர். மத்திய அரசின் அமைச்சராக இருந்து தன்னடக்கத்தோடு அவர் ஆற்றிய பணிகள் போற்றுதற்குரியன. அவரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

**சின்னஞ்சிறு கிளியே !**

இந்த விழாவின் சிறப்பு அம்சமாகக் குழந்தைகளுக்குப் பயன்படும்படியான பாரதியார் பாடல் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிடுவதென்று முடிவு செய்தோம். அப்பொறுப்பினை, திரு. நாரண துரைக்கண்ணன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் ஆகிய மூவரிடம் ஒப்படைத்தோம். அவர்கள் அதைத் திறம்படத் தொகுத்து 'சின்னஞ்சிறு கிளியே' என்ற தலைப்பில் அளித்தார்கள். புத்தகத் துறையில் ஊக்கத்தோடு அரும்பணி ஆற்றி வரும் பிரபல பதிப்பகமான வானதி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு பாரதியார் சங்கத்தின் சார்பில் இந்நூலினை வனப்புற வெளியிட முன்வந்தார்கள். இந்த ஆண்டின் சிறந்த திரைப்பட நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கலைஞர் ஜெமினி கணேசன் நாளை காலையில் நடைபெறவிருக்கும் விழாவில் அந்நூலை வெளியிட இசைந்திருக்கிறார்கள். தொகுப்பாளர்களுக்கும், அழகுறப் பதிப்பித்த அன்பர் திருநாவுக்கரசுக்கும், கலைஞர் ஜெமினி கணேசனுக்கும் நன்றியையும் வரவேற்பையும் கூறி மகிழ்கிறேன்.

**சிந்துவெளி நாகரிகம்**

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியாரின் பொன்மொழிக்கேற்ப இக்காலத்தில் தமிழ்த்துறையிலும் ஆராய்ச்சியிலும் புது மலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. தமிழின் தொன்மையைப் பற்றி இலக்கிய ஆதாரங்களை மட்டும் கூறிக்கொண்டு நாம் இருந்து வந்திருக்கிறோம். அதனால் கற்பனை உலகில் சஞ்சரிப்பவர்களாகவே நம்மை ஆராய்ச்சி உலகம் கருதி வந்தது. ஆயின், இப்போது சிந்துவெளி எழுத்துக்களை பின்லாந்து தேசத்தைச் சேர்ந்த இளைஞர் குழுவும், சோவியத் நாட்டு ஆராய்ச்சியாளர் குழுவும் ஆராய்ந்து அந்த எழுத்துக்கள் தமிழாக

இருக்க வேண்டுமென்றும் அந்த நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமாக அமைந்தது என்றும் கூறி வருகிருர்கள். இங்கே இன்னெரு செய்தியையும் நினைவூட்ட விரும்புகிறேன். பின்லாந்து நாட்டு ஆராய்ச்சி நிபுணரான ஆஸ்கோ பர்போலோ என்ற அவ்விளைஞர் நம் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையைப் பார்வையிட வந்திருந்தார். அப்போது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் வைக்கப்பட்டிருந்த சில பழம் பானை ஓடுகளை அவர் பார்த்தாராம். அந்த ஓடுகளைச் சரியாக அடுக்கி வைத்து அதன் மேலிருந்த சித்திர எழுத்துக்களைப் படித்து, அந்த எழுத்துக்களும் சிந்துவெளி எழுத்துக்களும் ஒன்றுதான் என்று கூறி வியப்படைந்தாராம். அந்த ஓடுகள் உறையூர் பக்கத்திலிருக்கும் திருக்காம்புலியூர் என்ற ஊரில் நடந்த அகழ்வாராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்டவை. ஆகவே, தமிழ் நாகரிகமே வடக்கிலும் பரவியிருந்தது என்று உறுதியாகிறது. அதேபோல, அரசாங்க நிர்வாகத் துறையில் சிறந்த நிர்வாகியாகப் பெயர் பெற்றவரும், பொழுதுபோக்காகக் கல்வெட்டுகளைப் படிக்கப் புகுந்து இப்போது கல்வெட்டுத்துறையில் தலை சிறந்த கலைஞராக விளங்கும் திரு. ஐராவதம் மகாதேவன், தான் கண்டுபிடித்த கல்வெட்டுகளின் மூலம் தமிழின் தொன்மையை கி. மு. 3-ம் நூற்றுண்டுக்கு முன்னே கொண்டு செல்கிருர்கள். குமரி மலையோடு அழிந்துபோன பஃறுளி ஆறு என்பது வேதங்களில் குறிப்பிடப்பெறும் பல்குணி ஆருக இருக்கலாம் என்றும், வடமதுரை, கபாடபுரம், மதுரை மூன்று சங்கங்களும்கூட வடநாட்டிலேயே இருந்திருக்க வேண்டும் என்றும் கருதுகிருர்கள். இவ்வாறு தமிழின் சிறப்பும் மேன்மையும் உணரப்பட்டு வருவது பாரதியாரின் ஆன்மாவுக்கு அமைதி தருவதாகும். இவ்வாறு பாரதியாரின் கனவுகளும் இலட்சியங்களும் மேலும் நிறைவேறுமாக!

**தலைநகரில் கலைமண்டபம்**

பெரியோர்களே ! தாய்மார்களே !

இறுதியாக ஒரு வேண்டுகோள். பாரதியார் சங்கம் செயற் படுவதற்காக ஓர் அலுவலகத்தையும் பாரதியார் மண்டபம் நிறுவுவதற்கான ஓர் இடத்தையும் அரசாங்கத்தை வழங்குமாறு சில ஆண்டுகளாகக் கேட்டு வருகிறேம். எட்டயபுரத்தில் அவருக்கு மணிமண்டபம் நிறுவப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகள் சென்னையிலிருந்ததோடு, சென்னையில்தான் அவர் தன் வாழ்வின் முடிவை அடைந்தார். எனவே, தமிழ்நாட்டின் தலைநகரான சென்னைத் தலைநகரில் ஓர் அழகிய மண்டபத்தை நிறுவ வேண்டுமென்பது எங்கள் அவாவாகும். பாரதிக்குச் சிலை எழுப்பி மகிழும் நம் தமிழக அரசு மண்டபத்திற்கும் இடம் வழங்கி உதவுமாறு மீண்டும் வேண்டிக் கொள்கிறேம்.

**பட்டி மண்டபமும் பாஞ்சாலி சபதமும்**

இது பட்டிமண்டப காலம். காரசாரமான விவாதங்களைக் கேட்டு மகிழ்வதில் நாட்டு மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகிருர்கள். அதே போல, கவியரங்கமும் ஒரு சிறப்பான அம்சமாகும். டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் தலைமையில் கவியரங்கமும், டாக்டர் பா. நடராஜன் அவர்கள் தலைமையில் பட்டிமண்டபமும் நாளை நடைபெற இருக்கின்றன. பாரதி அன்பர்கள் பலர் பங்கு கொள்கின்றனர். அவர்களையும் இன்றே வரவேற்கிறேன்.

கலைஞர் சகஸ்ரநாமத்தின் பாஞ்சாலி சபதக் கவிதை நாடகம் கலை நடிப்பும் காவியத் துடிப்பும் கலந்த அருமையான நாடகமாகும். இன்று இரவு இங்கே அது நிகழப் போகிறது. நாளை நம் கவிஞர் கொத்தமங்கலம் சுப்புவின் பாரதியார் கதை நிகழ்ச்சி நடைபெறும். இவ்வாறு இரண்டு நாட்களிலும் பாரதியாரின் நினைவைப் போற்றும் பேருரைகளும் கவிதைகளும் வாதங்களும் நடைபெறும். ஆர்வமுள்ள மக்களின் ஆதரவு காரணமாகவே இந்த ஆண்டு இந்தப் பெரிய அரங்கில்விழாவை ஏற்பாடுசெய்திருக்கிறேம். இருநாட்களிலும் திரளாகத் தொடர்ந்து வந்து சிறப்பிக்குமாறு அன்பர்களை வேண்டுகிறேன். பாரதியார் சங்கத்தலைவன் என்ற முறையில் மீண்டும் வருக வருக என்று எல்லோரையும் வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!



# பாரதி மண்டபம் கட்ட சென்னையில் நிலம் தருவோம்

**மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களின் தலைமையுரை**

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்ற கருத்தைப் பரப்பிய பேரறிஞர் அண்ணு அவர்களின் நெருங்கிய நண்பரான செங்கல்வராயன் அவர்கள் பொது விஷயங்களில் அரசியல் மாற்சரியம் மறந்து ஈடுபடவேண்டும் என்ற அண்ணுவின் கருத்தை இங்கு எதிரொலித்தார்.

அறிஞர் அண்ணு அவர்கள் மறைந்த பின்னரும் இந்தக் கருத்தைச் சிந்தாமல் சிதருமல் சுதந்திர நாள் விழாவையும் குடியரசு நாள் விழாவையும் இன்ன பிற விழாக்களையும் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும் வகையில் நடத்தி வருகிறேம். அதற்கு அனைவரும் ஆதரவும் தந்து வருகின்றனர்.

பாரதியாரைப் பற்றி பாரதிதாசன், "நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா; காடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ" என்று எழுதினர்.

சிலம்புச் செல்வர் இங்கே பேசுகிற போது எல்லாருக்கும் சொந்தமான கவி பாரதி என்று கூறினர்.

திருக்குறளை எப்படி எல்லா மதத்தாரும் எங்கள் கொள்கைகளைக் கூறியிருக்கிறது என்று சொந்தம் பாராட்டுகிருர்களோ, அப்படியே எல்லோரும் சொந்தம் கொண்டாடும் வகையில் கருத்துக்களைப் பொழிந்திருக்கிருர் பாரதியார்.

"ஓம் சக்தி" என்ற பாடலில் ஓரிடத்தில் ஆரம்பிக்கும் 'ஓம் சக்தி', பக்கம் முழுவதும் "ஓம்சக்தி! ஓம் சக்தி!" 'என்றும் எழுதியிருக்கிருர். அதே சமயம்', ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்!" என்றும் பாடியிருக்கிருர்.

அவரது சீடரான பாரதிதாசன் இதே போன்று தெய்வீகப் பாடல்கள் எழுதியிருக்கிருரா என்று சிலம்புச் செல்வர் என்னிடம் கேட்டார். தொடக்கக் காலத்தில் பாரதி முன் இவர் பாடிய பாடல் "எங்கெங்கு காணினும் சக்தியடா ! ஏழுகடல் அவள் வண்ணமடா" எனும் பாடல். அதற்கு முன் அவர் "சுப்பிரமணிய துதி" எனும் பக்திப் பாடலையும் எழுதியிருக்கிருர். இவைகளை யெல்லாம் ஒன்ருகச் சேர்த்து வெளியிடாத காரணத்தால் "பாரதி தாசன் கடவுளைத் தாக்கினர்; துதித்து எழுதவே இல்லையா ?" என்ற சந்தேகம் தோன்றுகிறது. இதே போல்தான் பாரதியாரும் வெள்ளையருக்கு எதிராக தேசபக்தியைத் தூண்டிவிடும் பாட்டு எழுதினர். எனினும் "வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்பு" எனும் பாடலும் எழுதினர்.

'இவை யெல்லாம் எந்தக் காலத்தில் பாடப்பட்டவை' எனும் குறிப்போடு தனிப்புத்தகங்களாக வெளியிடப்படவேண்டும். அப்போது 'அந்தப் பாடல் இந்தக் காலத்தில் பாடப்பட்டது' என்று சொல்லி விடலாம். ஆனல், எதிர்காலத்தில் பாரதியார் ஆங்கிலேயருக்கு எப்படி வாழ்த்துக் கூறினர் எனும் சந்தேகம் எழுந்து விடும். ஆகவே, அவரோடு பழகியவர்கள் இருக்கும் காலம் இது ! பாரதியாரால் 'தம்பி' என்று அழைக்கப்பட்ட பரலி நெல்லையப்பர் இன்று படமாகிப் போய் விட்டார். இன்னும் சிலர் நம்மிடையே வாழ்கிருர்கள். அவர்களது ஆலோசனைகளைப் பெற்று எந்தக் கால கட்டத்தில் எந்தப் பாடல் பாடப் பெற்றது எனும் குறிப்போடு தனித் தனி புத்தகங்களாக வெளியிடுவது நல்லது. பெரியவர் பக்தவத்சலனர் பேசுகிறபோது, 'அறஞ்செய விரும்பு'என்ற ஔவையார் பாடலை ஏற்றுக் கொண்டு, 'அச்சம் தவிர்' என்றும்

பாரதி பாடினுர் என்று குறிப்பிட்டார். 'அச்சம் தவிர் —என்று பாடிய பாரதி அப்படிப் பாடி, ஓடி ஒளிந்து கொள்ளவில்லே. மீசை வைப்பதே பாவ கரமான செயல் என்று கருதிய அவர்கள் கூட்டத்தில் முறுக்கிய மீசை வைத்துக் கொண்டு, முண்டாசு கட்டிக் கொண்டு, சாத்திரங்களேச் சாடுபவராக, ஆயிரம் தெய்வம் தொழுவதைச் சாடுபவராக, நெஞ்சு பொறுக்குதில்லேயே என்று குமுறிப் பாடுபவராக, 'வஞ்சனேப் பேய்கள் என்பார் ; அந்த மரத்தில் என்பார் ; இந்தக் குளத்தில் என்பார்' என்று கேலி பேசுபவராக பாரதி இருந்தார்.

> நாடகத்தில் காவியத்தில் காதல் என்ருல்
> நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்ரும் என்பார்
> ஊடகத்தே-வீட்டிலுள்ள கிணற்ருேரத்தே
> ஒரு புறத்தில் காதல் என்ருல் உறுமுகின்ருர்
> பாடைகட்டி அதைக் கொல்ல வழிசெய்
> கின்ருர்

என்று சமுதாயத்தைச் சாடி, அச்சம் தவிர்த்தார் ! ஆற்றலேப் பொழிந்திருக்கிருர் பாரதியார் ! சமுதாய சீர்திருத்த வேட்கை கொண்டவராக பாரதி இருந்தார். ஆனுல், அவரது பாட்டில் சில வரிகளே விட்டு விடுகிருர்கள்.

"பார்ப்பானே ஐயரென்ற காலமும் போச்சே" என்று அவர் பாடிய வரி, அந்தக் காலம் போக வேண்டும் என்பதற்காக மட்டும் கூறியதல்ல ! சாதியிலே உயர்வு, தாழ்வு, சாதி ஆணவம் இருக்கக் கூடாது என்பதற்காகப் பாடிய வரிகள் அவை ! அந்த வரிகள் அப்படியே இருக்க வேண்டும்.

அப்படி இருந்தால்தான், பாரதி சாதி ஆணவத்தைச் சாடிய புரட்சிக்கவி என்று புரியும். தனது புரட்சிக் கவிதைகளால், உயிர்க் கவிகளால் நடைப்பிணமாய் இருந்த தமிழர்களேத் தலே நிமிர்ந்து நடக்கச் செய்தார் பாரதி. சுதந்திர வரலாற்றில் தமிழ் நாட்டிற்கும் ஒரு பங்கு இருக்கிறது என்ருல் அதற்குக் காரணம், பாரதி தனது பாடல்களால் தமிழர்களேப் போர் மறவர்களாக மாற்றியதுதான்.

விழா எடுப்பதோடு நமது கடமை முடிந்து விடுவதில்லே. பாரதியின் குறிக்கோள் உணர்ந்து அவரது எண்ணங்கள் நடைமுறைப் படுத்தப்பட நாம் முயல வேண்டும்.

வரவேற்புரையாற்றிய மகாலிங்கம் அவர்கள் பாரதி சிலே அமைத்ததற்குப் பாராட்டிவிட்டு, அடுத்து ஒரு கோரிக்கையை வைத்தார். பாரதியாருக்கு ஒரு மண்டபம் அமைக்க வேண்டும்; அதற்குரிய இடத்தை அரசாங்கம் தர வேண்டும் என்ருர்.

பாரதியார் மண்டபம் அமைப்பதற்கு அவர்கள் எந்த இடம் தேவை என்று கூறுகிருர்களோ அந்த இடத்திற்குத் தவிர்க்க முடியாத மறுப்பு இல்லேயெனில், நிச்சயம் அரசு தரும் என்று கூறிக் கொள்கிறேன்.

இடம் கிடைத்தால் கட்டிடம் எழ வேண்டியது பற்றி யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லே. ஏனெனில், கோரிக்கை எழுப்பியவர் பொள்ளாச்சி மகாலிங்கம் ! உறுதியாக அவர் அதைச் செய்து முடிப்பார் !

---

> "ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்செய் வோம் ;
> ஆலேகள்வைப் போம்கல்விச் சாலேகள்வைப் போம் ;
> ஓயுதல்செய் யோம்தலே சாயுதல்செய் யோம் ;
> உண்மைகள்சொல் வோம்பல வண்மைகள்செய் வோம்"
>
> — பாரதியார்



# பாரதி விழாக் கவியரங்கம்

## பாரதி பார்வையில் ஔவையார்

கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி

### தமிழ் வணக்கம்

உலகின் முதன்மொழியாய் உணர்ச்சிக்கொரு வடிவாய்
நிலவும் இலக்கியத்தில் நிகரிலதாய்—அலகில்
இலக்கணச்சீர் முத்துறையாய் ஏற்றமிகப் பெற்றதுவாய்
துலக்க முறுந் தமிழேதுணே !

பாரதிக்குப் பெருமை சேர்க்கச் சங்கம் வைத்துப்
பல்லாண்டாய் விழாவெடுக்கும் அன்பர்கட்கும்
சீருயர்ந்த கவியரங்கத் தலேமையேற்கும்
திருவாளர் டாக்டர். மெ. சுந்தரர்க்கும்
பாரதத்திற் பண்டுதொட்டு இந்நாள்மட்டும்,
பண்பட்ட பெரியோர்தம் சிறப்பையெல்லாம்
பாரதியின் பார்வைவழிக் கவிதைபாடும்
பாவலர்க்கும் அவையினர்க்கும் வணக்கம் சொன்னேன்.

வாழையடி வாழையெனத் தனக்கு முன்னே
வாழ்ந்த பெரும் புலவர்களே வணங்கிப் போற்றி
சூழலினுல் தாழ்ந்திருந்த தமிழகத்தின்
துயர்துடைக்கத் துடிதுடித்துத் திட்டமிட்டு
ஏழமையை அடிமையெனும் நிலேயைப் போக்கும்
எழுச்சிமிகு கவிதைபல யாத்துதந்து
கோழையரை வீரர்களாய் மாற்றவந்த
கோமகன் நம்பாரதியின் நாமம் வாழ்க !

கவிதையென்ருல் உணர்ச்சிதனேக் கவ்வ வேண்டும்
கனல்பறக்கும் சொற்களங்கே தவ்வ வேண்டும்
நவநவமாம் கருத்தணிகள் துள்ள வேண்டும்
நலிவகற்றும் வழிமுறைகள் விள்ள வேண்டும்
இவையனேத்தும் பொருந்துவதாய் இந்நூற்ருண்டில்
இவ்வுலகில் இருந்தமகா கவிகளுக்குள்
சுவைபுதுமைக் கவித்தலேமை பூணும் மன்னன்
சுப்ரமண்ய பாரதியே ! மறுப்பார் உண்டோ ?

பாசிசத்தின் கொடுமைகளை நீக்குதற்கும்
பாரதத்தின் அடிமை யிருள் போக்குதற்கும்
சோஷியலிசப் புதுவுலகைச் சமைப்பதற்கும்
சுதந்திரத்தின் நற்பயனைச் சுவைப்பதற்கும்
பேசரிய காந்தீயம் தழைப்பதற்கும்
பிற்போக்குச் சக்திகளை அழிப்பதற்கும்
மாசகற்றும் ஒளிச்சுடரால் தேசீயத்தின்
மாமணியாய் பாரதியார் அவதரித்தார் !

தானேதான் தமிழ்க்கவிதை மன்னனென்று
தருக்குற்றுத் தம்பட்டம் அடித்துக்கொண்டு
வாணாளை வீணாக்கும் திருக்கூட்டத்தார்
வாழுகின்ற நாட்டினில்தான் அவனும்வந்தான்
ஆனாலும் தனக்குமுன்னே உயர்ந்துநின்ற
அறிஞர்கட்கும் கலைஞர்கட்கும் ஞானியர்க்கும்
தேனாக அமுதாகக் கவிதைதந்த
செந்தமிழ் நற்கவிஞர்கட்கும் பெருமை சேர்த்தான்.

அத்தகைய ஞானியருட் சிறந்தோரான
ஔவை—திருவள்ளுவனார்—இளங்கோ—கம்பன்—
சத்ரபதி சிவாஜிமன்னன்—தாயுமானார்—
சமரச மெய்ஞ்ஞானவள்ளல் இராமலிங்கர்—
உத்தமர்நம் திலகர்பிரான் லஜபதிராய்—
உலகஒளி காந்தியண்ணல்—உயர். வ. உ. சி—
சித்தன். உ. வே. சாமிநாதன்—இரவிவர்மா—
திறத்தினைப்பா ரதிநோக்கிற் செப்பச் சொன்னார்.

இவர்களுக்குள் ஔவையாரை எனக்குத்தந்தார் !
என்னென்பேன் என்னென்பேன் அவள்தன்மாண்பை !
புவியில் எந்தநாடும் எந்தமொழியும் காணாப்
புனிதவதி ! அவட்கிணையாய் யாரைச் சொல்வேன் ?
தவச்செல்வி ! தமிழ்ச்செல்வி ! அறிவின்செல்வி !
சமாதானத் தூதுசென்ற வெற்றிச் செல்வி !
நவகவிதை நாயகியாம் ஞானச் செல்வி !
நந்தமிழர் புகழ்க்கல்விக் கலையின் செல்வி !

ஓங்குபுகழ் தமிழ்முதலாம் பாரதத்தின்
உயர்மொழிகள் அத்தனையும் ஒழித்துக்கட்டி
தீங்கிழைக்கும் பயிற்சிமொழி ஆங்கிலத்தைத்
திணிப்பதற்கு மெக்காலே முயன்றபோது
சங்கிதனால் இந்தியாவை இழந்திட்டாலும்
எங்கள்மொழி இலக்கியத்தின் கர்த்தாவான
பாங்குயரும் ஷேக்ஸ்பியரை ஷெல்லிதன்னை
பாரில்இழந் திடத்துணியோம் எனச்சொன்னாலும் !



அன்னியன் மெக்காலேயின் உரையைக்கேட்டு
ஆர்த்தெழுந்து பாரதியார் மறுத்துரைத்தார் !
என்னினிய தமிழ்மொழியில் மேலைநாட்டு
இப்சனைப்போல் கீட்சைப்போல் சேக்ஸ்பியர்போல்
உன்னதநற் கவிஞர்நூற்றுக் கணக்கிலுண்டு ;
ஒப்பற்ற தமிழ்க்கிழவி ஔவையைப்போல்
தன்னிகரில்லாப் பெண்பாற் புலவர்இந்தத்
தாரணியில் எங்கேனும் பிறந்ததுண்டோ ?

பெருமையுறும் இலக்கியங்கள் எல்லாம்ஓர்பால்
பிரித்துவைத்துப் பிறிதொருபால் ஔவையாரின்
அருமையுறு நூலனைத்தும் குவித்துவைத்து
அவற்றுள்எதை ஏற்றிடுவாயென்று கேட்டால்—
திருவளர்க்கும் அறங்களெல்லாம் எளிமையாகச்
செப்புகின்ற ஔவையாரின் நூலேஏற்பேன் !
பிறிதனைத்தும் மீட்டுமிங்கே சமைத்தல்கூடும்
பெறற்கரிய ஔவைநூல்போல் சமைப்பார்யாரே ?

ஓதிடுவீ ரென்றுமிக இறுமாப்போடு
உரத்தகுர லெழுப்பிஅறை கூவிஇந்த
மேதினிக் கெல்லாம்ஔவைப் பெருமைதன்னை
விரித்துரைக்கும் பாரதியின் திறம்தானென்னே !
மாதொருத்தி மானுடத்தின் மாண்புயர்த்த
வகுத்தளித்த நீதிநெறி விளக்கம்கண்டும்
பேதையரென் றவர்குலத்தைப் பேசுவோரைப்
பித்தரென்றும் பேயரென்றும் சாடுகின்றான் !

நரைமூப்பு சாக்காடு பிணிகளண்டா
நல்லமுதக் காயகல்பம் ஒன்றுகண்ட
கருநெல்லிக் கனியதிகன் கொடுக்கத்தின்ற
காரணத்தால் ஔவைபல நூற்றாண்டிங்கே
அருள்பொழியும் இளமையெழில் அறிவும்கொண்டு
அறநெறிசேர் சாத்திரங்கள் வகுத்துமாந்தர்
இருள்கடியும் ஒளிவிளக்காய் இருந்தாரென்றால்
இதயத்திற் களிதுளும்பும் செய்தியன்றோ ?

கடைச்சங்கக் காலமதிற் பெண்பாற்பல்லோர்
கவிதைகளைக் காணுகின்றோம், அவற்றுள்ஔவை
படைத்திட்ட பாடல்களைப் பார்த்துப்பார்த்துப்
பரவசத்தால் துள்ளுகின்றோம் ; சிதைந்ததன்றிக்
கிடைத்திட்ட கவிதைகள்தாம் இவைகளென்றால்
கிடைக்காது அழிந்தவற்றின் சிறப்புயாதோ ?
புடைக்கின்ற போர்க்களத்தில் பரணிபாடும்
போர்மறத்தி ஔவைபுகழ் உரைக்கப்போமோ !

அதிகமானின் அரசவையின் புலவராகி
அவனிடம்போ ரிடத்துணிந்த தொண்டைமானின்
பதியெழுந்து திறமைமேவும் தூதுரைத்துப்
பகைமாற்றி நட்பினுக்கோர் பாலமாகிப்
புதியசமா தானஉடன் படிக்கைகண்ட
புரட்சிப்பெண் பாற்கவிஞர் ஔவையைப்போல்
இதயமுள்ள ஒருகவிஞர் உலகின்கண்ணே
எவர்பிறந்தார் இவர்க்கிணையாய் எடுத்துச்சொல்ல?

களவியலைக் கற்பியலைக் காதல்விஞ்சும்
கற்பனைசேர் கவிதைநயக் காட்சிதன்னை
இளமைவிருந் தெனும்அகத்தில்—புறத்தில்மற்றும்
இனிமைதரும் குறுந்தொகையில் கேட்டோம்—பின்னும்
உளவியலை ஆத்திசூடி கொன்றைவேந்தன்
உலகநீதி மூதுரையா திகளாற்கண்டோம்
அளவையிலா வேழமுகம் விநாயகர்நல்
அகவலுடன் தனிப்பாடல் பலதும்கேட்டோம்!

இத்தகைய பெருமையுறு ஔவையாரின்
ஏற்றங்கள் எடுத்தெடுத்துப் போற்றிச்சாற்றும்
உத்தமனும் அமரகவி பாரதிதன்
உரைநடையில் மட்டுமின்றித் தான்இயற்றும்
சித்திரப் பொற்கவிதைகளைத் தீட்டுதற்குச்
சிறப்புமிக்க சுவரினைப்போல் அன்னையாரின்
நித்திலச்சீர் கவிதைகளைப் பயன்படுத்தும்
நேர்த்தியைக் கண்டுவக்காத நெஞ்சம்உண்டோ?

பெண்டாட்டி தனையடிமைப் படுத்தவேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
கண்டார்க்கு நகைப்பென்னும் உலகவாழ்க்கை
காதலெனும் கதையினுடைக் குழப்பமன்றோ?
உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்ததாயை
உமையவளென் றறியீரோ? உணர்ச்சிகெட்டீர்!
பண்டாய்ச்சி ஔவை "அன்னையும்பிதாவும்
பாரிடைமுன் னறிதெய்வம்" என்றாளன்றோ? (பாரதி)

ஆத்திசூடிஎன்னும் அறத்தைச் சொல்லும்
ஔவையாரின் நூலைஆதி நூலாய்க்கொண்டு
யாத்துத்தந் தார்இனிய வழிநூலொன்றை
அதன்காப்புச் செய்யுள்முதல் அனைத்தும்வேறாய்க்
கோத்துத்தந் தார்புதிய ஆத்திசூடி
கொற்றமிகு பாரதியார் முன்னோர் தன்னை
ஏத்திச்செந் தமிழினிலே செய்தளித்த
இணையற்ற நூலதனை இதயம்வைப்போம்!



"ஜாதியிரண் டொழியவேறு இல்லையென்று
தமிழ்மகள்முன் சொன்னசொல்லை அமிழ்தமென்றும்"
"தீதுசெய்யும் வஞ்சகரோ டிணங்கேலென்ற"
சிறப்புரையைத் திறமையுடன் பாப்பாபாட்டில்
"பாதகங்கள் செய்பவரைக் கண்டாலென்றும்
பயங்கொள்ள லாகாது பாப்பா!"வென்றும்
"மோதிமிதித் திடுவாய்நீ பாப்பா! அன்னார்
முகத்தினிலே உமிழ்ந்துவிடு" என்றும்சொன்னான்.

ஆதிமுதல் இன்றுவரை ஆணினத்தார்
அநீதிசெய்யும் முறைகளையே நியதியாக்கி
மாதர்களை விலங்கினம்போல் அடிமைகள்போல்
வதைபுரிந்தார், பேதையென்றார்; இனிமேலந்தச்
சூதனைத்தும் ஔவையென்னும் அறிவுச்செல்வச்
சுடர்க்கொடியால் தகர்ந்துவிட்ட உண்மைதன்னை
பூதலத்திற் கெடுத்தியம்பிப் புதுமைப்பெண்ணைப்
புரட்சிப்பண் பாடவைத்தான்; புதுமையன்றோ?

பெண்குலத்தை இனிஎவனும் தாழ்ந்ததென்று
பேசுதற்கு ஞாயமில்லை; மேலைநாட்டில்
பண்ணியற்ற ஷேக்ஸ்பியர்போல் பெண்கள்இல்லை!
பாரினிலே! அந்தநிலை தமிழுக்கில்லை!
கண்ணிரண்டில் வலதுகண்ணே உயர்ந்ததென்றால்—
கவியரசி ஔவையினம் வலக்கண்என்ற
உண்மைதனைப் பாரதியார் உரத்துக்கூறும்
உறுதியினை உளப்பண்பை மறுக்கப்போமோ?

சீரைத்தே டின்ஏரைத் தேடுஎன்று
செப்பியஔ வைமொழியைச் சிரமேற்கொண்டு
பாரினிலே உழவுக்கும் தொழில்தனக்கும்
பல்லாண்டு கூறிமிக வணங்கிப்போற்றி
ஊரைஏய்த் துண்டுகளித் திருக்கும்தீய
உலுத்தர்களை நிந்தனைகள் செய்துதூற்றும்
பாரதியின் பார்வையிலே ஔவையாரின்
பாடல்களைப் பார்க்கின்றேன் பயன்துய்க்கின்றேன்!

"தெய்வம்இக ழேல்"என்னும் சொல்லை,மற்றும்
"தேசத்தோ டொத்துவாழ்" என்னும்சொல்லை
"நொய்துசோம் பித்திரியேல்" என்னும்சொல்லை
நோன்பென்று அறிவுறுத்தும் ஔவைசொல்லை—
"பொய்சொல்லக் கூடாது பாப்பாவென்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பாவென்றும்
தெய்வம் நமக்குத்துணை பாப்பாவென்றும்
தேசத்தைக் காத்தல்செய்" யென்றும்சொன்னான்!

இப்படியே பாரதியின் கவிதையெல்லாம்
எடுத்தெடுத்து ஆராய்ந்தால், காலம்நீளும் !
தப்பிதமாய்ப் பொறுமையினைச் சோதித்துங்கள்
தண்டனைக்கு ஆளாகித் தவித்திடாமல்
இப்பொழுதே இப்புனிதப் பணி முடித்து
ஏகிடுவேன்; அதற்கிடையில் ஒருகருத்து !
கற்பனையோ, உண்மையதோ, தீர்ப்புச்சொல்ல
காணிக்கை யாக்குகின்றேன்—கவனம்வைப்பீர் !

பாரதியென் றொருபெயர்நம் கலைவாணிக்குப்
பகர்வதுண்டு, அவளேதான் ஔவையாராய்ப்
பாரினிலே பிறந்தாளென்று ஒருபுராணப்
பார்வையுண்டு ; ஔவைக்கும் பாரதிக்கும்
சீருயர்ந்த யானைமுகத் தேவன்தன்பால்
சிறப்பாகப் பக்திசெய்யும் சிந்தையுண்டு !
காரியத்தைக் கணக்காய்ந்தால் ஔவையாரும்
கவியரசன் பாரதியும் ஒருவர்தானோ ?

ஏனிந்தச் சந்தேகம் எழுந்ததென்றால்
இருவரும்தான் ஐங்கரனை நினைந்துபக்தி
ஆனந்தப் பூசனைகள் புரிந்தார்;அந்த
ஐங்கரன்தான் இருவரையும் துதிக்கைகொண்டு
வானுர்ந்த கைலாயம் சேர்த்தானென்ற
வரலாற்றுக் கதைநிகழ்த்தும் வியப்பினாலே
நாலூர்ந்த சந்தேகம் தன்னை ஆய்ந்து
ஞானியர்கள் தான்தெளிந்து தீர்க்கவேண்டும் !

" பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காண்என்று கும்மியடி !"

—பாரதியார்



# பாரதி பார்வையிலே வள்ளுவர்

கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

(வெண்பா)

" உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் !"—என் அருமைத்
தாயே ! தமிழே ! தநயன் கவிவடிவில்
நீயே புகழ்தருவாய் நீடு !

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்,
பின்னைப் புதுமைக்கும் பின்னும் புதுமையதாய்
என்றும் இலங்கும் இனிய தமிழ்மொழியே !
என்னையும் ஓர்கவிஞன் என்றாக்கி முன்னிற்கும்
அன்னை மொழியே ! என் ஆருயிரே ! என்வணக்கம் !

இக்காலம் தமிழுக்கு நற்காலம் ஆட்சியிலே
எக்காலும் தமிழ்காப்பேன் எனும்உறுதி ஏந்தியவர்
ஆக்கப் பணியெல்லாம் ஊக்கமுற வெற்றிபெறும்
'டாக்டர்' கலைஞர் தமிழாட்சிக் கென்வணக்கம்.

எண்பது தாண்டும் இளைஞர் முருகேச
பண்டிதரே ! பண்பார்ந்த பாவலரே ! நல்வணக்கம்.

நெஞ்சில் உரங்கொண்ட - நேர்மைத் திறம்கொண்ட
அஞ்சாத் தமிழ்ச்சிங்கம் ஆழ்ந்தகன்ற பேரறிஞர்
சுந்தரமே ! உம்மைத் தொழுது கவிபாட
முந்துகிறேன் ! வெற்றி முறுக்கேற்ற வேண்டுகிறேன்.

'சின்னஞ் சிறுகிளியே, இந்நூல் வெளியிடுமென்
நண்பர் ஜெமினி கணேசற்கும் நல்வணக்கம்.

என்னுடனே பன்னிருவர் இன்கவிதை பாடுகிறார் ;
அன்னவர்க்கும் என்வணக்கம் ஆயிரம் ஆயிரமே.

பாடல் நயம்தேடும் பாசத்தால் இங்குவந்து
கூடியுள்ள அன்பர்களே ! கும்பிட்டேன் ; கைகொடுப்பீர் !

பாரதியின் பார்வையிலே வள்ளுவரா? பாரதியின்
போர்வையிலே வள்ளுவரா? புரிகில்லேன்! ஆகையினுல்
சிந்தனை முற்றித் திகைக்கின்ற வேளையிலே
வந்ததையா கொட்டாவி! மனக்கண்ணே மூடவில்லை!

"பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சி" என் கண்முன்னே
வெள்ளித் திரைப்படம்போல் வேடிக்கை காட்டியது!
துள்ளிக் குதித்தேன்! தொலைவில் கவனித்தேன்!

* * *

(என்ன காட்சி?)

பாரதியார் நிற்கின்ருர்! பாரதியின் பார்வையிலே
நேரெதிரே வந்தொருவர் நேசமிகப் பேசுகிருர் :-

(வந்தவர் கேட்கிருர் :)

"என்னைத் தெரிகிறதா? ஏறுநடை மாகவியே!
என்பெயரே வள்ளுவனர்!...... ஏனையா திகைக்கின்றீர்?"

ஓர் அதிர்ச்சி! ஓர் நெகிழ்ச்சி!
உள்ளத்தில் ஓர் புரட்சி!

பாரதியார் சற்றே பதற்றத்தை உள்ளடக்கி—
வந்தவரை நோக்கிமிக வாகாகக் கேட்கின்ருர் :—

பாரதி :

"பொய்யா மொழிநீரா? பொய்சொல்லு கின்றீரா?
ஐயாநீர் வள்ளுவரே யானல் இதுவரைக்கும்
ஓவியத்தில் பார்த்த உருவத்தைக் காணேமே!
தாடிஎங்கே? நீள்முடியின் சாயலெங்கே? இங்கென்னைத்
தேடிவந்து பேர்சொல்லித் திண்டாட வைப்பதும்ஏன்?"

வள்ளுவர் :

"கேட்டீர் ஒருகேள்வி நாட்டார்என் கோலத்தைத்
தாடி வகையுள்ள சந்யாசி போலமைத்த
வேடிக்கை ஓவியத்தால் மெய்யழிந்து போய்விடுமா?
"மழித்தலும் நீட்டலும் வேண்டாம்" எனவே
அழுத்தம் வாய்ந்த எழுத்தில் வடித்தேனே!
என்வாக்கை எண்ணுமல் ஏன்எனக்குத் தாடிவைத்தார்?"

வள்ளுவர் கேட்கிருர் : (repeat) " " " "

பாரதி :

"என்னய்யா கேள்விஇது? மண்ணுலகில் நாமெல்லாம்
சொன்ன படிநடக்கும் தூயவர்கள் எத்தனைபேர்?



மெய்நிலையை நேரில்போய் வீறுமிகச் சொன்னுலும்
வையகம்உம் தாடி மறக்காது! மாற்ருது!!

நம்மையெல்லாம் போற்றிடவே நானிலத்து மக்களெல்லாம்
விம்மித மாக விழாநடத்தும் காலம்இது!
மக்கள் மனத்தில் வரைந்திட்ட ஓவியத்தை
எக்காலும் மாற்ற இயலாத காரணத்தால்

(வள்ளுவரே!)

கேடில்லை! இன்றுமுதல் தாடி வளர்த்துவிடும்!
நாடு மதிக்கின்ற நற்கோலம் பூண்டுவிடும்!!"

வள்ளுவர் : (நகைத்து)

"சந்தர்ப்ப வாதியைப்போல் தந்திரமாய்ப் பேசுகிறீர்!
சிந்தை இனிக்கின்ற செய்திஒன்று கேட்டிருப்பீர்!
சென்னை தனில்உமக்குத் திருவிழாக் காண்கின்ருர்!
என்னை உம்மோ டிணைக்கின்ற பாவனையில்
பாரதியின் பார்வையிலே வள்ளுவரைப் பாரெனவே
யாரோ கவிபாடும் நேரமிது! யானேஉம்
பார்வையிலே வந்துவிட்டேன்! பாரதியே! உம்கவிதைப்
பார்வையிலே என்குறளின் சாரமதைக் கூறிடுவீர்!!"

பாரதி :

"வான்புகழ் கொண்டவரே! வள்ளுவரே! உம்பெருமை
நான்கண்டு போற்றியதை நானிலமே நன்கறியும்!
வையகம் எல்லாம் மகிழ்ந்தேற்கும் வண்ணத்தில்
மெய்நீதி தீட்டிவைத்த வித்தகரும் நீரன்ரே?
எப்பாலும் எக்காலும் ஏற்கும் குறள்நெறியை
அப்படியே என்வாயில் ஆங்காங்கே கூறியுள்ளேன் :—

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" என்று தீட்டியுள்ளீர்!
பொன்னுன இக்கருத்தை என்னுள்ளம் போற்றியதால்
சின்னக் குழந்தைக்கும் செப்பியுள்ளேன் நீதியினை :—

"சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!"

(அதுமட்டுமா?)

"காக்கை குருவி எங்கள் சாதி!—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்!"



பா—4

சாதிகளைக் கண்டித்துச் சாட்டை அடிகொடுக்கும்
நீதிகளை ஆங்காங்கு போதிக்கும் என்பாட்டு !

“ இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்” என்று நீர்கொண்ட
சீற்றத்தின் ஏற்றத்தைத் தேர்ந்து சிறிதேயான்
மாற்றி அமைத்த வரிகளினைக் கேளீரோ !:—

“ இனி ஒரு விதி செய்வோம் !—அதை
எந்த நாளும் காப்போம் !
தனி ஒருவனுக் குணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம் !”

“ பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற் றுல”கென்று சாற்றியுள்ளீர் !
இந்தக் குறட்கருத்தை ஏற்றுநான் பின்கண்ட
சந்தக் கவியாகத் தந்தேன் சரிதானே ?

“ பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே !
பகைவனுக் கருள்வாய் !

“ மறந்தும் பிறன்கேடு சூழற்க ! சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு” என்பது நும்வாக்கு ;
நல்ல கருத்தினைச் சொல்லும் இதோ என்பாட்டு :

“ தாழ்வு பிறர்க் கெண்ணத் தானழிவானென்ற
சாத்திரம் கேளாயோ ?—நன்னெஞ்சே !
சாத்திரம் கேளாயோ !”

“ இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்” என்ற பொன்னுரையை—

“ தின்னவரும் புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய் !”

என்னும்ஒரு பாட்டில் இசைத்துள்ளேன் கேட்டிருப்பீர் !

மேன்மைக் குறளின் “வெகுளாமை” நீதிகளை
நான் “சினத்தின் கேடெ”ன்ற நற்பாட்டில் ஏற்றியுள்ளேன் !

“ மனத்துக்கண் மாசில்லா வாழ்வே ! அறம்” என்றீர்—
“ மனம் வெளுக்க வழியில்லையே” மன்றுடிப் பாடியுள்ளேன் !

பத்துக் குறளில் உழவின் பயன் சொன்னீர் !
அத்தனைக்கும் சத்தாக ஆர்வ ஒலிகொடுத்தேன் :—



“ உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் !—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம் !”

இப்படி யெல்லாம் இனிய குறள்நெறியைத்
தப்பிதம் இல்லாமல் தந்தேன் சரிதானே ?”

**வள்ளுவர் :**

பார்வைத் தெளிவுடனே நேர்மைக் கவிபடைத்தீர்
பாரதியே ! உம்புகழைப் பாரெல்லாம் பாராட்டும் !”

**பாரதி :**

“ வள்ளுவரே ! முன்வந்து வாயாரப் பாராட்டும்
வெள்ளக் கருணைஎனை மெய்சிலிர்க்க வைக்கிறது !
அண்ணலே ! ஓர்ஐயம் ! தோற்றத்தில் நீர்அறிஞர்
அண்ணாவைப் போல்உள்ளீர் ! (நீர்) அண்ணாவா ? வள்ளுவரா ?”

“ உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் நல்லதுவே !
வள்ளுவரே அண்ணாவாம் ! அண்ணாவே வள்ளுவராம் !
முற்கால வள்ளுவரே பிற்கால அண்ணாவாய்
வந்துதித்தார் என்பதுபோல் வையகமே வாழ்த்தட்டும் !
வான்புகழ் கொண்டவரே ! வள்ளுவரே நீர்வாழ்க !

* * *

வான்அதிரப் பாரதியின் வாழ்த்தொலியைக் கேட்டவுடன்
கண்விழித்துப் பார்த்தேன் ! கனவு கலைந்ததுவே !
இன்பக் கனவின் எழுச்சியைப் பாடியதால்
என்கவிதைப் பங்கும் இனிதே முடிந்ததுவே !

---

“ யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ;
உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை”

—பாரதியார்

# பாரதி பார்வையில் கம்பன்

கவிஞர் எழில் முதல்வன், எம். ஏ.

(தமிழ் வாழ்த்து)

ஓங்கல்இடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

(தலைவர் வாழ்த்து)

ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாத
சீரிளமைத் திறம்வியந்த சுந்தரரின் பிறங்கடையே !
வன்றொண்டர் சுந்தரர்போல் வழிமாறிப் போகாமல்
'என்றொண்டன் என்றொண்டன்' என்றேநம் செந்தமிழ்த்தாய்
போற்றும் வகைவாழும் புலவர் பெருந்தகையே !
ஏற்றம் மிகுகுணங்கள் இயல்பாய் அமைந்தவரே !
வாளியைப்போல் சொற்கணைகள் வலிக்கு திறத்த'தமிழ்
ஆளிய'ரே ! என்நெஞ்சை அன்பால் பிணித்தவரே !
மேலாம் தமிழ்வளர்க்கும் மெ. சுந்தரப் பெரியோய் !
நூலறிந்த கணக்காய, நும்மை வணங்குகின்றேன் !

(கவிஞர்க்கும் விழா நடத்துவோர்க்கும் வாழ்த்து)

அசையளந்து சீர்போற்றித் தளைகள் பூட்டி
அடிதூக்கித் தொடைகாட்டிப் பாட்டை மீட்டும்
இசையளந்த கவிஞர்களே ! இனிக்கும் சொற்கள்
எடுத்தெடுத்துத் தொடுக்கின்ற பாவா ணர்காள் !
திசையளந்த புகழ்முகந்த பார திக்கு
திருவிழாச்செய் பாரதியின் சங்கத் தாரே !
நசையளந்த உவகையொடு கவிதை கேட்க
நண்ணிவந்த பொதுமக்காள் ! வணங்கு கின்றேன் !

(அவையடக்கம்)

புவிமுதல்வர் எல்லோரும் போற்றிப் புகழ்கின்ற
கவிமுதல்வன் ; நல்ல கலைமுதல்வன் ; சொல்செய்யும்
தொழில்முதல்வ னும்கம்பன் தூய புகழ்பாட
எழில்முதல்வன் என்னும் இளைஞன்யான் வந்துள்ளேன் ;



மந்திரச்சொல் புணர்த்தமைத்து மயக்கவறி யேன்எனினும்
சுந்தரனார் மாணவன்நான் ; ஆதலினால் தெம்புடனே
பாட்டரங்கம் ஏறவந்தேன் ; பாங்குடனே அவையோரே
கேட்டு மகிழ்வீர் கிளர்ந்து.

**(பாரதி பார்வையில்—கம்பன்)**

புல்லெல்லாம் நெல்வேடம் போட்ட நாளில்
போலிஎல்லாம் அசலாகத் திரிந்த நாளில்
வெல்லும்சொல் கோத்தெடுத்துப் படிப்போர்—மூக்கில்
விரல்வைக்கப் பாடியவன் ; மாலை துண்டு,
பல்லக்கு, பணமுடிச்சு, இதுபோல் எந்தப்
பரிசுக்கும் பாடாமல், நாட்டு மக்கள்
நல்வாழ்வுக் கேகவிதை பாடிப் பாடி
நலிந்தார்யார் என்றால்பா ரதியே என்பேன் !

பாரதியோர் பெருங்கவிஞன் ; சிதில மாகிப்
பலிசிழந்து திருவாரூர்த் தேர்போல் நின்ற
பா—ரதத்தைப் புதுப்பித்து ஓட்டிக் காட்டி
பாராட்டைப் பெற்றமகன் ; உரிமைக் காக
ஊரதிரக் குரல்எழுப்பி, ஆன்ம நேய
உறவுக்குக் கைகொடுத்தோன் ; கம்பன் என்னும்
தேரழுந்தூர்த் திருமகனின் செய்யுள் நுட்பத்
திறன்கண்டு போற்றியவன் ; அழுக்கா றில்லான் !

கட்டளைக்கல் அல்லாமல் வேறோர் செங்கல்
கண்டிடுமா பொன்மாற்றை ? தொடுக்கும் பாட்டில்
ஒட்டியுள்ள திறம்தரத்தைக் கவிநெஞ் சில்லா
ஊமையர்கள் அறிவாரா ? வாழ்வில் இன்பப்
பட்டாரே பிறர்துயரம் அறியக் கூடும்
பாம்பொன்றே பாம்பின்கால் அறியும் ! கம்பன்
எட்டியுள்ள உயரத்தைத் துலாக்கோல் நெஞ்சால்
எடைபோட்டுப் பாரதியார் எடுத்துச் சொன்னார் !

கிளிவயிற்றைத் 'தாமரையின் இலைபோல்' என்று
கிளத்தியவன்—பெருங்கவிஞன் காளி தாசன்
ஒளிச்சுடரைக் கவிமனத்திற் குவமை காட்டி
உரைத்தவனோ மேல்நாட்டு P.B. Shelly
வளமான இவர்போன்ற புலவோர் நூலை
வடிகட்டிப் படித்தவர்பா ரதியார் ; அன்னார்
உளமாரக் கம்பனையே முதலில் வைத்து
உரைமாலை புனைகின்றார் ; வேறென் வேண்டும் ?

தென்னிலங்கை ராவணர்கோன் பெருவீ ரத்தைத்
திடநெஞ்சன் வாலியினை மாம ரத்தின்
பின்னிருந்து வஞ்சகத்தால் கொன்ற ராமன்
பேடிமையைக் குகன்என்னும் கங்கை வேடன்
அன்புளத்தை, ஜானகியின் துயர வாழ்வை—
அடடாவோ! நம்கம்பன் பாடும் போது
'என்னைகாண்! இதுவன்றோ கவிதை' என்று
எண்ணமெழும் ; அதைக்கேட்டால் கனியும் கல்லும் !

ஓடிவந்து சரணடைந்து முன்னே நிற்கும்
ஒவ்வொருசொல் லையும்எடுத்து மாற்றுப் பார்த்து,
தேடிவரும் கற்பனையைக் குழைத்து, வார்த்தைச்
சிறைதனிலே உணர்ச்சிகளைக் கைதி யாக்கிப்
பாடுதற்கும் அரிதான எல்லை யில்லா
பண்பினையும் குறியாலே காட்டும் கம்பன்
வாடாத பெருந்திறத்தைச் சிறுசெந் நாவால்
வண்ணித்தல் சிறியேனால் ஒல்லும் கொல்லோ !

களிப்பூட்டும் கள்ளினையும், நிமிர்ந்து நின்று
கனன்றெரியும் தீயினையும், அசைந்து வீசும்
வளியென்னும் காற்றினையும் அகண்ட கார
வானையும்ஒன் றாய்ச்சேர்த்துக் குழைத்துக் கூட்டி.
ஒளிகுன்றாக் காவியத்தைக் கம்பன் தந்தான் !
உலகைத்தன் சொல்வலையில் சிக்க வைத்தான் !
பளிங்குமலை போன்றிருக்கும் தமிழக் கம்பன்
பாவியத்திற் கீடுண்டா ? சொல்வீர் மாதோ ?

பொன்னி அமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவும் திருநாடு தமிழ்நாடு ;

அரைக்க மணக்கின்ற ஆரம் விளைகின்ற
நிரைத்த பொதியமலை நிற்கும் தமிழ்நாடு

நிலத்துக் கணியான நெல்லும் கரும்பும்
வலத்தும் இடத்தும் வளர்ந்தோங்கும் திருநாடு

வாழையிலை போட்டு வருவாரைக் கையமர்த்தித்
தோழமையைக் காட்டித் துயர்தணிக்கும் வளநாடு ;

முழங்கைவழி நெய்யொழுக முக்கனியும் பாற்சோறும்
வழங்கி விருந்தோம்பும் வளமார் பெருநாடு.

கல்லில் கவிசெய்து, கனிஇசையில் நடம்காட்டி.
சொல்லில் சிலைவடிக்கும் சூழ்கலைகள் நிறைநாடு ;



நிற்கும் பகைமறவர் நெடிய தலைநெரிய
கற்கள் சுமக்கவைத்துக் காட்டும் மறவீரர்

ஆயிரவர் வாழும் அழகுத் திருநாடு ;
தாயகமாம் இந்தத் தமிழ்நாடு இன்னபிற

கோடிப் புகழ்ப்பெருமை கொண்டிருந்த தென்றாலும்
பாடிப் பறந்தகுயில் பாரதியார் சொல்லுகிறார் :—

கல்வி சிறந்திட்ட கம்பன் பிறந்ததனால்
வெல்ல முடியாத வீறுபுகழ் கொண்டதுவாம் :—

" கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு "

கவிக்கம்ப னுக்குப்பின் வந்தோ ரெல்லாம்
கலம்பகமந் தாதியுலா யமகம் என்று
செவிகைப்பப் பாட்டெழுதிப் பனையோ லைக்குச்
சீக்கிரத்தில் பஞ்சம்வரச் செய்திட் டார்கள்
தவிக்கின்ற வாய்க்குத்தண் ணீர்போல் பாட்டுத்
தாராமல் எதைஎதையோ திணறப் பாடிப்
புவிமணக்கும் தீந்தமிழின் சீர்கெ டுத்தார் ;
பொலிவில்லா இலைமாலை தொடுக்க லானார்

இதையறிந்த பாரதியார்
மனமுளைந்தார் ; கம்பனுடன்
கவிபோ யிற்றே
விதையவிந்து போயிற்றே
வினைவென்றும் என்றுமனம்
வெகுள லானார் !

சடைச்செந்நெல் நிலம்நோக்கிச் சாய்ந்துவிழ அருகிருக்கும்
மடைப்புனலின் கணுக்கரும்பு மனமுவந்து கைகொடுக்கும்

சேற்றுவயல் பலநிறைந்த தஞ்சை வளமண்ணில்
சோற்று வளம்குறையாத தூய சடையப்பன்

கொடுத்துக் கரம்சிவந்த குன்றனைய மாண்புதனை
எடுத்தெடுத்துப் பேசி இதயம் சிலிர்க்கின்ற

கம்பனை நம் புதுச்சேரி-கவிகண்டார் ; கண்டவுடன்
'கம்பனென்ற பேர்கொண்ட மானுடன்'என் றேபுகழ்ந்து

வாய்கசந்து தித்திக்க வாயாரப் பாடுகிறார் ;
தாய்முலைப்பால் எண்ணிமனம் தழைக்கும் மகவினைப்போல் !—

பண்டொருநாள் கிரேக்கத்தில் பழுத்தபழம் ஒத்தஒரு முதிய ஞானி
விண்விளக்கு ஒளிநிழலை விரிக்கின்ற பகற்போதில் விருப்ப மின்றிக்
கண்சிமிட்டும் அகலொன்றைக் கையேந்தி கால்நோவ நடந்திட் டாராம் !
கண்டோர்கள் வினவியக்கால் 'மனிதனை நான் தேடுகிறேன்' எனச்சொன் னாராம்!

திருவொற்றி யூர்நகரத் தேர்நிழலில் ஒருபெரியார் தினமும் நின்று
வருவோரைப் போவோரை வலக்கரத்தால்—விரல்நீட்டிச் சுட்டிக் காட்டி
'நரி'என்றும் 'நாய்'என்றும் நவின்றாராம்; இராமலிங்கர் நண்ணும் போது
'ஒருமனிதன் இவனேகாண்' எனக்கூறி உவகையினால் உளம்பூத் தாராம்.

மானுடத்தின் வெற்றியினை மனக்கற்பின் மாண்புதனை மணக்கப் பாடி
வானடைந்த கம்பனைமா னிடனென்றே வாழ்த்துவது பொருத்தம் தானே ?
கூனடையாக் காவியத்தைக் கொழிதமிழில் வடித்தெடுத்துக் கொடுத்த தாலே
தானடைந்த புகழையெல்லாம் தமிழடைந்த புகழாக்கித் தந்தான் கம்பன் !

தலைப்பாகை பாரதியார் கம்பன் செய்த
தமிழ்ப்பாட்டில் கொண்டிருந்த மோகம்-வேகம்
மலையளவு பெரிதாகும்; இன்னும் சொன்னால்
மலையைவிடப் பெரிதாகும்; இரண்டல் லாத
நிலையினை'அத் வைத'மென்பார்; அந்த மேலாம்
நிலையினைநம் பாரதியால் காணு கின்றோம்;
கலைக்கம்பன் முத்தமிழில் இசைத்தி ருக்கும்
'கவியெல்லாம் நானே'என் றிறுமாக் கின்றார் !

( " கம்பன் இசைத்த கவியெல்லாம் நான் " )

பாரதியின் பார்வையிலே பட்ட கருத்தையெலாம்
ஓரளவு சொன்னேன்; உவந்தேற்ற நல்லோரே
எல்லோர்க்கும் நன்றி இவண்.

" ஒளிப டைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிப டைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா "

— பாரதியார்



# பாரதி பார்வையில் சிவாஜி

கவிஞர் இரா. பூங்குன்றன்

சந்தத் தமிழின் சாற்றைப் பிழிந்து
'மைந்தா, பெறுக! வாழ்வெலாம் போற்றுக!'
என்றெனை வளர்த்தே இன்றிங் கனுப்பிய
பாரிற் சிறந்த பச்சை யப்பர்
சீரினைப் போற்றிச் சிறந்த தலைவர்
பேரினைப் போற்றிப் பெருந்திரள் ஆக
வந்த உம்மையும் வணங்கி
தந்தேன் சுவைப்பீர், செந்தமிழ்ப் பாட்டே!

"பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வர் இந் நினைவகற் றாதீர்!"—என

மராட்டிய நாட்டின் மன்னர் மன்னன்
சிவாஜியின் உரையாய்ச் செப்பிய கவிஞன்—

பைந்தமிழ்ச் செல்வன், பண்புயர் புலவன்,
விந்தைப் பாடலை விரைந்து புனைந்து
சொந்த வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்டு—
நந்தாப் புகழைப் பெருக்கிக் கொண்ட
பாரதி என்றன் பாவின் நாயகன்!

பூக்களிலே உயர்ந்ததென்றால் மல்லிப்பூதான் ;
புனல்நீரில் உயர்ந்ததென்றால் பொன்னித் தண்ணீர்!
வாக்கினிலே உயர்ந்தவரோ வாதவூரர்,
வறுமையிலும் உயர்ந்தவனோ குமணவள்ளல் !
ஊக்கத்தில் உயர்ந்தவரோ அறிஞர் அண்ணா!
உயர்நெறிதந் துயர்ந்தவரோ வள்ளு வன்தான் !
பாக்களிலே உயர்ந்ததுபா ரதியின் பாட்டு;
பார்மீதில் அவன்போல எவனும் இல்லை!

பாரதி பார்வை பாவலன் பார்வை!
சீரதில் இருக்கும்; சிந்தனை இருக்கும்!
கருத்துப் பெருக்கம் கவிதையில் சுரக்கும்!
வீர சிவாஜியை விரும்பிப் போற்றித்
தீரன் பாரதி தீட்டிய பாடலைப்—
பாரதி யின்கவிப் பார்வையில் பார்ப்போம்!

வெள்ளை நிறக் கொக்குகளை இந்த நாட்டு
விரிவானம் கண்டதொரு காலம், அந்தக்
கள்ளமனம் பாரதத்தைச் சூறையாடக்
காலூன்றி நிற்பதற்கு நினைத்த வேளை,
உள்ளமெலாம் தொண்டாகத் திலகர் காந்தி
உரிமைக்குப் போராடும் போது, வீரம்
துள்ளுகின்ற பாரதியின் பாடல் மக்கள்
தூக்கத்தைத் துரத்தியது, எழுச்சி தந்து!

மொகலாயன் அவுரங்க சீப்பு நாடு
முழுவதையும் தன்கோலின் கீழே காண
அகலக்கால் வைத்திட்டான் அப்போ தங்கே
அணியணியாய் வீரரைத் திரட்டி நின்று
பகலிரவு பாராமல் போரைச் செய்து
பாராண்ட பெருமன்னன் சிவாஜி மன்னன்;
இகல்வேந்தன் தனிவீரம் கவிதை வேந்தன்
இதயத்தை ஈர்த்ததில் வியப்பும் உண்டோ!

நெற்றியிலே குங்குமமாய்த் தோன்றி, நன்செய்
நிலத்தினிலே நெற்பயிராய் வளர்ந்து, தெய்வப்
பற்றினிலே தளராத ஆர்வம் கொண்டு
'பவானிஜெய் பவானி'என வணக்கம் செய்து,
முற்றாத இளம்வயதில் ஜீஜா தாயின்
முலைப்பாலில் வீரத்தைச் சுவைத்த வேந்தன்
பற்றாத கொத்தளமும் கோட்டை ஏதும்
பாரதத்தில் பெருநிலத்தில் எங்கே உண்டு!

எதிரிருக்கும் ஒளிகாணக் கண்கள் தேவை;
இணையில்லாச் சுகம்காணப் பெண்கள் தேவை!
நதிப்பெருக்கில் நலம்காணக் கரைகள் தேவை;
நன்னூலின் பொருள்காண உரைகள் தேவை!
விதிநீங்கிக் கதிகாண முயற்சி தேவை;
விலையில்லாக் கவிகாண பயிற்சி தேவை!
மதியோடு மனிதனுக்கு வீரம் தேவை;
மாவீரன், மணிக்கவிஞன் இதனைச் சொன்னான்!

மாபெரும் வீரன் மராட்டியர் தலைவன்
மாபெரும் கவிஞன் மாத்தமிழ் பாரதி!

பாரதத் தலைவனைப் பாரதி பாடி யதேன்?

தெய்வம் போற்றினான் தீரன் சிவாஜி!
தாயை வணங்கினான் தனயன் சிவாஜி!



மொழியைப் பேணினான் மன்னன் சிவாஜி!
குருவழி நடந்தான் கொள்கைத் தலைவன்!
பெண்மைக் கிரங்கினான் பெரும்புகழ் சிவாஜி!
வீரம் விளைத்தான் ஆண்மை சிவாஜி!

அதனால்

பாரதி பாடினான் பாரத மன்னனை!

பெண்மையைப் போற்றிப் பெருமைப் படுத்தும்
கண்ணியம் கொண்டோன்; கடமை உணர்ந்தோன்!
சத்ர பதியாம் சிவாஜி மன்னன்!
கல்யாண் கோட்டையைக் கவர்ந்த போது
முல்லா அகமதாம் முசுலீம் தலைவனின்
மருமகள் தன்னை மன்னன் முன்னே
கரும்பென நிறுத்தக் கண்டும் வணங்கி

'அழகே! அமுதே! அழியாத் திருவே!
விழிகள் மயக்கும் வியப்புறும் பெண்ணே!
என்னரும் தாயும் எழில்மிகும் உனைப்போல்
அன்றிருந் திருந்தால் யானும் அழகாய்ப்
பிறந்திருப் பேனே! பிழையென் செய்தேன்!"
என்றவள் அழகை ஏற்றிப் புகழ்ந்தான்,
அன்றே அவளை விடுதலை செய்தான்;
நன்மகன் சிவாஜி நானில வேந்தன்!
பெண்மையை இங்ஙனம் போற்றிய அதனால்
பாரதி இவனைப் பாடினன் என்பேன்!

சிவாஜியைத் தெரியுமா சிறந்த வீரன்;
அட்டைக் கோட்டையை அட்டைக் கத்தியால்
நெட்டித் தள்ளிய வீரன் அல்லன்!
எஃகுக் கோட்டையை எஃகுக் கத்தியால்
இடித்துத் தள்ளிய எழில்மிகு வீரன்!

அவாமிகக் கொண்ட அப்சல் கானைப்
புலிநகம் கொண்டு புரட்டி எடுத்துக்
கிலிகொளச் செய்து பிணமாய்ப் புவியில்
உருட்டி விட்ட உயர்ந்த வீரன்!

கோட்டையை வீழ்த்திக் கொடியை நாட்ட
சேட்டைகள் புரிந்த செயிஷ்ட கானை
நீட்டு விரல்கள் நிலத்தில் வீழ
வாட்பெரும் போரால் வளைத்து வீழ்த்தி
நாட்பெரும் புகழை நாட்டிய வீரன்!

மொகலாய வானில் முகிழ்த்து வந்த—
அவுரங்க சீப்பெனும் அந்திச் சூரியனை
அதட்டிக் கேட்ட ஆரிய வீரன் !
சிவாஜியை அறிவீர் சிறந்த வீரன் !

சிவாஜியைத் தெரியுமா சிறந்த பக்தன் !
பவானியை வணங்கிய பரம பக்தன் !
திரையின் மறைவிலோ தெருவின் நடுவிலோ
கடவுளைப் பார்த்துக் 'கல்' எனச் சொல்லா
சிவாஜியைத் தெரியுமா சிறந்த பக்தன் !

வெற்றிகள் எல்லாம் வீர பவானிக்
கொற்றவை அவளே கொடுத்தனள் என்றவன் !
வில்லினைக் கொண்டு வீரம் காட்டிய
சொல்லரும் விசயனைச் சுந்தர ராமனைக்
கதையில் கேட்டுக் கருத்தில் கொண்டவன் ;
இணையிலா பக்தர் இராம தாசரைத்
துணையாய்க் கொண்டவன் தூய சிவாஜி !
சிவாஜியை அறிவீர் சிறந்த பக்தன் !

சிவாஜியைத் தெரியுமா சிறந்த நடிகன் !
அவுரங்க ஜீப்பின் ஆக்ரா நகரில்
கைதியாய்க் கிடந்த கதையைக் கேட்டால்
மெய்தான் நடிகனென மெச்சுவீர் நன்றே !

காவல் மிகுந்த கட்டட மொன்றில்
ஏவல் செய்ய எவரு மின்றி !
தந்தை சிவாஜி மகன்சம் பாஜியுடன்
நொந்த மனத்தோ டிருந்தனன் நெடுநாள் !
விடுதலை நாள்தான் விரும்பினுல் வருமோ ?

திடுமென ஒருநாள் திகைக்கும் வண்ணம்
வெளிவரும் திட்டம் விரைவில் தீட்டினுன் ;
இருக்கும் இடத்தில் இனிப்புக் கூடை—(தினம்)
வருவதும் போவதும் மன்னன் கண்டான் !

ஆடையில் மறைந்து அழகிய நடிகன்
மேடையில் திரையில் வருவது போல
கூடையில் மறைந்து குவலய வேந்தன்
சாடையாய் மகனுடன் தப்பியும் விட்டான்!

அரண்மனைக் காவலர் அறியா வண்ணம்
மறைந்து தப்பிய தன்மை
சிவாஜியை நடிகனுய்க் காட்டுவ தன்றோ ?



பாரத வீரன் பலமிகு சிவாஜி
பாரதி பார்வையில் பட்ட தென்ன ?

சிங்கக் கோட்டையாம் சீரிய கோட்டையில்
தங்கத் தலைவன் தானு ஜியுடன்
செய்த போர்தான் செகம்புகழ்க் கவிஞன்
பாரதி பார்வையில் பட்ட தாகும் !

முந்நூ ருண்டுகட்கு முன்னுல் ஒருநாள் !
வெந்தழல் போன்ற வெஞ்சின வீரரைத்
துணையாய்க் கொண்டு தொடர்ந்த போரே
சரித்திரம் புகழும் 'சிங்காட்' போராம் ! (Sinhgad)

அன்னை ஜீஜா அன்பு மகனிடம்
" என்னரும் புதல்வ ! எழில்மிகு செல்வ !
இந்தக் கோட்டை எதிரி வசமாய்
இருப்ப தெனக்குச் சம்மத மில்லை
நமது கோட்டை ; நமக்கிது உடைமை !
எப்படி யேனும் இதனை மீட்டிடு !
இதுவென் ஆசை ! இதுவென் ஆணை !
வீரமே ! குலத்தின் விளக்கே ! புறப்படு !"
என்றனள் பழமையை எண்ணி வருந்தினள் !"

அப்போது
சைனியம் கூட்டிச் சிவாஜி பேசிய
வீர உரையே விடுதலைக் கவிஞன்
பாரதி நமக்குப் பாடித் தந்தது !

" பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வர்இந் நினைவகற் றுதீர் !

" மொக்குள் தோன்றி முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம் "

" வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்
பாதமும் பொறுப்பளோ பாரத தேவி !

" தாய்பிறன் கைப்படச் சகிப்ப வனுகி
நாயென வாழ்வோன் நமரில்இங் குளனே ?

" போரெனில் இதுபோர் ; புண்ணிய திருப்போர் !
பாரினில் இதுபோல் பார்த்திடற் கெளிதோ?"

" நெஞ்சகக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சக மழிக்கும் மாதவம் புரிவம்யாம்.

" பேடிமை அகற்று ! நின் பெருமையை மறந்திடேல்,
ஈடிலாப் புகழினுய், எழுகவோ எழுக ! "—எனப்
போர்க்குரல் கொடுத்துப் புதுப்புனல் போல
ஆர்த்தனன் சிவாஜி அழிந்தது படையென !"

அதுபோல் பாரதி—

அந்நியர் நாட்டை ஆள்வதா ! வீரரே
அன்னையைக் காக்க எழுவீர்' என்றனன் !

அவுரங்க சீப்பெனும் அந்நியன் போல
ஆங்கி லேய அந்நியன் வந்தான் ;

சத்ர பதியாம் சிவாஜியைப் போல
சித்ர கவியாய்ச் சிறந்த பாரதி
முரசு கொட்டினன் முத்தமிழ்ப் பாட்டில் !

பார்ப்பனர் காலில் பணிந்த சிவாஜி
பட்ட துயரம் மெத்த உண்டு—
அதனைக் கண்டே அறிஞர் அண்ணு
சிவாஜி கண்ட இந்துசாம் ராஜ்யம்
என்னும் நாடகம் எழுதிய தறிவோம் !

வியத்தகு வெற்றி வீரன் சிவாஜி
அறிஞர் அண்ணு அவர்களைக் கவர்ந்ததுபோல்
கவிஞர் பாரதியைக் கவர்ந்தது வியப்பிலை !

வீரம் நாட்டில் விளைதல் வேண்டும்
நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும்
வஞ்சனை இல்லா வாழ்வும் வளமும்
இத்தரை மீதில் இருவரும்-காண
வித்திய விதையே வீரக் கதையாம் !

" எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்

திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்."

—பாரதியார்



# பாரதி பார்வையில் தாயுமானுர்

கவிஞர் நெல்லை அருள்மணி

குமரனைக் கும்பிட்டு வந்தேனய்யா—இந்தக்
கூட்டத்தில் பாடி மகிழ்ந்திடவே
அமரகவி என்னைக் கூட்டிவந்தான்—காளி
அன்னை பராசக்தி அருள்புரிந்தாள்.

அங்கிங் கெனுதபடி
எங்கும் நிறைந்தவனைத்
தங்கத் தவச்சுடரை
தங்க வைத்தவரார்
தாயுமானத் தேவனன்ருே

சமரச சுத்த நிலை
சார்ந்துவரப் பாலித்த
எமையாளும் தவச்செல்வர்
ஏற்றமிகும் தாயுமானுர்

பாட்டுக்குப் பாட்டெடுத்த
பாரதியார் பார்வையிலே
காட்டாத தெய்வமில்லை
கனியாத அருளுமில்லை
சீட்டாக எழுதிவிட்டான்
ஸ்ரீராஜ பூபதிக்கு
தேட்டமாய்க் கவிநெய்தான்
தாயுமானத் தேவனுக்கு

இகத்திலும் பரத்திலுமே
இறவாமல் தமிழுடனே
இருக்கவுளம் கொண்டிருந்த
என்னுயிரே ! தாயுமானு !
சுகத்திலும்மெய்ச் சுகாதீத
சுத்தநிலை கொண்டவனே
சுடர்மதிபோல் இருப்பாய்நீ
எனவாழ்த்தி மகிழ்ந்தானே

உதிக்கின்ற சூரியனை
ஒருநோக்கில் அளக்கலாமோ
பதிக்கன்ற ஒருமுத்தால்
பெருங்கடலை நிறுக்கலாமோ.
மதிக்கின்ற மின்னினத்தை
மறுபோக்கில் வைக்கலாமோ
இதயத்தில் கோடிக்கோடி
இதயத்தைத் தொடுத்துநின்ற
எட்டையபுரக் கவிஞன்
எட்டாத பொருளுமுண்டோ ?

தாயுமானுர்

பனிமலரைக் கொய்திடவும்
பாவிநெஞ்சம் அஞ்சுதய்யா
இனியவனே என்னிறைவா
அதனூடும் நீயிருந்தாய்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆகுமோர் ஆட்டமய்யா
நாட்டமற எந்தைசுத்த
ஞானவெளி காண்பேனே

ஆழாழிக்கரையின்றி நிற்குதய்யா
ஆலாலம் ஓரமுதம் ஆனதய்யா
தாழாமல் அண்டங்கள் ஈர்த்துஈர்த்து
தளராமல் நிலையாகச் சுற்றுதய்யா
பாழான என்மனமோ குவியவொரு
தந்திரந்தான் எனக்கருமை ஆனதய்யா
பார்க்குமிடம் எங்குமே நீக்கமறப்
பரிமளிக்கும் பரிபூர்ண ஆனந்தமே

பூரணன் திருவடிக்கே பூரணமாய் அர்ப்பணித்த
புனிதமாக் கவிஞன்சொல்லும் புனிதமாய் நின்றதாலே
ஆரணக் கணங்கள்போற்றும் ஆனந்தப் பூரணத்தை
அருளாளர் தாயுமானுர் அகம்குளிரப் பாடலானுர்

ஏழை எளியவர்கள்
ஏலாத முதியவர்கள்
ஆளும் திறன் பெற்ருேர்
அடிவருடும் மனம் பெற்ருேர்
பாழும் வயிற்ருலே
பண்பிழந்த பொருட்கயவர்
வாழும் வகையுண்டோ
எந்தையே அறியேனே



இன்புற் றிருந்திடவே நினைப்பேனே அல்லாமல்
வேருென்றும் அறியேனே விடையேறும் பெருமானே

பாடிக் களியாட்டம் ஆடும் தாயுமானுர்
கூடிக் கலந்திடவே குயிலாளன் கவியாலே

" எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் "

என்று முரசறைந்தான் எல்லாரும் இன்புறவே

காணிநிலம் கேட்ட காதற்கவி சொன்னுன்
தூணில் அழகுடனே தூய்யதோர் மாளிகையும்
பத்திரண்டு தென்னையுடன் முத்துச் சுடர்நிலவும்
கத்தும் குயில்மொழியும் சித்தம் குளிர்தென்றல்
பத்தினிப் பாட்டுடனே பக்கத்தில் காவல்கேட்டான்
மெத்தவரும் ஆசைகளை நிறுத்திடவோர் அளவையில்லை
இத்தரையின் மாந்தரெல்லாம் ஏழுவழிப் போனதெல்லாம்
கொத்தவரும் ஆசையாலே கொள்துயரம் காசதாலே

அதனுல்தான்

" ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாம் கட்டி
ஆளினும் கடல்மீதிலே ஆணைசெலவே நினைவர் "

என்றுரைத்த தாயுமானுர் திருத்தாளை முப்பொழுதும்
ஏத்திச் சுகம்பெறவே இசைக்கவியோர் ஆணையிட்டான்
நினைத்தபொருள் கைவந்தும் நேர்அடுத்தப் பொருள்விரும்பும்

மனத்தில்வரும் ஆசைவெள்ளம் அம்மம்மா தடுக்கவேண்டும்
அனைத்தையும் வெல்லவேண்டின் ஆசையை வெல்லவேண்டும்
எனைத்தானும் இதனைக்கொண்டால் அனைத்தானும் புகழேஅம்மா
ஏகமாய் இருக்கும் நாளே இறைவனே டிருக்கும்நாளே

பசிதீரஉண்பதுவும் பலகாலும் உறங்குவதும்
உள்ளதே போதுமென்றே ஒன்றைவிட்டு ஒன்றைத்தாவும்
பாசக்கடல் வேண்டாம் பரிசுத்த நிலையருள்வாய்
பராபரமே என்றுரைத்தார் பழமான தாயுமானுர்

அதனையே,

வேடிக்கை மனிதரைப்போல் வீழாதப் பாரதிதான்
தேடிச்சோறு தின்று சின்னக்கதைகள் பேசி
வாடித்துன்புழன்று வாடும் செயல்கள்செய்து

கூடிக் கிழமாகிக் கூற்றுக் கிரையாகும்
கேடான நிலைவேண்டாம் கலிசாடும் திறனருள்வாய்
காளியே சாமுண்டி என்ராணி பராசக்தியே

வல்லான் வகுத்ததே வாய்க்காலா
வழக்கிது அழிக்கவோர் வழியில்லையா
பொல்லாத சேய்களைத் தாய்தள்ளவோ
பொய்வார்த்தை உன்பாலும் நான் சொல்லவோ
கல்லான என்மனம்ஏன் உருகவில்லை
கருணைமனம் உன்பால்ஏன் பெருகவில்லை

எனச்சொன்ன தவமன்னர் வழியே நின்று
மனம்வெம்பிக் கவி டன்னன்,

“ மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ—புலனில்
வாழ்க்கை இனியுண்டோ—நம்மிலந்த
வாழ்க்கை இனியுண்டோ ”

இல்லைஇல்லைஎன்று சொல்லநம்மை வைத்தான்
நெல்லைக் கவியல்லவோ வெல்லக் கவியல்லவோ
பிச்சையரைக் கிரீடப்பதி ஆக்கச்சொன்னார்
பெருமானார் தாயுமானார் தனதுபாட்டில்
மிச்சமிலாத் தவமானார் மொழிந்த கூற்றை
மீசையுள்ள வீரக்கவி ஆர்ப்பரித்தே
அச்சமதை தூக்கியெறி! ஆண்மையோடே
ஆயிரம் தொழிலியற்று பொய்யொழித்தே
இச்சகத்தில் அமரநிலை வந்துகூடும்
இடரென்ப திடறிவிழும் உண்மைமாதோ

பாரதி

சோற்றுப் பருக்கைக்கு ஏவல்செய்யும் அந்த
சொத்தை மனிதரைத் தள்ளிவைத்து
ஆற்றுப் பெருக்கெனப் பாடிவைத்தான் கவி
அத்தனையும் முத்துமாலை ஐயா

சின்னஞ்சிறுதமிழ்ச் சொல்லெடுத்து—வண்ணச்
சித்திர வட்டங்கள் போட்டுவந்தான்
எண்ணத்திரள் வந்து துள்ளும்ஐயா— தமிழ்
எத்தனையோ ஜாலம் செய்யுமய்யா.



கனவுகள் ஆயிரம் கண்டிருந்தான்—நம்மைக்
காணவைத்து அவன் மேலிருந்தான்
தினமும் அவன்பேர் நினைந்திடிலோ—புதுத்
தீரம்வரும் சிறுநேரத்திலே

சுந்தரத் தலைமையிலே
செந்தமிழ் கவிதொடுத்து
வந்திட அழைத்த சங்கம்
சந்ததம் வாழி! வாழி!

கலைவாணர் திருவரங்கம்
கவிக்கூட்டக் கலையரங்கம்
நிலையாகப் பேரமைத்த
நல்லரசு நாளும் வாழி!

“ தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வுகொல்
மானமொன் றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற் றிருக்க எவன்கொலோ விரும்புவான்
தாய்ப்பிறன் கைப்படச் சகிப்பவ னாகி
நாயென வாழ்வோன் நமரிலிங் குளனே ”

— பாரதியார்

# பாரதி பார்வையில் திலகர்

கவிஞர் மதிவண்ணன்

கற்பனையின் குழந்தைகளாம் கவிதை தன்னைக்
காகிதத்துத் தொட்டிலிலே ஆட விட்டுப்
பொற்புடனே கண்வளரும் அழகைத் தாயின்
பொறுமையுடன் காண்கின்ற கவிஞர் சூழ்ந்த
நற்கவிதை அரங்கத்தில், நானு மென்றன்
நெஞ்சமெனும் மலைதடுத்து நினைவு மேகம்
கொட்டுகிற சொல்மழையில் நனைய வேண்டி
குரல்கொடுத்தேன் ! குடைவேண்டாம் ! வருக நீவிர் !

நினைவுகளே இல்லாத நெஞ்சம் போல
நீண்டிருந்த பாலைவன இலக்கி யத்தில்
சுனைநீராய் ஊற்றெடுத்துப் பொங்கி வந்த
சுப்ரமண்ய பாரதியே ! உன்றன் பேரில்
இணைகின்ற சங்கத்தார் நடத்து கின்ற
இலக்கியத்து விழாதன்னில் நானும் என்றன்
மனக்கதவம் திறக்கின்றேன் ! கவிதைக் காற்று
வந்துங்கள் உயிரோடே உறவா டட்டும் !

முண்டாசு பாரதிக்கோ முறுக்கு மீசை !
முன்னோடித் திலகனுக்கு நீண்ட மீசை !
கண்போன்றே இருவர்க்கும் நாட்டுப் பற்று !
கவிஞரைப்போல் அவருந்தான் உணர்ச்சிக் காற்று !
என்போன்ற இளைஞர்களைத் தட்டி அன்றே
எழுச்சிக்கு வழிவகுத்தார் இரண்டு பேரும் !
விண்போன்று விரிநெஞ்சத் திலகன் என்னும்
விதைதந்த விருட்சம்தான் பாரதி யார் !

பாரதியார் கண்ணாடி ! தன்முன் னாடி
பார்க்கின்ற உலகத்தைப் பிரதிப லித்தார் !
வேறெவர்க்கும் இல்லாத எளிமை ! நன்கு
விளக்குகின்ற உவமைநயம் ! சொல்லின் ஜாலம் !
யாருக்கும் தோன்றாத கற்ப னைகள் !
இழைந்தோடும் மெட்டுக்கள் ! இனிய சந்தம் !
நேருக்கு நேர்நின்று பேசும் வீரம் !
நிச்சயமாய் இவரைப்போல் கவிஞ னில்லை !



நவநவமாய்க் கவிதைகளை எழுதித் தந்து
நம்தேச விடுதலைக்குப் பாட்டுப் பாடி
சவநடனம் இடுவதுபோல் வாழ்ந்தோர்க் கெல்லாம்
சக்திதந்து, விடுதலையின் உணர்ச்சி யூட்டி
செவிநடன சொற்களிலே கவிதை பெய்த
சுப்ரமண்ய பாரதிக்குத் திலகர் ஆசான் !
கவியுலகக் கோமானும் அரசி யற்குக்
கண்போன்ற திலகனும் உணர்ச்சி நட்பு !

அரசியல்வான் பறந்திட்ட பார திக்கோ
அடிச்சுவடு திலகர்தான் ! திலகர் தன்னை
ஒருமுறைதான் பாரதியார் பார்த்தார் ! பின்னர்
ஓராயிரம் முறைஅவரை உளத்தால் பார்த்தார் !
கருமத்தைக் கலங்காமல் செய்த வீரன் !
கண்ணபிரான் கீதைவழி சென்ற தீரன் !
பெருமையுள்ள மராட்டியத்தாய் பெற்றுத் தந்த
பேசரிய வீரத்தின் அனற்கொ ழுந்து !

செத்துவிட்ட மனிதனுக்கும் சீவ னூட்டும்
சிரஞ்சீவி மூலிகையாய், திலகர், தீய
வித்துவிட்ட நம்மிடத்தில், உணர்ச்சி யெல்லாம்
விற்றுவிட்ட நம்மிடத்தில், சொந்த நாட்டின்
பற்றுவிட்ட நம்மிடத்தில், மோகங் கொண்டு
பரிதவித்த நம்மிடத்தில், தோன்றா விட்டால்
கொட்டிவைத்த கருங்கல்லாய் நாமி ருப்போம் !
கோபுரத்தில் வைத்ததெலாம் தேச பக்தி !

சீராக வாழாமல், காற்றில் வைத்த
சிற்றகல்போல் நாமெல்லாம் வாழ்ந்து வந்த
நேரத்தில் அவர்களெல்லாம் தோன்றா விட்டால்
நிலைஎன்ன இன்றைக்கு ? நினைத்துப் பார்ப்பீர் !
போராடும் தியாகத்தில் பொலிந்த பூவாய்
புரட்சித்தேன் குடித்திட்ட வண்டாய் அன்று
நீரோடை நினைவுகளை நெருப்பாய் கண்ட
திலகர்வழி பாரதியார் சிறந்து நின்றார் !

சுயராஜ்யம் பிறப்புரிமை ! என்ற வாக்குச்
சூத்திரத்தில் இயங்கியவர் பாரதியார் !
நயமாக, இதமாக, வீர மாக,
நெஞ்சத்தின் குரலாகக் கவிதை தன்னை
பயம்சிறிது மில்லாமல் அன்றே அந்த
பரங்கியர்முன் புயற்காற்றாய்ப் பாடி நின்றார் !
'ஜெயசக்தி' என்றெழுந்தே ஆர்ப்ப ரித்தார் !
சீர்திருத்தக் குரலுக்கே இடங்கொ டுத்தார் !

அக்னியைக் கக்குகின்ற நெருப்புக் கண்ணில்
அலைபாயும் கருவிழிகள்! விடுதலைக்குக்
கொக்கரித்து மேல்வானைப் பார்க்கும் மீசை!
கொந்தளிக்கும் கடற்பேச்சு! எரிமலைபோல்
எக்காள மிடுகின்ற வீரம்! மேலே
ஏற்றிவைத்த முண்டாசுக் கட்டு! நெற்றி (தன்னில்)
சக்தியவள் சிரிக்கின்றாள் குங்கு மத்தின்
தனிப்பொட்டு நின்றிருக்கும்! அக்க விஞன் ...!

சூரத்தில் திலகரினைப் பார்த்தார்! பாதை
செப்பனிடும் பணியினிலே முனைந்து தன்னை
ஆர்வத்தால் சேர்த்திருக்கும் திலகர் தன்னின்
அனல்கண்ட விழிகள்முன் வணங்கி நின்றார்!
நேராகத் திரும்பிவந்த பாரதி யார்தன்
நெஞ்சத்தைக் கவிதையிலே நயந்து வைத்தார்!
பாருங்கள்! அதுவேதான் திலகர் பற்றி
பாராட்டும் பாடல்கள்! வார்த்தை மின்னல்!

திலகரது புதியகட்சி பேச்சை நூலாய்
செய்தளித்தார் பாரதியார்! அதில்வி ளங்கும்
திலகரது புகைப்படத்தின் கீழே அவரை
தேசபக்த சிரோமணியாய்த் தீட்டி வைத்தார்!
உலவிவந்து மீண்டதனைக் காங்கிரஸ் யாத்ரை
என்னுமொரு நூலாக ஆக்கி வைத்தார்!
பலஉரையின் இடையினிலும் திலகர் மீது
பற்றுகொண்ட விதங்களினை விளக்கி வைத்தார்!

முத்திரையாய் கவிதைகளைப் பாடி வைத்த
முன்னேற்ற கவிஞர்க்குத் தினமும் இங்கே
கத்துகின்ற கடலலையாய் முழக்கம் செய்து
காகிதத்தில் நெருப்புவைத்த கவிஞ ருக்கு,
புத்துணர்வின் ஊற்றுக்கண் திலகர் அன்றோ?
புரட்சித்தீக் கொழுந்தான திலக ருக்கு
சத்தியமாய்ப் பாரதியார் தாச னாவார்!
சந்திப்போம்! வருகின்றேன்! வணக்கம்! வாழ்க!



# பாரதியின் பார்வையில் வ.உ.சி.

(கவிஞர் கு. மா. பாலசுப்ரமணியம்)

வெள்ளைக் கமலத்தே வீற்றவளே! பிள்ளைஎன்
உள்ளக் கமலத்தும் உள்ளவளே!—சொல்லின்
திறங்கொண்ட பாவலர்தம் சிற்றவையில் யானுன்
வரங்கொண்டு பாடிடவே வாழ்த்து!

மாண்புத் தலைமை மகத்துவமே சுந்தரமே!
ஆண்மை வடிவெடுத்த அவ்வையே!—தேன்பெய்த
கற்கண்டுப் பண்சிலம்பின் காவலரே; என்கவிதைச்
சொற்கண்டும் ஏற்பீர் சுவைத்து!

———

பாரதநாடு விடுதலை காணவே
பாடிய பாவலனும்—கவி
பாரதி மாண்பினைப் பாரில் பரப்பிடும்
பாரதி சங்கத்தினர்,

"பாரதி பார்வையில் வ.உ.சி." என்றெனைப்
பாடப் பணித்துவிட்டார்!—அந்த
பாரதி யாரையே பார்த்தறியேன்; அவர்
பார்வையை என்னகண்டேன்?

வீரர் சிதம்பரம் பாரதி பார்வையில்
வேங்கைபோல் நின்றாரோ?—நீதி
கூறும் குறளுக்கு நல்லுரை தந்த
குருவாய் இருந்தாரோ?—திசை

மாறுமலே போட்டிக் கப்பல் செலுத்திய
மாலுமி யானாரோ?—தேசப்
போராலே வெள்ளையர் அஞ்சி நடுங்கப்
புயலாய்ச் சுழன்றாரோ?

புன்னகை வீசியே தென்னக மெங்கும்
புரட்சி விளைத்தாரோ?—இரு
கண்ணில் அருவி பெருகிட வெஞ்சிறைக்
கைதியாய் வாழ்ந்தாரோ?

பாரத தேவியின் தேர்என்று எண்ணியே
செக்கை இழுத்தாரோ ?—அந்த
வீரத்தாய் கையின் விலங்காக எண்ணியே
கல்லை யுடைத்தாரோ ?

என்ன எழுதுவ தென்றறி யாமலே
எண்ணங் குழம்பிநின்றேன் !—புது
வண்ணக் கவிதை வரையப் பொருள்தேடி
வானத்தைப் பார்த்திருந்தேன்.

———

நானிலமே கண்ணுறங்கும் நள்ளிரவின் மையிருட்டில்
வானுலவும் தேய்பிறையின் மங்கல்ஒளி வீசுகையில்
விண்ணகத்தின் வேரறுந்து வீழுகின்ற தாரகைபோல்
மண்ணகத்தை நோக்கியொரு மின்சுடரே வந்ததம்மா !
மின்னிவந்த வான்சுடரும் மிக்க அருகினிலே
என்னெதிரே சாலை எதிர்ப்புறத்தே வீழ்ந்ததம்மா !
வீழ்ந்ததுதான் தாரகையோ, விலையறியாச் செம்மணியோ ?
சூழ்ந்திடும்என் பஞ்சம் துடைக்கவந்த வான்நிதியோ ?
என்னும் தவிப்பால் இடம்தேடிச் சென்றடைந்தேன்.
கண்ணெதிரே கண்டதொரு காட்சிஅங்கே என்னென்பேன் !
முறுக்கான மீசையொடும் முண்டாசுக் கட்டுடனும்
செருக்கான பார்வையொடும் செந்தூரப் பொட்டுடனும்
உருக்கான கையில் ஒளிரும் பிரம்புடனும்
திருக்கோலம் காட்டியொரு தேவமகன் நின்றிருந்தான் !

'மாநிலத்து மாந்தருக்கே வாழவழி இல்லைஇங்கே—
வானகத்துத் தேவர்களும் வந்துவிட்டால் என்னாகும் ?'
என்றநினைப் பொடுநான் ஏறிட்டுப் பார்க்கையிலே—

" என்னடா பாண்டியனே ! என்வியந்து நோக்குகின்றாய் ?"
என்னும் மொழிபேசி என்றன் முதுகினிலே
அன்பாகத் தட்டி அரவணைத்தார் ! அச்சொல்லை
வேறெவரும் சொல்வாரோ? வீரத் தமிழ்க்கவிஞர்
பாரதிதான் என்றுணர்ந்தேன் ; பாதத்தில் நான்பணிந்தேன்.
தொட்டுப் பிடித்தென்னைத் தூக்கி நிறுத்தியவர்
சுட்டும் விழியால்என் தோற்றத்தை ஆராய்ந்தார்.

"இந்நாட்டு மன்னவனே ! என்னேடா கோலமிது ?
முன்னாளில் நம்மவரை மொய்த்திருந்த ஏழ்மையெலாம்
நாடகத்தில் காட்டி நடிப்பதற்குச் சென்றாயோ ?
வேடம் கலைக்காமல் வீதிவழி மீண்டாயோ ?



மெலிவான உன்மேனி மிக்கப் பொருத்தமடா !
நலிவான தோற்றம் நடையும் பொருத்தமடா !
உண்மைக் கலைஞன்நீ உயர்ந்த நடிகனடா !"
என்றெல்லாம் பாரதியார் என்னைப் புகழ்ந்திட்டார்.

"கலைக்கண்ணால் நோக்கும் கவியரசே ! என்றன்
நிலைமை தெரியாதோ ; நெஞ்சம் இளகாதோ ?
சொட்டுகின்ற கண்ணீரைச் சோகரசம் என்றீரோ ?
பட்டினியால் செத்தாலும் பழுத்தநடிப் பென்பீரோ ?
துன்பத்தைக் கேலித் துணுக்காகச் சொல்வீரோ ?"
என்றுரைத்தேன் ; பாரதியார் இதயம் துடிதுடித்தார் !

"பரிகாச மில்லையடா பைந்தமிழா ! உண்மை
புரியாமல் சொன்னேன் ; பொறுமையாய்க் கேட்டிடுவாய்.
விடுதலைக்குப் போராடி வீரசொர்க்கம் சென்றேநான்
தொடர்ந்துபல ஆண்டுகளாய்த் தோய்ந்துவிட்டேன் இன்பத்தில் !

அங்கே

மாணிக்கக் கட்டிலிலே மாமுனிவர் காந்திமகான்
ஆணிப்பொன் ராட்டை அசைத்திருப்பார் ; அச்சபையில்
வீரமகன் நேருவொடு வித்தகராம் சாஸ்திரியும்
தீரன் சுபாஷும் திலகரொடு பட்டேலும்
சிங்கம்போல் வ.உ. சிதம்பரமும், தேசவெறி
பொங்கும் குமரன் பொறுமையில்லா வாஞ்சியொடும்
எங்கள் திருக்கூட்டம் இணைந்திருக்கும் ! அங்கேநான்
சங்கத் தமிழ்ப்பாடல் சாற்றிடுவேன் அக்கவியைத்
தங்கக் கொடியின் தளிர்போன்ற வானுலக
மங்கையரும் பாடி மகிழ்ந்துநட மாடிடுவார் !

அப்பொழுது

பூவுலகை விட்டங்கே புதிதாக வந்திருக்கும்
பாவேந்தர் தாசனுக்குப் பக்கத்தில் அண்ணாவும்
கல்கி கவிமணியார் கலைவாணர் பாகவதர்,
நல்ல மனத்து நடிப்பின் இசைப்புலவர்
சின்னப்பா கிட்டப்பா செல்லப்பா போன்றபலர்
என்னைப் பாராட்டி இருப்பார் ; தலையசைப்பார் !
இப்படியே காலமெல்லாம் இன்புற்றோம் ; இன்னொருநாள்
எப்படியோ இந்நாட்டின் எண்ணம் எழுந்ததடா !
கன்னித் தமிழகத்தைக் கண்டுவர ஆசையென்று
அண்ணல்திரு. காந்தியிடம் அன்பாய் விடைகேட்டேன்

145482

"நன்று, தமிழ்க்கவியே! நம்முடைய தாய்நாட்டின்
இன்றைச்சிறப்பறிய எம்மனத்தும் ஆவலுண்டு.
சென்று விரைவில் செவிஇனிக்கும் செய்திகளைக்
கொண்டு திரும்புமெ"னக் கூறிவிட்டார் காந்திமகான்.

பெற்ற சுதந்திரத்தின் பேரொளியில் நீங்களெல்லாம்
உற்ற கலைவளத்தால் ஓங்கும் தொழில்வளத்தால்
சோவியத்து நாட்டினர்போல் துடிப்பான தோற்றமொடும்
மேவும்அமெ ரிக்கரைப்போல் மிடுக்கான ஆடையொடும்
செல்வப் பெருக்கால் செழிப்பாய் சமத்துவமாய்
நல்விதமாய் வாழ்வு நடத்திடுவீர் என்னுமொரு
ஆசையுடன் வந்தேன்; அதனாலே உன்தோற்றம்
வேஷமென்றே எண்ணிவிட்டேன்; வேடிக்கை யல்ல"வென்றார்!

கள்ளமில்லா நெஞ்சக் கவியரசர் பாரதிக்கு
உள்ளத் துயருடனே உள்ளதுயர் உரைத்தேன்!
"நாடகத்துக் காட்சியல்ல; நடப்பு நிலையிதுதான்!
வேடப் பொருத்தமல்ல; விதியின் சதிஇதுதான்!
பாரதியே! உம்முடைய பாடல்களைக் கற்றதனால்
சீரமையப் பாட்டெழுதிச் சீரழிந்தோம் நாங்களெல்லாம்!
யாப்பு முறையே அறியாதார் பேச்சுமொழிக்
கோப்பை நிறைத்தே கொழுத்தபணம் தேடுகின்றார்!

அமரகவி தங்களையே ஆதரியாப் பாதகர்கள்
தமிழறிந்த எங்களுக்குத் தருவாரோ ஆதரவு?
தொட்டெழுதும் பாடலெல்லாம் தொடர்ந்தபுகழ் கண்டவன்னை
சட்டென்று ஒதுக்கிவிட்டார் சாதியிலே கெட்டவன்போல்!
என்றன் பழம்பாடல் இன்றைக்கும் நின்றொலிக்கும்
என்றாலும் என்பெயரை எவரும் நினைப்பதில்லை!
பாட்டுக்குத் தாளமிடும் பாங்கே அறியாதார்
ஆட்களுக்குத் தாளமிட்டே ஆதிக்கம் கொண்டுவிட்டார்.

குள்ளமனம் கொண்டவர்கள் 'கும்பல்'எனும் கொள்கையினால்
உள்ளதொழில் அத்தனையும் ஓரிருவர் கைக்கொண்டார்!
இருவர்தாம் பாட்டெழுத இருவர்தாம் பண்ணமைப்பார்.
இருவர்தாம் பாடிடுவார்; இருவர்தாம் வாயசைப்பார்.
இருவர் நடிப்பார்; மற்றெல்லாரும் ஈயடிப்பார்!
இருவர் சிரிப்பார்; மற்றெல்லாரும் சேர்ந்தழுவார்!



எல்லாத் துறைகளிலும் இருவர் இருவரென்றே
செல்வாக்குப் பெற்றவர்கள் செப்புவதோ சமதருமம்!
கள்ளப் பணம்மறைப்போர் காப்பதுதான் சோஷலிசம்!
அள்ளிக் குவிப்போர் அணைப்பே சமத்துவமாம்!
ஆண்டில் பலலட்சம் அமுக்குகின்ற 'வள்ளல்கள்'
தூண்டில் இரைபோலத் தூவுவதே நன்கொடையாம்!
என்ன கலைத்தொண்டோ எனக்கும் புரியவில்லை.
முன்னவர்கள் சொன்ன மொழிக்கும் பொருந்தவில்லை.
கதைஎழுதித் தந்தவர்க்குக் கணக்கிலே நானூறு.
'கால்ஷீட்' தாராதவர்க்கோ 'கருப்பிலே' எட்டுலட்சம்!
சிலநூறு வாங்கியவன் தெருவிலே ஏங்குகிறான்,
பலலட்சம் பெற்றவனே பட்டணத்தை வாங்குகிறான்!
பாடு படுபவர்க்கோ பட்டினியில் பாதிமிச்சம்!
பரிசுத்தாள் வாங்கிவிட்டால் படுத்தபடி மூன்றுலட்சம்!
உழைப்பை மதிப்போர் உயர்வதற்கே மார்க்கமில்லை.
வழிப்பறிகள் செய்பவர்க்கோ வரிஏய்த்து மாளவில்லை!

## இந்நிலையில்

பாட்டாளி மேன்மைகளைப் பக்குவமாய்ச் சொன்னாலும்
கேட்டுப் பணிபுரியக் கிறுக்கனா முன்வருவான்?
தேட்டம் ஒருபுறமும் வாட்டம் மறுபுறமும்
ஆட்டிவைக்கும் காரணத்தால் அமைப்பே திருந்தவில்லை.
நாட்டில் வறுமையா நல்வளமா என்பதற்குக்
காட்சிகளை வைத்துக் கணக்கிடவும் கூடுதில்லை!
ஆலையிலே வேலையின்றி அலைமோதும் ஆள்வரிசை! (கிழூ)
மாலைப் படக்காட்சி மாளிகையி லும்வரிசை!
எச்சில் இலைபொறுக்க ஏங்கிநிற்கும் ஓர்வரிசை!
நச்சு மதுக்கடையில் நாளெல்லாம் நீள்வரிசை!

பணந்தான் பெருகியதோ; பஞ்சம் பெருகியதோ?
மனந்தான் சுருங்கியதோ; மானம் அழிந்ததுவோ?
உண்மை புரியாமல் ஒதுங்கிநான் நிற்கையிலே
அன்பாய்க் கவிதை அரங்கிற் கெனைஅழைத்தார்!
விலைவாங்கிப் பாட்டெழுதும் வேலையற்றேன் ஆனாலும்
சிலைவாங்கப் பாடுகின்ற சிறப்பேனும் மிஞ்சியதே!"—
என்றுமன ஆறுதலை நின்றுரைத்தேன் பாரதிக்கு!
கண்சிவந்த கோபத்தால் கவியரசர் சீறலுற்றார்!

"சொந்த நலத்தினையே சோஷலிச மென்றுசொல்லித்
தந்திரத்தால் வாழும் தரங்கெட்ட கள்வர்களைப்
பஞ்சணையில் ஏற்றிவைத்துப் பல்லிளித்தோ பார்த்திருந்தீர் ?
இந்தநிலை எய்திடவோ எம்மவர்கள் பாடுபட்டோம் ?
நாட்டில் சுதந்திரத்தை நாட்டிவிட்டால் ஏழையரின்
வாட்டமறும் என்றலவோ வாழ்வைப் பலிகொடுத்தோம் !
எங்களது தியாகத்தால் இன்றமைந்த நல்வாழ்வைப்
பங்கப் படுத்திப் பகற்கொள்ளை யாடுவதோ ?
உழைக்கின்ற மக்கள் உணவுக்கு வாடுவதோ ?
கொழுக்கின்ற வீணர் குளிர்ச்சிஅறை தேடுவதோ ?
வஞ்சகரை வீழ்த்த வகையறியா மூடர்களே !
நெஞ்சி லுரமில்லா நெடும்பேச்சுக் காரர்களே !"—

என்றெல்லாம் பாரதியார் என்மீதே குற்றமிட்டார் !
நின்று குதித்தார்-நெருப்புமலை போல்கொதித்தார் !
பாரதியின் கோபத்தைப் பார்த்துப் பயந்துவிட்டேன் !
வேறுவழிப் பேச்சை விநயமாய் மாற்றலுற்றேன் !

"கவியரசே ! நாட்டின் கவலை மறந்திடுவீர் !
அவசரமாய் என்றனுக்கோர் ஆதரவு தந்தருள்வீர் !
பாரதியார் தங்களது பார்வையிலே கண்டிருந்த
தீரர்சிதம் பரத்தின் சிறப்பை உரைத்திடுவீர் !
நேருக்கு நேராய் நிறைகருத்தைக் கூறிவிட்டால்
சீருக்குள் வைத்துச் சிறந்தகவி யான்புனைவேன் !"
என்று விழைந்தேன் இருகையும் ஏந்திநின்றேன்
வென்றிக் கவிஞர் வெறுப்புடனே பேசலுற்றார் :—

"இன்றைப் பிறவிகட் கென்னதான் சொன்னாலும்
ஏதும் தெரியாது !
அன்றைச் சிதம்பரம் கொண்டு விளங்கிய
ஆண்மை புரியாது !

காசினி போற்றவே கப்பலை ஓட்டிய
காவலன் என்றழைப்பீர் ;
தேசியப் போரிலே செந்நீரைச் சிந்திய
தியாகிஎன்றும் உரைப்பீர்.

போலி வழக்குகள் ஏற்க மறுத்திட்ட
புண்ணியன் என்றுசொல்வீர் !
கூலி பெருமலே ஏழைக்கு வாதிட்ட
கொற்றவன் என்றறைவீர் !

அன்னிய சீமைத் துணிகள் எரித்திட்ட
ஆற்றல் மறவன்என்பீர் !



முன்னைத் தொழிலாளர் சங்கம் அமைத்திட்ட
முற்போக்கு வாதிஎன்பீர் !
வெள்ளையர் அஞ்சி நடுங்கிடச் செய்திட்ட
வீரனென் றும்புகல்வீர் !
சொல்லும் இருஜென்ம தண்டனை ஏற்றவர்
சூரனென்றும் புகழ்வீர் !

அத்தனை அத்தனை சொத்தை மொழிகளை
யான்சொல்லத் தேவையில்லை !—அந்த
உத்தமன் தானடா என்திருப் பார்வையில்
உண்மை மனிதன்என்பேன் !

பெற்றதாய் நாட்டையும் பேசும் மொழியையும்
பேணுபவன் மனிதன் !
உற்றசகோதர மக்களின் வாழ்வை
உயர்த்துபவன் மனிதன் !

மனம்எனும் ஒன்று உள்ளவர்க் காகவே
மனிதன் என்றபெயர் !—வெறும்
பணத்திற் காகவே மனத்தை விற்றவன்
பயிரில் வந்தபதர் !

சொந்தச் சகோதரர் வாழ்வைப் பறித்துண்ணும்
சுயநலக்காரன்,—தன்
தொந்தி வளர்க்கப் பிறந்திட்ட வாலில்லா
மந்திஎன்றே உரைப்பேன் !

மிஞ்சும் மனிதாபி மானத்தி னாலன்றோ
மேதை சிதம்பரனார்—நம்
செந்தமிழ் வாழவும் இந்தியா மீளவும்
சேர்த்துப் பணிபுரிந்தார் !

தன்னலம் கொண்டவர் உள்ளவரை, நாடு
சற்றும் செழிக்காது !—அந்த
அண்ணல் சிதம்பரம் கண்ட கனவுகள்
ஒன்றும் பலிக்காது !
மாக்களை யெல்லாம் மனிதர்க ளாய்முதல்
மாற்ற முயன்றிடுக !—பின்னர்
பாக்களி னால்அந்த வீரன் திருப்புகழ்
பாடிப் பயன்பெறுக !"

இவ்வண்ணம் பேசிநல் லாசி வழங்கிய
இன்பக் கவியரசர்—உடன்
செவ்வண்ண ஜோதிப் புகைமய மாய்இளந்
தென்றலுடன் கலந்தார் !—என்
கண்ணை மறைத்துஅவர் தன்னை மறைத்துஉயர்
விண்ணகம் போய்ப்புகுந்தார் !—அங்குக்
கண்டநற் காட்சி கனவோ நனவோநான்
இன்னும் குழம்புகின்றேன்
என்னிடம் பாரதி சொன்ன மொழிகளை
எண்ணிப் புலம்புகின்றேன் !—இதை
அன்புடன் சிந்தையில் ஏற்றவர்க் கெல்லாம்என்
நன்றி ; விடைபெறுவேன் !

# பாரதி பார்வையில்—ஓவியர் ரவிவர்மா

(கவிஞர் செல்வபாரதி)

மல்லிகைப்பூச் சங்கெடுத்து மனிதமனக் கனவிசைத்து
வல்லிகை வளையெடுத்து வளர்சங்கக் கவிதொடுத்து
சொல்லினில் அமுதெடுத்து சுவைக்கின்ற பாட்டிசைத்து
மெல்லியலாள் மனங்கனிய மேகநிலாப் பந்தர்க்கீழ்

சின்னமகன் பாடுகின்றேன் சிறுபிறைக் கீற்றெடுத்து
தென்னங்கிளைக் காற்றெடுத்து தேம்பலாச் சுளையெடுத்து
கன்னலடிக் கரும்பெடுத்து கவிவீணை நரம்பெடுத்து
என்இதயம் பாடுதம்மா இளையவனை ஆளாக்கு.

பொதிகைமலைக் காற்ருகி புதுக்கவிதை நாற்ருகி
பதிமதுரை கொடியாகி பால்வார்க்கும் மரமாகி
நதியாகி மதியாகி நடுச்சங்க அமுதாகி
நிதியாகி கருணையாகி நிதம்வளரும் தமிழாகி

கொலுவிருக்கும் சுந்தரமே கோலமணி மண்டபத்துக்
கொலுவிருக்கும் நாயகமே கொடிபோட்ட பாண்டியன்கை
வலுவிருக்கும் காவியமே வளர்கவிதைத் தாயகமே
நிலவிருக்கும் சிந்துப்பாட்டு நேர்த்தியினைக் கண்டவரே.

கொடிக்கால் ஆற்ருேரக் கவிதையாராய்ச்சிக் கடிநாளில்
அடிக்கோல் நாட்டியவரே அமுதத்தமிழ்க் கவிதைவனச்
செடிக்கோர் காவல் ஆனவரே ! செந்தமிழ்க் கவியரும்பு
வெடிக்கவோர் நிலவானவரே ! விரிநிழலில் உன்அடைக்கலம்.

விளைகின்ற பயிர்தேடும் ஒருமுகம் விண்முகம்
விளையாடும் காளையர்க்கு அறிமுகம் பெண்முகம்
விழுகின்ற மழைநீரில் முகம்கழுவும் மண்முகம்
விழுதனைய கலைவளர்க்கும் திருமுகம் சண்முகம்.

கலைவளர்க்கும் பள்ளியவர் கண்ணிமைகள் கவிதைநெய்யும்
சிலைவடிக்கும் பாவங்கள் சண்முகனுர் இட்டபிச்சை,
திரைவிழுந்த போதுமவர் திறம்விழ வில்லையென்பேன்
நரைவிழுந்த போதுமவர் நடிப்பிலோர் பழமென்பேன்.



அவர் நடத்தும் கவிதைவிழா அமுதிளைக்கும் பாட்டுவிழா,
சுவரோவியங்கள் ரவிவர்மா படைத்தநல் கலையோவியங்கள்
அவரோவியம் இவர்கவிதை அமுதஓடை நிலாப்பூச்சு
நிகரோவியம் எதுவுமில்லை நினைப்போவியம், சொல்லோவியம்.

இருட்கவிதை வானிலொரு வெளிச்சப்பூ பாரதி ! அவன்
புறப்பட்ட துருவநிலா, பொன்வெயில் மேலேறும்
நிறைவட்டப் பகல்விளக்கு, நித்தம்ஏற்றும் சத்தியதீபம்,
குறைபட்ட மனந்திருந்தக் கைதொழும் கவித்தெய்வம்.

நரம்புக்குள் நல்லிசை நாடிக்குள் பேசும்உண்மை !
வரம்புக்குள் மணிநெல் வாய்க்காலின் குளிர்நீர்
அரும்புக்குள் நன்மணம் அசைந்தாடும் பொன்தளிர்
கரும்புக்குள் கட்டிவெல்லம் காதலின் வாடாக்கவிதை !

குறுந்தொகை கலித்தொகை கூடும்கவிதை காவிரிவெள்ளம்
நறுந்தோகை அசைந்தாடும் நளினமலர்த் தேன்மதியம்
பெருந்தகை ! மனம்விரும்பும் பெரியதனக்காரன் விரும்பாப்
பெருந்தொகை மழைமேகக் கவிதைமீன் ஆட்சிமகன்.

நீலவெளி வான்பரப்பில் நிறையகுளிர் வெண்ணிலாவில்
கோலவிழி வரிப்பாட்டில் குழந்தைநகைச் செந்தளிரில்
வாலைமனக் கவியரங்கில் வாசமலர் நகையவிழ்ப்பில்
சோலைப்பூத் தேனலைப்பில் சொக்குவெள்ளிக் கண்சிமிட்டில்

மொட்டழகுப் பட்டிமையில் முறுவலிக்கும் பூவிதழில்
சிட்டழகுப் பொன்சிறகில் சிலைவடிக்கும் கைஉளியில்
பட்டழகுச் சலசலப்பில் பால்வடிக்கும் தேன்கொழுந்தில்
கட்டழகுத் தேரசைவில் கன்னிமகள் பாற்குடத்தில்

பிறைக்கீற்று நுரைச்சிரிப்பில் பிச்சிப்பூ மென்னகையில்
சிறைபாட்டுப் பொன்கனவில் சிறைபட்ட கிளிப்பேச்சில்
வரிப்பாட்டுக் கருங்குயிலின் வளர்கனவு பூம்பாட்டில்
நெறிப்பாட்டுச் சபதத்தில் நேசக்கவி குரலிருக்கும்.

கவிக்கனலின் அழகையெல்லாம் கடவுளவன் படைக்கின்ருன்
புவிக்கமுதம் படைப்பார்போல் புதுப்புதுக் கவின்கலைகள்
தவிக்கின்ற பாரதத்தில் தந்துநின்ருன் கவிக்கோமான்,
அவிக்கின்ற உள்ளத்தின் ஆசைகளை உணர்வுகளை

வார்த்தையிலே வடித்தவனே வரகவிஞன் பாரதியென்ருல்
நேர்த்திமிகு சித்திரத்தில் வடித்தவனே ரவிவர்மா !
கூர்த்தமதி வேண்டுமென்பேன் ! கொஞ்சுகின்ற அழகையெல்லாம்
பார்த்தது போல் வடித்திங்கே பாங்குடனே தருவாரார் ?

பூவில்வளர் தெய்வத்தை புன்னகையின் நல்லமுதை
நாவில்வளர் சரஸ்வதியை நலங்கூட்டும் வீணைதன்னை
கோவில்வளர் தெய்வத்தைக் குன்றாடும் வேலவனை
ஓவியத்தில் வைத்தவனே ஒப்பரிய ரவிவர்மா !

பாற்கடலை அங்குநித்தம் பள்ளிகொண்ட திருமாலை
ஊர்வசியை உலகாளும் உமையவளை சக்திதன்னை
நேருக்குநேர் பார்ப்பதுபோல் நிதம்படைத்த ஓவியன்காண் !
யாருக்கும்நிகர் இல்லாதவன் சித்திரத்தில் வாழுகிறான்.

நீரோடை மண்டபத்தில் நெடுங்கானகத்தில் தமயந்திவிழி
நீரோடவைத்த நளன்தன்னை நித்தம்நாம் ஓவியத்தில் கண்டு
நீரோடவைத்தவன் தன்னை நிலையாக ஏட்டிலவன்
நீரோடு எழுதிவைத்தான் செகத்தினிலே யாருண்டு ?

மேகத்தைத் தூதுவிட்ட கவிமேகக் காளிதாசன்
மோகத்தில்தனை மறந்தமானை மானென்று காணுகின்ற
பாவத்தை சித்திரத்தில் பேசவைத்தான், சிலையானோம் !
பாவங்கள் விரல்பேசும் பார்த்திபனின் வில்காட்டும்.

ஈரப்பனி ஆடைக்குள் இழைந்திருக்கும் ரகசியத்தை
ஓரவிழிப் பார்வைக்குள் ஒளிந்திருக்கும் அதிசயத்தை
ஊர்வசியின் மேனிக்குள் உறங்குகின்ற பாலழகை
கார்முகிலைக் கிழித்துவரும் கருக்கிருட்டு மின்னலமுதை

ஓவியத்தில் காட்டியவன் ஒருஇரவி வர்மாஎன்றால்
காவியத்தில் கட்டியவன் கவிக்குயில் பாரதியென்பேன் !
ஆவிநிகர் காதலமுதை அரம்பையரின் மதுமோக
பூவில்வளர் புன்னகையை பூட்டிவைத்த பேரழகை

வர்ணத்தில் தீட்டிவிட்டான் வாழுகின்ற (து) அழகென்பேன் !
சொர்ணத்தில் மேனியின்பச் சொக்குவெள்ளி நிலாத்தடத்தின்
வர்ணத்தில் மேகத்தின் வாலிபத்தின் ஒளிமின்னல்
கர்வத்தின் இடைநெளிவில் கனிகின்ற கவியழகை

மேகத்தின் நீலத்தில் மேதினிக்குத் தந்தவன்ஓவியன்,
ராகத்தில் வார்த்தையில் ரதமோட்டி ஆனவன்கவிஞன்
சோகத்தின் வித்தையெல்லாம் வார்த்தையில் பிறக்குமென்றால்
சோகத்தின் மொத்தமெலாம் ஓவியத்தில் விரிந்ததென்பேன் !

படம்கோடி வரைந்தான் பருவங்கள் பொங்கவைத்தான்
விடந்தூங்கும் வேல்விழியார் விழிக்கின்ற கமலநயனத்
தடந்தூங்கும் ஆசைகளைத் தழல்எடுத்த மேனியிடை
குடந்தூங்கும் பாவத்தைக் கொஞ்சுகின்ற வர்ணத்தில்



சித்திரமாய் எழுதிவைத்தான் சிற்பமெலாம் தோற்கும்வணம் !
பத்திரமாய் வைத்துநிதம் பாங்காகக் காத்திருக்கும்
சித்திரங்கள் மாளிகையின் சின்னமனச் சொந்தமல்ல ;
வைத்திருக்கும் குடிசையிலும் வந்திறங்கும் தெய்வங்கள் !

கோபுரத்து அழகில்நிதம் கொஞ்சுகின்ற கலசங்கள்
நூபுரத்து ஒலியசைவில் இழைகின்ற கிளர்ச்சிகள்
பாமரனின் சந்நிதிக்கும் படியேற வைத்தவன்காண்
சாமரக்கவி அவன்அல்ல சக்கரவர்த்தி கவியவனும்

செய்வண்ணம் ஒப்புநோக்கச் சென்றாயோ எனக்கேட்டுக்
கைவண்ணம் போற்றுகிறான் "கிளர்ச்சிசெய் அரம்பையரின்
மைவண்ண விழிஅமுதும் மின்னல்செய் பொன்னழகும்
பொய்வண்ணம் ! அழிதல்திண்ணம் ! புகழ்சேர்க்கும் செய்தொழில் !"

இரவிவருமா இரவிவருமா என்றுநிதம் கேட்டுத்தான்
இரவிவருமாப் போலன்றோ இன்பசுதந்திரம் கண்டுநின்றோம் !
இரவிவருமா என்பானும் இங்குவந்தான் ! புகைமனத்தில்
இரவிவருமா போலஎமக்கு எண்ணருஞ்சித்திரம் ஈந்துவந்தான்.

இந்திரனுக்கோர் வெள்ளையானை இரவில்வரும் தாமரைகள்
சந்திரனுக்கோர் பெண்ணமுதம் சகலவாணிக்கோர் மகரவீணை
அந்தமேகலை அரம்பையொடு அழகுஊர்வசி அழகியராம் !
சுந்தரஓவியம் ரவிவர்மா சொக்குங்கவிதை பாரதிதான்.

"பாரத வீரர் மலிந்தநன் னாடு ;
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு"

— பாரதியார்

# விடுதலைப் போரில் பாரதி

செல்வி வெ. அலர்மேலு, தூய எப்பா பெண்கள் பள்ளி, சென்னை-4

**முன்னுரை :**

இனிய தமிழ்நாடு பற்பல அறிஞர்களையும், தலைவர்களையும், புலவர்களையும் தோற்றுவித்த பெருமையினை உடையது. நாட்டுப்பற்றும் புலமைத் திறமும் ஒருங்கே அமைந்த ஓருருவினராய் விளங்கிய பாரதியார் அன்னவருள் தலைமையானவராவார். அவர் வீர உணர்ச்சி ததும்பும் பாக்களைப் பாடி, நாட்டு மக்களின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பி, நம் அன்னைத் திருநாடாம் பாரதத்தின் சுதந்திரத்திற்கு வித்திட்டார். தம் உள்ளத்து உணர்ச்சிகள் உன்னதக் கவிதை வடிவம் பெற்று, அனைவரது உள்ளத்தினையும் வெள்ளப் பெருக்கினைப் போல் கொள்ளை கொள்ளும் வண்ணம் சிறந்த கவிஞராகத் திகழ்ந்ததோடல்லாமல், நாட்டுப் பற்று மிக்க சிறந்ததொரு குடிமகனாகவும் விளங்கிட்டார். தாய் மொழிப் பற்றும் தாய்நாட்டுப் பற்றும் நிறைந்து தமிழர்களுக்கே ஒரு வழிகாட்டியாய் திகழ்ந்திட்டார் அவர். இக்கவிஞர் சிரோமணி, அன்னை பாரதத்தின் அடிமை விலங்கினைத் தகர்த்தெறியும் பணியில் ஈடுபட்ட வரலாற்றினை எடுத்தியம்புதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வாழ்க்கைச் சுருக்கம்**

பாரதியார் 1882-ம் ஆண்டு எட்டையபுரத்தில் அரசனது புலவராய்ப் பணியாற்றிப் பொலிவுற்ற சின்னச்சாமி ஐயர் என்ற பெருமகனார்க்கும், அன்பும் அழகும் வாய்ந்த இலக்குமி அம்மாளுக்கும் தவப் புதல்வராய்த் தோன்றினர். இளமை முதலே அருங்குண நலன்கள் வாய்க்கப்பெற்று, தமது பன்னிரண்டாம் வயதிலேயே பாக்கள் இயற்றும் திறன் படைத்து பாரதி எனும் பட்டம் பெற்றார். இல்லறமென்னும் நல்லறத்தில் இவர்க்குத் துணை நின்றவர் செல்லம்மாள் என்ற மாதர்குல மணியாவார். வாழ்க்கை முழுவதையும் தாய்நாட்டுத் தொண்டிலேயே செலவிட்டு இறுதியில் மதங்கொண்ட யானையால் தாக்கப்பட்டு நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

**பாரதியாரும் விடுதலைப் போரும் :**

திருநெல்வேலிக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த பாரதி காசியில் தம் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார். காசி வாழ்க்கைதான் அவரது தேசீய வாழ்வின் அடிப்படையை உருவாக்கி விட்டது. பால கங்காதர திலகரின் தேச ஆவேசக் குரலின் எதிரொலி பாரதியாரின் உள்ளத்தில் ஒலித்தது. அவர் அன்று தொட்டு நாட்டுத் தொண்டினை நல்லதொரு பணியாகக் கொண்டார். பின்னர் சுதேசமித்திரன் பத்திரிகை உதவி ஆசிரியராய் அவர் பணிபுரிந்தார். இப்பத்திரிகைத் துறையில்தான் அவர்க்கு நிறைந்த தேசீய உணர்ச்சி தோன்றி வளரலாயிற்று. தேசீயத் துடிப்பு மிக்க பாரதியார் காசியில் நடந்த இந்திய தேசீயக் காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்றார். அது அவர் வாழ்வின் ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டது. அப்பொழுது நாடெங்கும் விடுதலை வேட்கை மூண்டிருந்தது. வங்காளப் பிரிவினையும், அரசியலாரின் அடக்கு முறையும் அவ்வார்வத் தீயினை நெய்யிட்டு வளர்த்தன. பாரதியார் தம் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிக் குவியல்களைத் தங்கு தடையின்றிச் சுதேசமித்திரனில் வெளியிட இயலாததால், தாமே 'இந்தியா' என்ற பத்திரிகையின் ஆசிரியரானார். உணர்ச்சி ததும்பும் கவிதைகள், கட்டுரைகள் மூலமாகத் தேச மக்களைத் தட்டி எழுப்பியதோடல்லாமல் பேச்சுப் பணியிலும் இறங்கினார். சென்னைக் கடற்கரையில் தேசீய உணர்ச்சி துடிக்கத் துடிக்கப் பேசி மக்கள் உள்ளங்களை வண்டினங்களை ஈர்க்கும் மலர் போல் தம்பால் ஈர்த்தார். அவரது பேச்சு வன்மையும், எழுத்தின் வேகமும் நாட்டு மக்களின் உள்ளங்களில் பெருஞ் சூறாவளியெனப் புகுந்து மாற்றம் விளைத்தன.

இந்நிலையில் வங்காளப் பிரிவினை ஏற்பட்டது. அரசியல் கொந்தளிப்பும் அடக்குமுறையும் மிக்கு பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. அக்கிளர்ச்சியில் பாரதியாரும் பங்கு கொண்டார். லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டார். அரசியலாரின் அடக்கு முறைச் சட்டத்திற்கு 'இந்தியா' இதழும் இலக்காயிற்று. ஆசிரியராகிய தாமும் கைது செய்யப்படலாம் என்று பாரதியார் கருதினார். அன்பர்கள் பலரின் வேண்டுகோள்களின் காரணமாகவும், தேசப் பணியை புதுவையிலிருந்துகொண்டே தொடர வாய்ப்பிருந்ததாலும் பாரதியார் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுவைக்குச் சென்றார். 'இந்தியா' இதழைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். இதற்கிடையில் இந்தியா இதழுக்குத் தொல்லை ஏற்பட்டது. மக்கள் உள்ளத்தில் நாட்டுப் பற்றினை ஊட்டும் அவ்விதழுக்கு பிரிட்டிஷ் எல்லைக்குள் தடை விதிக்கப்பட்டது. இதனால் பாரதியார் வறுமையில் வாடினார். துன்பங்கள் அவரைத் தொடர்ந்தன. இதனால் மனக்கசப்புற்று புதுவை விட்டு நீங்கிய பாரதியாரும் அவர் குடும்பத்தினரும் கடலூரில் கைது செய்யப்பட்டனர். அவர்க்கு உடல் நிலை சரியில்லாததால், அரசியலில் சிறிதும் ஈடுபடுதல் கூடாது என்ற எச்சரிக்கையுடன் விடுதலை செய்தனர். பாரதியாரா அஞ்சுபவர் !

'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை'

என்று அறை கூவிய கவிஞனுக்கு அச்சம் எங்ஙனம் ஏற்படும் ?

**பாரதியின் பாடல்களும் விடுதலை வேட்கையும் :**

பாரதியார் வீர உணர்ச்சி மிக்க பாக்களைப் பாடிச் சுதந்திரக் கனலை வளர்த்து வந்தார். அவர் தேசீயக் கருத்துகளைப் பாடி நாட்டில் மறுமலர்ச்சியை உண்டு பண்ணினார். தேசீயக் கருத்துக்களை அஞ்சா நெஞ்சுடன் எடுத்துரைத்து, தேசத்தில் மறுமலர்ச்சி யூட்டிய காரணமாகத் 'தேசீயக் கவி' என்று மக்களால் போற்றப் பெற்றார். சுதந்திர உணர்ச்சியை, விடுதலை வேட்கையைப் பிரதிபலிக்கும் பளிங்கே பாரதியாரின் 'தேசீய கீதங்கள்' என்ற கவித்தொகுப்பாகும். அவை தமிழகத்திற்குப்புதியஉணர்வையும், தமிழினத்திற்குப் புதிய கருத்தையும் கொண்டு விளங்குகின்றன. உயிர் நேயம், நாட்டுப்பற்று, விடுதலை வேட்கை, கடவுள் உணர்வு ஆகிய கோட்பாடுகள் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

பாரதியார் புதுவையிலிருந்த காலத்து,

'காணி நிலம் வேண்டும்' எனவும்

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே' எனவும்

பாடித் தம் உரிமை வேட்கையை நன்கு புலப்படுத்தியுள்ளார்.

'விண்ணி லிரவிதனை விற்றுவிட்டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ ?
'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ ?'

எனவும் பாடி நம் அடிமைத்தனத்திற்குச் சாட்டையடி கொடுத்துள்ளார்.

சுதந்திரப் பயிரை அவர் கண்ணீர் விட்டு வளர்த்ததாகக் கூறும் பான்மை மக்கள் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. அவர் 'எங்களுடைய சுதந்திர தாகம் என்று தணியும் ? எங்கள் அடிமையின் மோகம் என்று குறையும்? எங்கள் பாரத அன்னையின் கைவிலங்குகள் என்று போகும்? எங்கள் இன்னல்கள் என்று நீங்கும்?' என்று கதறி அழுதுள்ளது எவர் உள்ளத்தை உருக்காது? எவர் உரிமை வேட்கையைத் தூண்டாது? மக்கள்

உள்ளத்தில் தோன்றும் உரிமைவேட்கையை அஞ்சாமையாகிய வீரத்தால் வளர்க்க எண்ணிய அவர்,

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே !
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே !'

என்று வீர உணர்ச்சி ததும்பப் பாடியுள்ளார்.

சுதந்திர உணர்ச்சி அவர்தம் கவிதைகளில் கனிந்து விளங்குகின்றது. 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி' எனும் பாடலில் அவர் மிக உருக்கமாகத் தம் விடுதலை வேட்கையைப் புலப்படுத்தியுள்ளார். அதன் மூலம் அடிமை விலங்கில் கட்டுண்டு உறக்க நிலையிலாழ்ந்திருந்த பாரத நாட்டு மக்களை விழித்தெழச் செய்தார். சுதந்திரமடைய ஒற்றுமை இன்றியமையாததன்றோ! எனவே பாரதியார்,

'முப்பது கோடியும் வாழ்வோம்-வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்'

என்றும்,

'ஒன்று பட்டா லுண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'

என்றும் பாடி, நாம் ஒற்றுமையாய் இருக்க வேண்டுவதன் அவசியத்தைப் புலப்படுத்தியுள்ளார். பாரதநாட்டின் ஒருமைப்பாட்டிற்குத் துணைசெய்யும் வகையில் வாழ்க்கை முறையையும் பண்ட மாற்று முறையில்,

'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண் டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளு வோம்
சிங்க மராட்டியர்தம் கவிதைகொண் டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப் போம்
காசி நகர்ப்புலவர் பேசும்உரை தான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்;
ராசபுத் தனத்து வீரர்தமக் கு
நல்லியல் கன்னடத்துத் தங்கம்அளிப் போம்'

என்று பாடிச் சென்றுள்ள அவர்தம் கவிதைத் திறம் வியத்தற்குரியது. என்னே அவர்தம் நாட்டுப்பற்று ! இங்ஙனம் நாட்டு மக்கள் உணர்ச்சியைத் தட்டி விடுதலைப் போரில் ஈடுபடச் செய்ய அவர் இயற்றிய பாடல்கள் எண்ணற்றன. அவர்தம் உணர்ச்சி மிகும் பாடல்களால் வீறு கொண்டெழுந்து மக்கள், அடிபட்ட வேங்கையெனச் சீறி எழுந்து பாரதத்தின் அடிமை வாழ்வினை ஒழிக்க முற்பட்டனர். வெற்றியும் பெற்றனர். அன்னவர்தம் கவிதைத் திறத்தை, நாட்டுப்பற்றை வியந்து எழுத வார்த்தைகளேது ?

முடிவுரை

இத்தகைய கலியுகம் காணுக் கவிஞரை, நாட்டுப்பற்று மிக்க தலைவரை ஈன்ற தமிழகம் எத்துணை பேறு பெற்றது ! தமிழ் மக்கள் தாம் எத்துணை பேறு பெற்றவர்கள் ! பாரதியார் தமது முப்பத்தொன்பதாம் வயதிலேயே பூதவுடல் நீக்கிப் புகழுடல் பெற்றது தமிழகம் செய்த தவக்குறையே யாகும். ஆயினும், அவர் பாடல்கள், இவ்வுலகம் இருக்கும்வரை அவரது புகழ் பாடி நிற்கும் என்பதில் ஐயமில்லை. நாட்டுத் தொண்டினையே உயிர் மூச்சாகக் கொண்ட, 'நம் நாட்டினைப் பல வகைகளிலும் முன்னேற்ற வேண்டும்' என்ற குறிக்கோளுடைய தேசியக் கவி பாரதியாரின் கனவை நனவாக்க முழு முயற்சியுடன் ஈடுபடுவோமாக. அதற்குரிய திறனை இறைவன் நமக்கு அருள்வாராக !

தாரகை நடுவண் தண்மதிபோல்,
கவிஞர்களின் தலைவராகத் திகழ்ந்த தேசியகவி
பாரதியார் வாழ்க !

[ உயர்நிலைப் பள்ளி மாணவியர்க்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை. ]



# விடுதலைப் போரில் பாரதி

செல்வன் என். இராமசாமி, முத்தியாலுப் பேட்டைஉயர்நிலைப்பள்ளி, சென்னை-1

அது ஒரு காலம்—மாசறு பொன்னும் மரகதத் தமிழின் மாற்று மங்கியிருந்த காலம். நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டினர் நலிந்து நின்ற நேரம். தாலாட்ட ஆளில்லா மல்தவித்திடும் தத்தையைப் போலத் தாய் மொழியும், தாய்நாடும் அல்லலுற்று அவதியுற்ற நேரம். ஆம்! அந்த இருபதாம் நூற்றாண்டின் இருண்ட காலத்தே விடிவெள்ளி போலப் பாரதி தோன்றினுன்.

அவன் ஓர் அறிவுக் களஞ்சியம் ; ஆராய்ச்சிச் சுரங்கம் ; அறியாமை என்னும் இருள் மண்டிக் கிடந்த மக்களிடையே அறிவமுதை அள்ளித் தெளித்தவன். புயல் நடையிலே புரட்சிக் கவிதைகளை அள்ளி வீசியவன். அவன் ஒரு நாகரிகத்தின் சிற்பி. கருத்திற்குக் களிப்பூட்ட கவிதையைக் கையாண்டவன்.

இலட்சியப்பாதையில் புரட்சி நடை போட்ட இளந்தளபதி

எழ்மையால் தாழ்மையுற்று, இன்னலால் பின்னலுற்று நாடு அல்லலுற்று அடிமைப்பட்டுக் கிடந்தது. உணர்ச்சியும், எழுச்சியும் உண்டாக்கி மக்களின் அடிமைத்தனத்தை விடுவித்தாக வேண்டும். மக்களைத் தயார் செய்ய அப்பொழுது கவிஞர்கள் இல்லை. புலமை நடையில் எழுதிப் பிறருக்குப் புரியாமல் கற்பிப்போர் பலர் இருந்தார்கள். அந்தத் தருணத்தில் இலட்சியப் பாதையில் புரட்சி நடை போடுகின்ற இளந்தளபதியாகத் தோன்றினுன் கவிஞன் பாரதி.

விடுதலை வானில் வெற்றி முழக்கம் செய்த விடிவெள்ளி

ஆளப்பிறந்த நாட்டில் அடிமை வாழ்வு வாழும் நாயைவிடக் கடையாக நடத்தப்படுகிறோம் என்பதைப் பாரதி மக்களுக்கு எடுத்துக் கூறினுன். வாழ்ந்தால் முப்பது கோடியும் வாழ்வோம் ! வீழ்ந்தால் முப்பது கோடியும் வீழ்வோம் என்றும், எங்களில் ஒருவர்கூட அடிமை வாழ்வைச் சகியோம் என்றும் கொதித்தான் ; கொந்தளித்தான். பரிபூரணனுக்கு அடிமையாய் வாழ்வோம் ! ஆனால் பரங்கியருக்கு அடிமையாய் வாழக்கூடாது என்று விடுதலை உணர்ச்சியை ஊட்டினுன் பாரதி.

விண்ணி லிரவிதனை விட்டுவிட் டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ ?
மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ ?

என்று மிக அழகாக மக்கள் மன்றத்திலே தந்தான். விடுதலை வானில் வெற்றி முழக்கி விடுதலையானுன்.

பெண் அடிமை தீர விடுதலைக்குரல் எழுப்பிய பாரதிதாசன்

'பெண் அடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டின் மண் அடிமை தீர்தல் முயற்கொம்பே' என்று முழங்கிய பாரதியின் தாசன் பெண்களுக்கு அறிவைக் கற்பித்தால் இவ்வையகம் பேதைமை அற்றிடும் காணீர் என்று முரசு கொட்டுகின்றுன். வற்புறுத்திப் பெண்களைக்

கட்டிக்கொடுத்து வாழ்க்கையைக் கெடுக்கும் வழக்கத்தை வன்மையாகச் சாடுகின்றான், பாடுகின்றான்.

> பெண்ணுக்கு விடுதலையென் றில்லை என்றால்
> பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை

என்று பெண்களுக்காக விடுதலைக்குரல் எழுப்புகின்றான். இவ்வாறாகப் பெண் அடிமை தீர விடுதலைக் குரல் எழுப்பிய முதற்கவிஞன் பாரதியாகின்றான்.

**பொருளாதார விடுதலை**

பெற்ற சுதந்திரத்திற்கு உற்ற துணையாய் இருப்பது பொருளாதாரமாகும். பொருளாதார விடுதலை இல்லை என்றால் பொலிவுற்று விளங்க வேண்டிய வையத்தினுள்ளே நம் பாரதம் வளமுள்ள நாடாக ஆகாது.

நாடு வளமுற, ஏடு எழுச்சியுற, பாடு பயனுற, மற்ற நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ள வேண்டும். வர்த்தகத்தைப் பெருக்கி நாட்டை வளப்படுத்த வேண்டும். மேலைக் கடல்களிலெல்லாம் கப்பல்களை விட வேண்டும். இவ்வாறாக, பொருளாதார விடுதலைக்காகத் தேசிய கவிராஜ சிங்கம் பல துன்பங்களைப் பெற்றான்.

**நாட்டு விடுதலை—மொழி விடுதலை**

மற்ற மொழிப்பற்றுதல்களினாலும் நமது மொழியைப் படித்தால் பிழைப்பில்லாமல் இருக்கின்றது என்று நினைத்துக்கொண்டிருந்த காலத்தில் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும்,

> " செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
> தேன் வந்து பாயுது காதினிலே " என்றும்,
> " அள்ளும் சிலப்பதி காரம்என்றோர் மணி—
> யாரம் படைத்த தமிழ்நாடு " என்றும்
> " வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு "—

நெஞ்சை மொழியைப் பற்றியும் நாட்டைப்பற்றியும் பாடினார். இதிலிருந்து தாய்மொழிப் பற்றும் தாய்நாட்டுப் பற்றும் கவிஞனுக்கு (பாரதியார்) அதிகமாக இருந்தது என்று தெரிகிறது.

அன்னியன் ஆட்சியில் இருந்த பொழுதே இவ்வாறாக மக்களிடத்து தமிழ் மொழிப் பற்றை அதிகமாக்க மிகவும் பாடுபட்டிருக்கின்றார் பாரதி.

**கவியழகு**

பாரதியாரின் கவிதைகள் கனல் கக்கும்; மின்னலினும் வேகமாகப் பாயும்; இடியென முழங்கும்; கேட்போரின் உள்ளம் கொதிக்கும்; சுருங்கியிருந்த உள்ளங்கள் விரியும். கோழைகளின் உள்ளம் பரபரப்படையும். முதியோரை முட்டித்தள்ளும். இவ்வாறாக, பல கவிதைகளை இயற்றிப் பாரதியார் விடுதலைக்காகப் போரிட்டார். சிறு குழந்தையிலிருந்தே கவிதை இயற்றும் தன்மையைப் பெற்றார்.

> ' சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
> தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம் '

என்பதைக் குழந்தைகளுக்குச் சொல்வதைப் போல, குறுகிய மனம் உடையவர்களையும், குறுகிய உள்ளம் கொண்டோரையும் பார்த்துப் பாடுகின்றார், சாடுகின்றார். சாதியில் இழிவுடைய மனிதரென்போர் ஒருவருமில்லையென்று சாடுகின்றார்.

கவிஞரின் கவிதையில் எங்கு பார்த்தாலும் விடுதலை வேட்கை, வறுமையில் வாட்டம் முதலியவைதான் காணப்படுகின்றன. கடைசி வரையிலும் கவிஞர் விடுதலைக்காகவே பாடுபட்டார். கவிஞர் எப்பொழுதும் இறவாமல் தமிழ் இலக்கியத்தோடே ஒன்றியிருக்க வேண்டும். இதுவே என்றன் ஆசை!

**வாழ்க விடுதலை ! வாழ்க பாரதியார் !!**
**வளர்க பாரதியின் புகழ் !!!**

[உயர்நிலைப்பள்ளி மாணவருக்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை.]



# பாரதியின் ஜனநாயக உணர்வு

திருமதி கற்பகவாணி, மருத்துவக் கல்லூரி, சென்னை.

'அரசனில்லாது, தெய்வமேயரசா மக்கள் நலம் பேணும்' குடியரசு, பாரதி கனவில் கண்ட ஒன்றாகும். கவிஞர்கள் கனவு கண்டால் அது, பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போவதில்லை. சான்று, இன்று நாம் பெற்றுள்ள இனிய சுதந்திரக் கனியேயன்றோ?

பாரதி கனவு கண்டானெனில், எக்காலத்தில் கண்டான்? அடிமைச் சேற்றிலே நம் மக்கள் அழுந்தி, அல்லல்பட்டு, ஆற்றாது அழுது கிடந்த நாளிலே, சனநாயகம் என்றாலென்ன வென்று, ஒருசிலர் மட்டுமே ஓர்ந்துணர்ந்திருந்த அந்த நாளிலேயே, அடக்குமுறையின் ஆணி வேரைக் கிள்ளியெறிய முனைந்தான் பாரதி. அதுவே அவனது சனநாயக உணர்வைப் பறைசாற்றுகிறது. பார்ப்பானை ஐயரென்றும், வெள்ளைப் பரங்கியைத் துரையென்றும் பேசிப் பயந்து, அடிப்படை உரிமைகளையும் மக்கள் இழந்திருந்த காலத்திலே, அவரைத் துயிலெழுப்பும் பள்ளியெழுச்சியாக வருகின்றது, பாரதியின் சங்க நாதம்:

> ' நிகரென்று கொட்டு முரசே—இந்த
> நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
> தகரென்று கொட்டு முரசே—பொய்ம்மைச்
> சாதி வகுப்பினை யெல்லாம் !'

மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் மகத்தான ஆட்சி நம் இளைய பாரதத்தில் எழுச்சி பெற வேண்டும் என்ற அவாவினைப் பாரதியின் ஒவ்வொரு பாடலிலும் காணலாம். தேசியப் பாடல்கள் மட்டுமா, தோத்திரப் பாடல்களிலும் அவ்வுணர்வு ஊடுருவி நிற்கிறது. ஒப்பிலா மணியாய் ஒளிரும் காப்பியமாம் பாஞ்சாலி சபதத்திலும் அது பரந்திலகுகிறது. அடிமைகளாய் நாம் மயங்கி நின்ற கோலத்தையே, தருமனின் அடிமைக் கோலம் சித்திரிக்கிறதெனில் மிகையாகாது. இவ்விதம், எச்செயல் புரியினும், எதனைச் சொல்லினும், பாரதியின் நெஞ்சில் நிறைந்த உணர்வு ஒன்றே. அதுவே சனநாயகமென்னும் அரிய உணர்வு.

மக்களாட்சி ஏற்பட்டால் மட்டும் போதாதே; அது மலர்ந்து மணம் வீசுதற்குரிய வழி வகைகள் யாவை என்று, அன்றே சிந்தித்து வைத்திருக்கிறான் பாரதி; முதலாவது, உணவுப் பிரச்னை.

> தனியொருவனுக் குணவில்லை யெனில்
> சகத்தினை அழித்திடு வோம் !

> 'வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
> வாழும் மனிதருக் கெல்லாம்'

என்று உணர்ச்சி பொங்கக் கூவும் கவிஞன்,

> 'முப்பது கோடியும் வாழ்வோம், வீழில்
> முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்'

என்று உறுதியாகக் கூறிவிடுகிறான். அன்று முப்பது கோடிக்குச் சொன்ன சொற்கள், இன்று அறுபது கோடிக்கு மட்டுமல்ல, வங்கத்திலிருந்து வரும் அகதிகளுக்கும் பொருந்துமாறு அமைந்திருத்தல் வியப்பே.

அனைத்தினும் பெரியது மானவுணர்வு; மானமழிந்து உயிர் வாழேன் என்று வடக்கிருந்த மன்னரும், சிறையிலுயிர் நீத்த செம்மல்களும் நமக்குப் புதியவரல்லர். அத்தகைய உணர்வு செறிந்த நாட்டிலே, ஏழையென்றும், அடிமையென்றும், இழிவு கொண்ட மனிதரென்றும் பேசிக் குலத்தாழ்ச்சி உயர்ச்சி

சொல்லும் கொடுங்காலம் வந்தது. அது கண்டு கொதிக்கின்றது பாரதியினுள்ளம்.

'சாதி இரண்டொழிய வேறில்லை யென்று
தமிழ்மகள் சொல்லிய சொல்அமிழ்தம்'

என்கிறான். வளரும் பிஞ்சு நெஞ்சத்திலே, இவ்வுணர்வு ஊறினால்தான், சனநாயகம் இந் நாட்டில் தழைக்கும் என்கின்றான் :—

'சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்'

என்பது அவன் அமுதவாக்கு.

குல உயர்வு தாழ்வு வேற்றுமைகள் நீங்குதல் சனநாயகத்தின் அடிப்படைத் தேவை என்பது மட்டுமல்ல. ஆண், பெண் உயர்வு தாழ்வும் நீங்க வேண்டும். 'தாயடிமைப் பட்டால், மக்கள் அடிமைகளாயிருப்பது வியப்போ? அன்னையை விடுதலை செய்யுங்கள்; நம் அல்லல் யாவும் நீங்கும்' என்று சுவாமி விவேகானந்தரும் கூறியிருப்பது ஓர்க. எனவே, பாரதியும், மாதர் தம்மை இழிவு செய்து, தாதராக்கும் மடச் செய்கையைச் சாடுகிறான். மடவார் கற்பும், ஆண்மை வீரமும் ஒன்று கலந்த நிலை அமர நிலையாகுமன்றோ? எனவே, 'பெண்மை எழுக, வெல்க, வாழ்க, சரிநிகர் சமானமாகப் பொலிக' என்று கூத்திடுகின்றான்.

சுதந்திரத்தைப் பெறுவது வேறு ; பேணிக் காப்பது வேறு ; நம்முள்ளே இருந்த வேற்றுமைகளென்னும் துளைகளே, நம் சுதந்திரக் கப்பலைக் கவிழ்க்க வகை செய்தன. பின், கண்ணீர் விட்டு வளர்த்த சுதந்திரப் பயிர், வளர்ந்து, சனநாயகக் கனி தரும் பருவமெய்தியது. அக்கனியை, மடமையென்னும் அணில்கள் குதறுதவாறு காப்பது நம் பொறுப்பு. அதற்குத் தேவையானது, எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓரினம் என்னும் ஒற்றுமை உணர்வு. அந்த ஞானம் வந்தெய்துதற்கு அவசியமானது கலைவாணியின் பூசை என்கிறான் கவிஞன். ஆகவே அவன் வேண்டுவது, தேடு கல்வியிலாததோருரைத் தீயினுக்கிரையாக மடுத்தலே.

ஏட்டுக்கல்வி மட்டுமன்று, தொழிற்கல்வியும் வேண்டும், நம் இந்தியாவின் புகழை உயர்த்த,

'ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்,
ஆலைகள் வைப்போம் ; கல்விச் சாலைகள்
வைப்போம்'

வாருங்கள் என்று அழைக்கிறான்.

சந்திரமண்டலத்தியல் மட்டுமல்ல ; சந்தி தெருப் பெருக்கும் சாத்திரமும் தேவையானதே என்பது அவன் கருத்து.

தேசிய ஒருமைப்பாடு, சனநாயக மணி மண்டபத்தைத் தாங்கி நிற்கும் தூணாகும். அது சரிந்தால், சுதந்திரமில்லை; வளமில்லை; வாழ்வில்லை. பாரதியின் சனநாயக உணர்வு, இதை அவனுக்கு நன்கு சுட்டியிருக்க வேண்டும்; அதன் பலனாகப் பிறந்தது ஓர் அற்புதப் பாடல். கங்கை நதியோரம் விளைந்த கோதுமையைக் காவிரிப்புறத்து வெற்றிலைக்குப் பண்டமாற்றுச் செய்ய வேண்டுமாம். [காவிரி உனக்கா, எனக்கா என்று வழக்கிடச் சொல்லவில்லை அவன்.] சிங்க மராட்டியரின் கவிதைக்குச் சேரநாட்டுத் தந்தங்களைத் தாருங்கள் என்கிறான் ; [சிவசேனையமைத்துச் சிண்டைப் பிடித்துக்கொள்ளுங்கள் என வில்லை].

'முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது வுடைமை
ஒப்பி லாத சமுதாயம்உல
கத்துக்கொரு புதுமை.'

என்று கற்பனைச் சிறகடித்துப் பறக்கிறது கவிப்பூஞ்சிட்டு. இத்தகைய புதிய சமுதாயம் அமைந்துவிடின் பின், எல்லாரும் இந்நாட்டு மன்னர்களாய் ஏற்றமுற்றிருக்க என்ன தடை?

பாரதியின் சனநாயக உணர்வு மிகப் புதுமையானது—கருத்து வேகத்தில், எண்ணங்களின் ஆழத்தில். ஆனால் அதுவே மிகப் பழமையானதும் கூட; முன்னைப் பழமைக்கும் மூத்தது. ஏனெனில், உலகந் தோன்றிய நாள்தொட்டு, இவ்வுலகம் தீமையிருளில் மாய்ந்துவிடாதபடி, ஒவ்வொரு யுகத்திலும் நல்லவர்களின் நெஞ்சில் இறைவன் ஏற்றி வைக்கும் அருள் விளக்கமது. ஆகாவென்று எழுந்த யுகப் புரட்சிகளையெல்லாம் நடத்திச் செல்வதும் அவ்வுணர்வேயாகும்.



ஆனாலும், பாரதியின் உணர்வுகளிலே புதுமையின் மெருகும், பளபளப்புமுண்டு. ஏனெனில், அவை மனிதர்களுடன் மட்டும் நின்று விடவில்லை. உலகம் முழுவதையும் ஒன்றாயிணைக்கும் மாபெரும் கவிதைக் கனல், அவன் நெஞ்சில் மூண்டது.

'காக்கை குருவி எங்கள் சாதி, நீள்
கடலும் மலையுமெங்கள் கூட்டம்
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி
வேறில்லை'

'நோக்க நோக்கக் களியாட்டம்'

என்று ஆனந்தப் பள்ளுப் பாடும் அற்புதமான சமரச உணர்வு, காணுமிடமெங்கும் சக்தி தரிசனம் கண்ட ஞானியாகவும், யோகியாகவும் விளங்கியதாலேயே, பாரதி ஒரு தலை சிறந்த சனநாயகவாதியாகவும் திகழ்ந்தானென்பதில் ஐயமில்லை. மகாத்மா, ஆன்மிகத்திற்கும் அரசியலுக்கும் பாலமமைத்தார். பாரதி, இந்திய அரசியல், உலக அரசியல், இவற்றினூடே ஊடுருவி நிற்கும் ஜனநாயகப் பண்பைத் தன் சமரச சன்மார்க்க நெறியோடு இணைத்து, ஒரு புது நெறியைத் தந்து விட்டான். இது ஒரு இரசவாத வித்தையன்றோ? எல்லாரும் இந்நெறி பற்றி நடப்பின், பொய்ம்மை கொண்ட கலி வீழ்ந்து, பொற்காலம் உதயமாகும் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை; அப்போது நம்நாடு, தீரத்திலே படை வீரத்திலே, நெஞ்சின் ஈரத்திலே, உபகாரத்திலே உயர்ந்து; பாருக்குள்ளே நல்ல நாடாகத் திகழும். எனவே, விழித்தெழுவோம் ; இதுவரை உறங்கியது போதும். புதிய கோணங்கி கூறுவது போல,

'சாதி குறையுது சமரசம் வளருது
தொப்பை குறையுது சுறுசுறுப்பு வளருது
பழைய வைத்தியம் படீலென்று தெளியுது'

என்று பள்ளுப் பாடுவோம்.

முதற்கண், சிறந்த தேசபக்தனாக விளங்கும் பாரதி, தேசவிடுதலை பெற்று, ஒருமைப்பாட்டை வளர்த்தலோடு நிற்கவில்லை. எல்லா வகையிலும் தேசம் வளரவேண்டுமென்றெண்ணுகிறான். மகளிர் கல்வி, பொதுக் கல்வி, உணவுப் பெருக்கம், உறு தொழில் ஓங்குதல் ஆகிய அனைத்திலும் முழுமை பெற்ற நாடு, நாடா வளந்தரு நாடு, என்கிறது அவன் நெஞ்சம். இதுவே அவனது சனநாயகப் பண்பின் மேன்மைக்கு உரைகல்லாகும். இத்தகைய கவிஞனைப் பெற்று விட்டோம் என்று பேசுவதால் மட்டும் பயனில்லை. அதையும் அவனே கூறுகிறான் ;

வாயைத் திறந்து சும்மா—கிளியே—
வந்தே மாதரமென்பார்.

பாரதி கண்ட கனவை நனவாக்க, இந்திய நாட்டைத் தலைசிறந்த ஜனநாயகமாக உருவாக்க நாம் செய்ய வேண்டுவது.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை ... அத்தகைய ஜனநாயக உணர்வு நம்முள் வளருமாயின், நம் மனப் பண்பு வளரும். அதனால் விளைவது எல்லையிலா இன்பமன்றோ !

“ எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற்களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற்களிக்கும். ”

[ கல்லூரி மாணவியர்க்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை. ]

# பாரதியின் ஜனநாயக உணர்வு

(பு. குமாரசாமி, புகுமுக வகுப்பு, வைசியக் கல்லூரி)

"வட வேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து"

என, தொல்காப்பியரின் வழிவந்தபனம்பாரனர் புகழும் "நல்லுலகம்" என்ற சொற்றொடரைத் தனக்கே உரியதெனப் பறை சாற்றும் தமிழகத்தினிலே, இருபதாம் நூற்றாண்டின் கவிதை வானிலே இணையற்ற செஞ்சுடர் போல ஒளி வீசி, மூடக்கொள்கையாம் இருளை முறியடித்து ஓட்டும் பேரொளியாக வாழ்ந்து தேசீயக் கவியாக வீற்று, மகா கவியென மாறி, புதுமைக்கவியெனப் பொலிந்து, புரட்சிக் கவியாக விளங்கி, பொது மக்கள் கவியெனப் புகழ்மாலை சூட்டப்படும் முத்தமிழ்க் கவி பாரதி,

"ஆதிபகவன் முதற்றே உலகு"
எனத் தொடங்கிய வள்ளுவனார்க்கும்,

"அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணுங்களே"
என வணங்கிய கம்பனுக்கும் பிறகு,

"..............................எங்கள்
மாநிலத்தாயை வணங்குது மென்போம்"

என ஆரம்பித்து பாரதி நாட்டன்பில் திளைத்த நல்லிசைப் பாவலன் ஆனான்.

ஆங்கிலேயர் ஆட்சி எனும் இருளினிலே ஆழ்ந்து கிடந்த மக்களிடையே உரிமையின் தேவையினை, ஜனநாயகத்தின் உணர்வுதனைத் தட்டி எழுப்பி, ஜனநாயகத்திற்கான சக்தியின் தேசபக்தியினை, தெய்வ பக்தியின் இடத்தினிலே ஏற்றி வைத்துப் போற்றிநின்று, அதை உள்ளுலகம் அறிய பரப்பி நின்றான்.

"நாட்டன்பிலா நடைப்பிணம்" என "மனோன்மணீயம்" சுந்தரம்பிள்ளை கூறுகிறாராயினும்,

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே"
என, ஜன நாயக உணர்ச்சியினுக்கு முதல் வரிசை வரித்துக் கொண்டான் பாரதி.

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு"
என நாவுற நல்கி, நாட்டன்பை நன் மக்களிடம் நலமுறத் தட்டி எழுப்பி,

"சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம்"
என ஆவேசக் கனலையுமூட்டி,

"பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—
மிடிப்
பயங் கொள்ளுவார்; துயர்ப்பகை வெல்லு
வார்"
என ஜனநாயகம் பெற நம்பிக்கை ஊட்டுகிறான்.

ஜனநாயகத்தை எழுப்பி, அடிமைத் தனத்தில் வெறுப்பை மூட்டுகிறான்.

"புல்லடிமைத் தொழில் பேணி—பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணி
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் "தூ" வென்று
தள்ளி
வந்தே மாதரமென்போம்"
என்று, "இருட்டறையில உள்ளதடா உலகம்" என்ற பாரதிதாசனது சொல்லுக்கேற்ப, அடிமைத்தனம் என்ற இருளினிலே உழன்று வந்த மக்களுக்கு ஜனநாயக உணர்வுதனை நல்ஒளியென வழங்குகின்றான்.



"மானுட ஜென்மம் பெறுவதற்கு அரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலை தவற
உடன்படு மாறுளதோ ?"

என வினவி, ஜனநாயகம் என்ற மலரினை மணம் வீசி மலர வைக்க, சுதந்திர வேட்கையெனும் தென்றலினை வீசுகின்றான் பாரதி.

ஆழ்ந்த கடலுக்கடியில் உள்ள இருண்ட குகைகளில் கிடக்கும் வைரங்களாகவும், பாலைவனத்தின் வெப்பக் காற்றினால் தன் இளமையை இழக்கும் அன்றலர்ந்த அழகு மலர்களாகவும் இருக்கும் மக்களுக்கு, இன்றியமையாத பெரு வாழ்வினுக்கு, ஜனநாயகத்தினை, "எதுவும் நல்கி இங்கெவ்வகையானும்" வெல்ல முயலாமல், அற்ப சுகத்தில் மூழ்கிக் காலத்தைத் தள்ள முயன்றோரை நினைத்து,

"மண்ணிலின்பங்களை விரும்பிச் சுதந்திரத்
தின்
மாண்பினை இழப்பாரோ ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கி
னால்
கை கொட்டிச் சிரியாரோ?"
என வினவுகின்றான்.

பாரதி வேண்டிய, தூண்டிய ஜனநாயகம் மிகப்பெரிது ; அது "ஆரமுது", புளித்த கள் அல்ல ; அது "விண்ணில் இரவி", வெறும் மின்மினி அல்ல ; "கண்ணினும் இனியது" அந்த ஜனநாயகம். பாரதி கருத்தில் இச்சன நாயகம் "கண்ணீரும் செந்நீரும்" பாய்ச்சி வளர்க்கப்பட்டது.

பாரதி ஜனநாயகத்திற்காக, சுதந்திர தேவியை தொழுது, ஜனநாயக உணர்வோடு இரண்டறக் கலந்து, உடும்புப் பிடியென, உருக்கு உறுதியென நின்று, தளராத மனத்தினாலும், தெளிவான பேச்சினாலும், இனிமையான பாட்டினாலும், தனது இசை முழக்கத்தை "நெட்டை நெடு மரங்களுக்கும்", "பாலையில் பட்டுப்போன பசுஞ் செடிகளுக்கும் உணர்ச்சியால் துளிரும்படியும்" முழக்கினான்.

ஜனநாயகம் அற்ற நாட்டில்,

"ஆவியங்குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?

என, பார் அதிர பாரதி வினவுகின்றான். ஜனநாயகம் அற்ற நாடு நாடன்று : நடைப்பிணங்கள் திரியும் காடு எனக் கூறி, "கூற்றினுக்குயிர் கோடி கொடுத்தும்" ஜனநாயகப் பேற்றினைப் பெறுவதாகப் புரட்சிக் கனல் தெறிக்கும் குரல் கொடுக்கின்றான் பாரதி.

ஜனநாயகம், சுதந்திரம் எனும் "பேரறத்தினைப் பேணும் நல்வேலி" என்றும், "சோரவாழ்க்கை-துயர்-மிடி" ஆகிய காரிருட் படலங்களை கிழித்தெறியும் "சோதி" என்றும் வீரருக்கு "அமுது" என்றும் அமுதென இனிய தமிழ்தனிலே இசைக்கின்றான் பாரதி.

பேதமற்ற, ஜனநாயகம் பெற்ற, சமுதாயம் பொலிந்திடுதல் வேண்டுமென்று பல பாட்டுக்கள், கண்ணிகள், விருத்தங்கள் மூலம் ஜனநாயக உணர்வுதனைத் தக்க பண்களில் பாடுகின்றான். இந்திய நாட்டின் ஜனநாயகத்திற்கான சுதந்திரத்தையும், சுதந்திரத்திற்கான விடுதலையையும் எத்தர்கள் ஏய்க்காமல் ஏற்றது புரியும்படி பாடுகின்றான்.

இந்திய நாட்டின் ஜனநாயகம் விரும்பி, நாட்டன்பில் திளைத்து, சுதந்திர தேவியைத் தொழுது,

' பொய்மைதீர மெய்மை நேர
வருத்தமழிய வறுமை யொழிய
வையமுழுதும் வண்மை பொழிய
வேண்டுமடி யெப்போதும் விடுதலை......"
என விடுதலை முழக்கி, ஆனந்த சுதந்திரம் அமைத்தான் பாரதி.

ஜனநாயக யுகத்தினுக்கு வந்த பாரதி,

"நல்லறம்நாடிய மன்னரை வாழ்த்தி
நயம் புரிவாள் எங்கள் தாய்—அவர்
அல்லவராயின் அவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடுவாள்"
என ஜனசக்தியின் ஏற்றமிகு பண்புதனை ஏற்றிடவே இசைக்கின்றான்.

உண்மை ஜனநாயகத்தின் விளக்கத்தை,

"குடிமக்கள் சொன்னபடி
குடிவாழ்வு மேன்மையுறக் குடிமைநீதி
கடி யொன்றிலெழுந்ததுபார்—குடி அரசென்

றுலைறியக் கூறிவிட்டார்
அடிமைக்குத் தளையில்லை
யாருமிப்போ தடிமையில்லை அறிக,''

எனப் பாடி,

''எல்லோரும் ஓர்விலை; எல்லோரும் ஓர்நிகர்
எல்லோரும் இந்நாட்டு மக்கள்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்''

என்றுக்கும் நவீன சமூக ஏற்பாட்டை, ''ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடைமை''யை இயற்றுகின்றுன்.

பாரதி தான் படைக்க எண்ணிய இச்சனநாயகம் நன்முறையில் பொலிந்திடுதல் வேண்டுமென்று, பழமையை எதிர்த்துப் புதுமையை ஏற்று, மடத்தன முதலையின் வயிற்றைக் கிழித்து, சாதியினைப் பழித்து, சமதர்மம் அளித்து, பெண் விடுதலை பேணி, பித்தர் நெறி கண்டு நாணி, வர்க்கப் போரைப் போற்றி வம்பர் வாழ்வைத் தூற்றி ஒப்பில்லாத சமுதாயம் படைத்த ஒரு தனிப் புலவனும், சீரமைப்பு நாடிய தீங்கவிச் செல்வனும் ஆன பாரதி.

'உள்ளங்கள் ஒன்றுபட்டே உழைக்கும் எண்ணம் உள்ளுலகில் துளிர்த்துவிடின் கீழ் மேல் என்ற கள்ளமனப் போக்குகளும், காழ்ப்பு நாற்றக் கசிவுகளும் தாமாகத் தொலைந்து போகும்; நல்ல மனத்தார் அறிவினுலே நலிவுற்ருேர் முதுகெல்லாம் நிமிர்ந்து போகும்; வெட்டுறவு நீக்கி, தொட்டுறவு கொண்டு, பட்டுறவு கருகாமல் காத்திட்டால் சிங்காரித்த தேர் போலும் நம் திருநாடு பொலியும்''

எனத் தன் கருத்துக்களை பறையெனச் சாற்றுகின்றுன்.

ஜனநாயகம் பொலிவு பெற, பாரதி கவிபாடி,

''மண் பயனுற வேண்டும்
வானகம் இங்குத் தென்பட வேண்டும்
தொல்லை தீர்ந்துயர்வு கல்வி—வெற்றி
சூழும் வீரம் அறிவாண்மை
கூடும் திரவியத்தின் குவைகள்—இவை
நாடும் படிக்கு வினைசெய்து—இந்த
நாட்டோர் கீர்த்தி யெங்கு மோங்க
கலி சாடும் திறம்...................''

நமக்கு வேண்டும்.

பாரதி தன் ஜனநாயக உணர்வடங்கிய கருத்துதனைச் செப்பிவிட்டான்; ஆணையாக அல்ல; அன்பு வேண்டுகோளாக; அவன் வாழ்வினுக்கு அல்ல; நம் வருங்காலத்தினுக்காக; இலக்கைச் சொல்லி விட்டான்; அடைவது நம் பணி; குறித்து விட்டு விட்டான், வீழ்த்துவது நம் கடமை: காலத்தில் ஏற்றி விட்டான், கரை சேருவது நம் திறமை.

இலக்கை அடைந்து, பொருளை வீழ்த்தி, கரை சேருவது மழலை மாரு மதலியரும் பள்ளியிற் பயிலும் மாணவரும், கல்லூரி கற்கும் இளையோரும், கடமை குன்ரு ஆடவரும், மனை விளக்காம் மங்கையரும், ஆராய்ச்சி வல்ல புலவோரும், எழுத்தைப் போற்றும் முதியோரும், பாரதி தன் உணர்வுதனில் ஏற்றி வைத்துப் போற்றி நின்ற இச்சனநாயகம் போல் இப்பாரில் இல்லையென இசைக்கச் செய்ய தோளோடு தோள் சேர்த்து அரும் பணி ஆற்றுவார்களாக!

'' ஒப்புவமை யில்லாத பாரதக்கவி
பாரதிவாழ்க! அவன் படைத்த
ஒப்புரவாய் குடியரசும் உணர்ந்தோங்
கிடுக!''

[கல்லூரி மாணவருக்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை]



# புகழுடம்பில் நிலைத்த காந்தீயக் கவிஞர்



நாரண - துரைக்கண்ணன்

நாமக்கல் கவிஞர் என்ருல் தெரியாத தமிழர்கள் இருக்க மாட்டார்கள். காந்தி யுகத்தில், தமிழக மக்களிடையே காந்திய நன்னெறியைத் தம் ஒப்பற்ற கவிதைகளால் கால முழுதும் பரப்பி வந்ததால், இராமலிங்கம் பிள்ளையவர்கள் அத்தகைய தனிச் சிறப்பைப் பெற்றிருந்தார்.

சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல் என்ற பேரூருக்கு வரலாற்று வகையால் எத்தனையோ சிறப்புண்டு. சங்கீத உலகில் பெரும் புகழோடு விளங்கிய நரசிம்ம ஐயங்கார் (வி. வி. சடகோபன் போன்ற சங்கீத வித்வான்களுக்குக் குரு) நாமக்கல்லைப் பிரபலப் படுத்தினுர். அடுத்தபடி, இராமலிங்கம் பிள்ளையவர்களால் நாமக்கல் பிரசித்தி பெற்றது.

மகாகவி பாரதியாருக்குப் பின் சிறந்த கவிஞர்களென அறிஞர்களால் மதிக்கப் பட்ட கவிமணி, பாரதிதாசன் ஆகியவர்களிடையே நாமக்கல் கவிஞர் நடுநாயகமாகத் திகழ்ந்திருந்தார்.

ஓவியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய இராமலிங்கம், கவிஞராக, மாறி, நிலைத்த புகழ் பெற்றது வியந்து பாராட்டத்தக்க ஒன்று.

காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரக இயக்கம் நடத்தியபோது, 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற பாடலைப் பாடி, இராஜாஜி தலைமையில் வேதாரணியம் கடற்கரை நோக்கி உப்பு அள்ளச் சென்ற காங்கிரஸ் தொண்டர்களுக்கு ஊக்கமூட்டியதுதான் 'காந்தீயக் கவிஞர்' என்ற பெயரை அவருக்கு உண்டாக்கியது. சுதந்திர பாரதத்தில் தமிழ் நாடு சர்க்கார் ஆஸ்தான கவிஞர் என்ற அந்தஸ்தை அளித்ததும், பத்து ஆண்டுகளுக்கு மேல் தமிழக மேலவை யுறுப்பினராக இருக்கச் செய்ததும், மத்திய சர்க்கார் பத்மபூஷண் என்ற சிறப்புப் பட்டம் அளித்ததும் சுதந்திரப் போராட்டக் காலத்தில் தமிழ் மக்களுக்குத் தேசபக்தியை ஏற்படுத்த அவர் எழுதிய எண்ணற்ற கவிதைகளே காரணம் என்ருல் மிகையாகாது.

தேசிய ஒருமைப் பாட்டுணர்ச்சியைத் தம் சிறந்த கவிதைகளால் ஊட்டி வந்த நாமக்கல் கவிஞர் தமிழினப் பற்றை உண்டாக்கவும் தவறவில்லை. 'தமிழனென்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!' 'தமிழன் என்ருேர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்பன போன்ற பாடல்கள் தமிழ் மக்களின் உள்ளங்களில் அவருக்கு ஒரு தனி இடத்தைத் தந்திருக்கின்றன.

தேசியக் கவிகள் மட்டுமல்லாமல், 'அவனும் அவளும்' என்ற காவியமும், திருக்குறளுக்கு எழுதிய புத்துரை முதலிய நூல்களும் நாமக்கல் கவிஞருடைய நற்பெயரை என்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.

நாமக்கல் கவிஞர் நிறை வாழ்வு வாழ்ந்து, வாழ்க்கையில் பெற வேண்டிய சிறப்புக்களையும் செல்வங்களையும் பெற்று நன்கு அனுபவித்தே 85-வது வயதில் புகழுடம்பு எய்தியிருக்கிருர்.

காந்திய சகாப்தத்தில் தோன்றிய காந்தியவாதிகள், பாரதி பரம்பரையில் வந்த கவிஞர்கள் ஒவ்வொருவராக நம்மைவிட்டுப் பிரிந்து போய்க் கொண்டிருக்கிருர்களே என்பதுதான் நமக்கு வருத்தம்.

நாமக்கல் கவிஞரின் தேசபக்த வாழ்க்கை வருங்கால இளைஞர் சமுதாயத்துக்கு எடுத்துக் காட்டாக இலங்கும் என்பது திண்ணம்.

# தமிழருற்ற பழிதான் என்னே !

அமரர் நாமக்கல் கவிஞர்

படித்தறியா மிகஏழைக் கிழவ னேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டி
துளைமிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேண்டுமிந்த அடிமை வாழ்வை
இப்போதே இக்கணமே என்றென் றார்த்திங்கு
அடித்துரைத்தே ஆவேசங் கொள்வா னென்றால்
அப்பாட்டின் பெருமைசொல்ல யாரே வல்லார் ?

பாலொழுகும் சிறுகுதலை மகனைப் பார்த்து
'படையெடுத்தார் பகையாளர், மகனே ! நீபோ
வேலொழுகும் போர்க்களத்தில் வெல்வா யன்றேல்
வெம்படையை மருமத்தில் வாங்கெ'ன் றேவும்
சீலமிகும் பெண்மணிகள் திகழ்ந்த நாட்டைச்
சிற்றடிமைக் கொப்புவித்துத் தின்றீ ரென்று
தாலுமுது பறைசாற்றித் தமிழ்ப்பா வோதித்
தட்டியெழுப் பாரதிதான் கவிசெய் தானே !

அருமகனைத் தேர்க்காலில் அரைத்த வேந்தும்
பழியஞ்சித் தன்கையை அரிந்த கோனும்
தருமமிலைக் கோவலனைக் கொன்ற தென்று
தானறிந்த அக்கணமே சவமாய் வீழ்ந்த
பெருமையுள்ள திறல்வேந்தர் பின்னே வந்தீர்,
பித்தடிமைக் குற்றேவல் பிழைத்தீரென்றே
உருகிமனம் விரிந்துயரும் கவிக ளாலே
உணர்வளித்த பாரதியின் உரைதான் என்னே !

பாரிமுதல் சடையப்ப வள்ள லென்று
பாவலர்கள் நாவிலுறை பலபேர் வாழ்ந்து
சீரிலகும் தமிழ்மொழியின் இனிய ஓசை
திசையனைத்தும் போயொலிக்கச் செய்த நாட்டில்
ஊறியநற்சுவையொழுகும் கவிகளாலே
ஊக்கமிகத் தமிழ்நாட்டிற் குணர்வைத் தந்த
பாரதியார் மிகக்கொடிய வறுமை மேவப்
பார்த்திருந்த தமிழருற்ற பழிதான் என்னே !



## அமரர் நாமக்கல் கவிஞர்

அகிம்சைப் போருக்கு அளித்த
படைவீரர் எழுச்சிப் பாட்டு

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்

ஒண்டி யண்டி குண்டு விட்டிங்
குயிர் பறித்த லின்றியே
மண்டலத்தில் கண்டிடாத
சண்டை யொன்று புதுமையே ! (கத்தி)

குதிரையில்லை யானையில்லை
கொல்லுமாசை யில்லையே !
எதிரியென்று யாருமில்லை
எற்று மாசை யில்லதாய்

கோபமில்லை தாப மில்லை
சாபங் கூற லில்லையே !
பாபமான செய்கை யொன்றும்
பண்ணு மாசை யில்லையே ! (கத்தி)

கண்டதில்லை கேட்டதில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணியம் தான்
பலித்ததே நாம் பார்த்திட

காந்தி யென்ற சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே. (கத்தி)

# பாரதி மலருக்குப் பாராட்டுரைகள்

சென்னை பாரதியார் சங்கம் கழிந்த 22 ஆண்டுகளாக நன்கு இயங்கி வருகிறது. ஆரம்ப காலத்தைவிட ,தற்போது சில ஆண்டுகளாக இச்சங்கம் சுறுசுறுப்பாகவும், சிறப்பாகவும் செயலாற்றி வருகிறது. வருடா வருடம் பாரதியார் பிறந்த மாதத்தில் செப்டம்பரில் சென்னையில் விழா நடத்தி பாரதி இலக்கியத்தை ஆய்ந்து புதுமைகளைப் புகுத்தி வளர்ந்தோங்கச் செய்து வருகிறது. இத்தகைக்கு காரணமாக விளங்குபவர்கள் இச்சங்கத்தின் இப்போதைய பிரதம நிருவாகிகளாகிய சங்கத் தலைவர் தொழில் அதிபர் உயர் இலக்கிய அறிஞர் நா. மகாலிங்கம் அவர்களும், செயலாளர் பத்மஸ்ரீ கலைஞர் அவ்வை டி. கே. சண்முகம் அவர்களும் என்றால் மிகையாகாது.

தலைநகரிலும் நாடெங்கும் எவ்வளவோ சிறப்பான இலக்கிய மாநாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றில் பல அறிஞர்கள் சிந்திக்கத் தூண்டும் சிறப்பான சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார்கள். அவ்வுயரிய அறிவுச் செல்வங்கள் அம்மாநாடு முடிவோடு மறக்கப்பட்டு விடுகின்றன. இத்துர்ப்பாக்கிய நிலையை பாரதியார் சங்கத்தினர் மாற்றியமைத்துள்ளனர். ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் பாரதி மாநாட்டு நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் அனைத்தையும், சிரமம் எடுத்துத் தொகுத்து அழகான மலராக்கி அடுத்தாண்டு விழாவின்போது வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறு கழிந்த மூன்று ஆண்டுகளாக மூன்று பொக்கிஷங்களை வெளியிட்டுள்ளனர். இலக்கிய நண்பர்கள், பாரதி அன்பர்கள் ஒவ்வொரு வருடமும் இம்மலர்கள் அவர்களது மனைகளில் பாதுகாக்கப்பட வேண்டியனவாகும். அவ்வரிசையிலே இவ்வாண்டும் 'பாரதிமலர் - 1971', வெளிவந்துள்ளது. இதன் சிறப்பு பற்றிய சான்றுக்கு "கன்னியாகுமரி" தீபாவளி இதழில் வெளிவரவிருக்கும் 'காதற் கவிஞர் பாரதி' எனும் கட்டுரையைப் படித்து பார்த்துக்கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இம்மலர் வேண்டுவோர் பாரதியார் சங்கம், 139 B, லாயிட்ஸ் ரோடு, சென்னை - 86க்கு எழுதிக் கேட்டு உரிய விலையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விதமாக நாஞ்சில் நாடு பெற்றெடுத்த, தமிழ்க் கவிதையுலகில் 'கவிமணி' எனப் பட்டம் பெற்ற தேசிக விநாயகத்தின் கவிதைகளுக்குச் சிறப்புச் செய்ய இத் தமிழ் நாட்டில் ஒரு கூட்டமில்லையே ! வருத்தமாக இல்லை ?

**கன்னியாகுமரி**
*29-9-1971*

* * * *

1970 ஆண்டின் பாரதி விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. மத்திய துணை அமைச்சர் மாண்புமிகு கே. எஸ். இராமசாமி, தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், நா. மகாலிங்கம், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் ஆகியோர் 1970 ஆம் ஆண்டு பாரதி விழாவின்போது நிகழ்த்திய சொற்பொழிவுகள் இம்மலரில் இடம் பெற்றுள்ளன.

பாவேந்தர் பாரதிதாசன், இரா. நடராசன், நாரண - துரைக்கண்ணன், தமிழ்ச் செல்வி, சே. பீ. நைசாம் முகம்மது இஸ்மாயில், உடுமலை நாராயணகவி ஆகியோர் பாரதியார் மீது புனைந்துள்ள சிறந்த கவிதைகள் மலரில் சேர்க்கப்பட்டுள்ளன. அண்மையில் காலஞ்சென்ற பாரதி பக்தர்களான பரலி சு. நெல்லையப்பர், கே. பாலசுப்பிரமணிய ஐயர் ஆகியோர் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகளும் மலருக்கு மணமூட்டுகின்றன.

1970 பாரதி விழா நிகழ்ச்சிப் படங்கள் மலரின் அழகுக்கு அழகு செய்கின்றன, முந்தைய விழாவின் நிகழ்ச்சிகளை அடுத்த விழாவின் போது மலராக வெளியிடும் சிறந்த வழக்கத்தைக் கைக்கொண்டு தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டு புரியும் பாரதி சங்கத்தாரைப் பாராட்டுகிறோம்.

**செங்கோல்**
*17-10-71*

* * * *

அமரகவி பாரதியின் அருமை பெருமைகளைப் படம் பிடித்துக் காட்டும் பல்பல கவிதை, கட்டுரைகள் இடம் பெற்றுள்ள இம்மலரை மத்திய உள்துறை துணை அமைச்சர் ஸ்ரீ. கே. எஸ். ராமசாமி, உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ. எஸ். மகராஜன், உடுமலை நாராயணகவி, நாரண-துரைக்கண்ணன் ஆகியோரின் கைவண்ணங்கள் பொலிவுறச் செய்துள்ளன. இதன் விலை (நன்கொடை) ரூ. 1.

**சுதேசமித்திரன்**
*25-10-71*

* * * *

தமிழகத்தில் சுதந்திரதாகத்தை, கவிதை மூலம் ஊட்டியவர் பாரதியார். அவர் வாழ்வில் எத்தனையோ நிகழ்ச்சிகள் ! பாரதியாரைப் பற்றி நாம் நிறைய தெரிந்து கொள்ளவேண்டும். ஆனால் நமக்கு ஓரளவுக்குத்தான் தெரியும். பாரதியார் சங்கம் (சென்னை) வெளியிட்ட மலரைப் படித்தால் பாரதியாரின் முழு கருத்துக்களைத் தெரிந்து கொள்ளலாம்.

பாரதியாரின் அருமைத் தம்பியாக விளங்கிய பரலி சு. நெல்லையப்பரைப் பற்றிய கட்டுரை அருமையாக அமைந்துள்ளது. நெல்லையப்பர் தேசத் தொண்டுக்காகப் பிரம்மச்சாரியாக வாழ்ந்தார் ; கடைசி காலத்தில் கண் பார்வை இழந்து வருந்தினார் என்பதைப் படிக்கும்போது நம் கண்களும் கலங்குகின்றன.

மலரில் பாரதியாரின் பாடல்கள் ஆங்காங்கே இடம் பெற்றிருப்பது சிறப்பான அம்சமாகும். அற்புதமான கவிதைகளைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு அமைச்சர் கே. எஸ். இராமசாமி அவர்களின் பேச்சு, நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. பாரதி பாடல்களைப் புகுத்தி சுதந்திர பாரதம் எப்படி அமைய வேண்டும், அரசு எப்படி இருக்க வேண்டுமென்பதை அழகாகக் காட்டியுள்ளார். பாரதியின் தேசிய ஒருமைப்பாட்டினை அழகுறச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். தொழில் துறை, சாதிக் கொடுமை இப்படி பல வகையினைப் பேசியிருப்பதைக் காணலாம்.

உயர்நீதி மன்ற நீதிபதி மாண்புமிகு எஸ். மகராஜன் அவர்கள் பாரதியாரைக் "காதற் கவிஞர் பாரதி !" என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும். திரு. மகராஜன் அவர்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு ஆற்றிவரும் தொண்டினை நாம் அறிவோம். பிரெஞ்சு மக்கள் காதலை வளர்ப்பதை அழகுறக் காட்டியுள்ளார்கள். பாரதி, காதலியாக மாறி, காதலன் கண்ணனுக்குத் தூது விடுவதைப் பாரதியின் கவிதையிலே நமக்குக் காட்டி, அதன் நயத்தை விளக்கியுள்ளார்கள்.

பாரதியை ஆய்வு செய்த மூவரைப் பற்றி அழகான கட்டுரை ஒன்றுள்ளது. குயில் பாட்டினை 'வான் குயிலா'க மாற்றிவிட்டார், நாவலாசிரியர் திரு கு. ராஜவேலு.

சென்ற ஆண்டு மலரை வெளியிட்ட கல்வி அமைச்சர் மாண்புமிகு நெடுஞ்செழியன் அவர்கள் அருமையான உரை நிகழ்த்தியுள்ளார்கள். மனிதர்களை இனங் கண்டு 50, 60 ஆண்டுகளுக்கு முன்னே பாரதி கூறியிருப்பதை நயம்பட நிகழ்த்தியுள்ளார்கள். 'அன்ன சத்திரம் .... எழுத்தறிவித்தல்' என்ற பாரதியின் கருத்தை, கல்வி அமைச்சர் அழகாக நயமிக்க உரையில் தெளிவாக்கியுள்ளார்கள். புதிய வீதிகளுக்குப் பெயர் வைக்கும் போதும் தமிழ்ப் பெயரையே வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது, 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்ற பாரதியின் கனவை நனவாக்க அல்லவா ?

சிலம்புச் செல்வரின் தலைமையுரை "ஊர் சிரிக்க வாழாதீர்" என்பதாகும். அவர்கள் தலைமையுரையில், பாரதி சங்கத்தைத் துவக்கிய கல்கியை நினைவுக்குக் கொண்டு வருகிறார்கள். 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் வந்தவன் நான்' என்ற பாரதியின் கூற்றுப் புலனாகிறது. ஏகாதிபத்திய ஆட்சியின் கொடுமையினை, பாரதியின் வாயிலாகச் சிலம்புச் செல்வர் அழகாக விளக்கியுள்ளார். தேசியம் என்ற பயிரைப் பண்ணையை வளர்க்க எருவாய்ப் பயன்படுத்தப்பட்டன. தாய்மொழிப் பற்றும், பிரதேசப் பற்றும் என்பதைப் பல உதாரணங்கள் மூலம் சுட்டிக் காட்டுகிறார். 'அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு ?' என்ற பழமொழிகளைப் படைத்தவர்களை உடைத்தெறிந்தவன் பாரதி. குழந்தை இலக்கியத்துக்காக ஆத்திசூடி. பாரதியை நம் கண் முன் நிறுத்துகிறார் ம. பொ. சி.

ம. பொ. சி. அவர்களின் தலைமையுரை தமிழர்களைக் கட்டாயம் சிந்திக்கத் தூண்டும்.

பாரதியார் சங்கம் இவ்வளவு அரும்பணியாற்றி ஆண்டுதோறும் மலர் வெளியிடுகிறது என்றால் அதற்கு மூலகாரணம் சங்கச் செயலாளர் பத்மஸ்ரீ திரு. தி. க. சண்முகம், M. L. C. அவர்களேயாகும். அவர்களது உழைப்பு வீண் போகவில்லை என்பது மலரைப் பார்த்தாலே போதும். பாரதிமலர் என்ற உயர்ந்த மாளிகையின் அடித்தளமாக இம்மலரில் விளங்குகின்றார் பத்மஸ்ரீ தி. க. சண்முகம் அவர்கள்.

பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பல கவிஞர்கள் கவிதைகள் எழுதியுள்ளார்கள். கவிதைகளில் பாரதியின் பெருமை நன்கு தெரிகிறது.

இம்மலர் சிறக்க உழைத்த பாரதியார் சங்கத்தாரையும் குறிப்பாக மலர் சிறப்பாக அமைய உழைத்த தி. க. சண்முகம், M. L. C., திருவாளர் நாரண-துரைக்கண்ணன் அவர்களையும் பாராட்டவேண்டும்.

ஒரு குறை ....

உரைநடை இலக்கியம் ... பாரதியின் சிறுகதைகளைப் பற்றிய உரைக் கோவை இடம் பெறவில்லை. அடுத்த மலரில் இடம் பெறுமோ என்னவோ !

அழகான காகிதத்தில் மலிவான விலைக்கு அதுவும் ஒரு ரூபாய் நன்கொடையாக இவ்வரிய மலர் கிடைப்பது நமக்குப் பெருமையாகும்.

தீவிரவாதி
21-11-71

145482



செப்டம்பர் 10 முதல்
நடைபெறுகிறது

நாகேஷ் விஜயலலிதா
நடித்த

ஹலோ
பார்ட்னர்

நேஷனல்
ஒரு பகுதி ஏர்கண்டிஷன்
தாம்பரம்

போன் : 48255

ஏர்கண்டிஷன் 2-60, பால்கனி 2-20, முதல் வகுப்பு 1-45
இரண்டாம்வகுப்பு 0-90, மூன்றும் வகுப்பு 0-55

# அரியதொரு வாய்ப்பு!

200 க்கும் மேற்பட்ட பரிசுகள்

## ஒயிட் ஹார்ஸ் சோப் நிறுவனத்தினரின் ஒப்பற்ற பரிசுத் திட்டம்

ஒவ்வொரு ஒயிட் ஹார்ஸ் பார் சோப்புடன் ஒரு பரிசு கூப்பனை கேட்டு வாங்குங்கள்

முதல் பரிசு ஸ்கூட்டர்
இரண்டாம் பரிசு ரேடியோ கிராம்
மூன்றாம் பரிசு ரேப்ரிஜிரேடர்
நான்காம் பரிசு வாஷிங் மிஷின்
ஐந்தாம் பரிசு தையல் மிஷின்
ஆறாம் பரிசு டிரான்ஸிஸ்டர்

மற்றும் சைக்கிள், பிரஷர்குக்கர், கடிகாரம் போன்ற 200 இதர பரிசுகள்,

பரிசு திட்ட விபரங்கள் :-

ஜூலை 15ம் தேதி முதல் அக்டோபர் 15ம் தேதி வரை வாங்கும் ஒயிட் ஹார்ஸ் சோப்புகளுக்கே கூப்பன்கள் கொடுக்கப்படும். ஒரு கூப்பனோ, விரும்பினால் பல கூப்பன்களோ வாங்கலாம்.
கூப்பன்கள் அனைத்தும் குறிப்பிட்ட தேதியன்று நடுவர் முன்னிலையில் குலுக்கி எடுக்கப்படும்.

குலுக்கலில் எடுக்கப்படும் அதிர்ஷ்ட கூப்பன் எண்களுக்கு வரிசையாக அதற்குரிய பரிசுகள் அளிக்கப்படும்.
முடிவு அறிவிக்கப்பட்ட பின் பரிசு பெற்றோர் தங்களுடைய கூப்பன்களை கொடுத்து அதற்குரிய பரிசுகளை பெற்றுக் கொள்ளலாம்.

இந்த திட்டம் தமிழ் நாடு மாநிலத்திற்கு மட்டுமே.

இப்பரிசு திட்டத்தில் இந்நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் மற்றும் நெருங்கிய தொடர்பு உள்ளவர்களுக்கும் அனுமதி கிடையாது

பரிசு முடிவுகள் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்.

குலுக்கல் தேதி 30-10-1972

ஒப்பற்ற சலவைக்கு

**ஒயிட் ஹார்ஸ் சோப்**



தயாரிப்பாளர்கள்: நேஷனல் இண்டஸ்ட்ரீஸ், 220, T. H. ரோடு, சென்னை-81
ஸ்டாக்குகள் தேவையுள்ளோர் அணுகுக:
வாசுதேவா சேல்ஸ் கார்பொரேஷன் 10, P. V. ஐயர் தெரு, சென்னை-1




ARC

தமிழ்நாட்டில் முதன்முறையாக
டிராக்டர் டயர்களை முழுவட்ட
ரிட்ரெடிங் செய்து தருகிறோம்.

டிராக்டர் டயர்களை ரிட்ரெடிங் செய்து
பசுமைப் புரட்சியை லாபகரத்துடன்
வெற்றியடையச் செய்ய
வழிவகை செய்கிறோம்.

ஸ்கூட்டர் முதல் டிராக்டர் டயர் வரை
விஞ்ஞான முறையில் அமைக்கப்பட்டுள்ள
எமது தொழிற்சாலையில் சூபர்லோடி
மோல்டில் முழுவட்ட ரிட்ரெட்
செய்யப்படுகிறது.



## தி ஆனைமலைஸ் ரிட்ரெடிங் கார்ப்பரேஷன்

42, மவுண்ட் ரோடு, சென்னை-32.

போன்: 801200, 802926

உங்கள் கார்களுக்கான எல்லாவகை
ரிப்பேர்களையும் செய்வதற்கான
சிறந்த இடம்

## ஆனைமலைஸ் மோட்டார்ஸ்

42, மவுண்ட் ரோடு, சென்னை-2

பட்டுகளில் பிரபலமானவை

"ராசி" பட்டுகள்

உயர் ரக, அசல் பட்டுப் புடவைகளான
ராசிப் பட்டுப் புடவைகள், ஸில்க் ஸ்கார்ப்கள், டை-அன்ட்-டை
பட்டுப் புடவைகள், டூப்பியான் உடைத் துணிகள் ஆகியவை
இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் பிரபலமானவை

**ராதா சில்க் எம்போரியம் பிரைவேட் லிமிடெட்**


1, சன்னதித் தெரு, சென்னை-4.

சார்பு நிறுவனம் :

**ராதா சில்க்ஸ்**

தன் பில்டிங்ஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.

"ராதா சில்க்கின் ராசி உன்னத வாழ்வுக்கு ஆசி"




With the best compliments from:

# Indian Polythene Industries
# &
# R. Kuppuswamy Chetty & Son,

**17, Ramanan Road, Madras-1.**

Phone : 32429 Grams : Ramajanaka Telex : Arkejay-574

**Dealers in new and old gunnies, hessian cloth, jute canvas, jute twine, tarpaulin, polythene laminated hessian bags, high density polythene woven bags and polythene liners.**

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்"

எனப் பாடினார் பாரதி

பாரத நாட்டின் பல்வேறு மாநிலங்களையும்
இணைப்பது மட்டுமல்ல. அவர்களின் நெஞ்சங்களையும்
மகிழ்விக்கும் சேவையில்தான்
எங்கள் பணி நிறைவுறுகின்றது.

பாரதி பாடும் பாட்டின் பயன்படு சுவைபோல்
நெஞ்சில் ஆர்வமோடு உமது சேவைக்கு அஞ்சலித்து
அருகில் நிற்போம்.

# ABT பார்சல் சர்வீஸ்

(Prop: ABT பிரைவேட் லிமிடெட், பொள்ளாச்சி)

டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயமுத்தூர்-18.

A N. Mahalingam Group

# SAKTHI SUGARS LIMITED

Manufacturers of

High Quality White Crystal Sugar

and

Producers of

High Yielding Hybrid Seeds Certified

BY THE N.S.C.

Registered Office:
72, Sengupta Street,
Coimbatore-9.

Factory:
Sakthi Nagar P.O.
(via) Erode, R.M.S.

நலந்திகழ் மனையினில்
நறுமணம் கமழ்ந்திட
நயமிகு பத்தியை
நாடுக இன்றே!

விலைமிக மலிவு
விளைந்திடும் பொலிவு
அலையெனத் தவழும்
புகைதரும் நிறைவு!

கனித்தமிழ்ச் சோலையில்
மல்லிகை மணந்தரும் ஜாஸ்மின்
மயக்கிடும் மனத்தினை ஸ்வப்னா
பூஜையில் பொலிவுறும் லோபான்
புதுவித மணந்தரும் புஷ்பா
எவரும் விரும்பிடும் எமரால்ட்
எங்கும் புகழ்பெறும் டிலைட்

என
விதவிதமாக பலவகைப் பத்திகள்
வாங்கிட விரைவீர்! மகிழ்வினைப் பெறுவீர்!

# சோலை ஜாஸ் இண்டஸ்ட்ரீஸ்

உரிமையாளர்:
**பழனியப்பா எண்டர்பிரைசஸ்**
14, பீட்டர்ஸ் சாலை, சென்னை-600014.